
# பத்தினிப் பெண் வேண்டும்



## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✵✵✵

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✵✵✵

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பத்தினிப் பெண் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்
(தமிழ்நாட்டு அரசாங்கப் பரிசுபெற்ற ஆசிரியர்)

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை-14 திருச்சி-2 சேலம்-1

முதற் பதிப்பு: 1967.

விலை: ரூபாய் இரண்டு

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை-5.

# முன்னுரை

## விதி+வினை+தெய்வம்=யாமினி!

வாழ்க்கையின் அபூர்வமானதொரு கவிதை, பெண்!

அதனால்தான், மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திடவேண்டும் என்று பாடியிருக்கிறார்கள்.

வாழ்க்கையின் அதிசயமானதொரு பிரச்சினையும் அதே பெண்தான்!

ஆகையினால்தான், பெண் என்று பூமியில் பிறந்துவிட்டால் மிகப் பீழை இருப்பதாகவும் பாடி வைத்தார்களோ?....

ஆம்; ரசனைக்கும் சிக்கலுக்கும் ஒரே சமயத்தில் பாத்திரமாகிவிடுகின்றாள் பெண் எனும் பாத்திரம்.

பெண், வாழ்க்கையின் புதிர் ஆகும் பொழுது, அதே பெண், வாழ்க்கைக்கு ஒரு தத்துவம் ஆகிவிடுவதில் வியப்பில்லை அன்றோ?

இப்படிப்பட்ட சுற்றுச் சார்பில் வாழ்க்கை இயங்கும் போது—அல்லது, இயக்கப்படும் பொழுது, பெண்ணின் பின்னணியாக விதி—வினை—தெய்வம் ஆகிய சக்திகள் விளையாடத் தொடங்குகின்றன; விளையாட்டுக் காட்டவும் தொடங்குகின்றன! — எனவேதான், பெண்மை எனும் சக்தி ஒரு சோதனைக் களமாக மாறத்

தொடங்குகிறது. சோதனையை நடத்த எத்தனம் செய்யும் மனிதனும் ஒரு சோதனையாக மாருமல் தப்பவும் முடிவதில்லை !....

இத்தகைய விந்தைகள் மண்டிய இவ்வாழ்க்கையின் முடிவுதான் என்ன ? — இதுதான் இன்று வரை யாருக்கும் தெரியாத பரம ரகசியமாக இருந்துவிடுகிறது! —இல்லையென்ருல், ஸ்ரீமான் செந்தில் நாயகத்திற்கு மகிழ்ச்சியின் எல்லை தொட்ட ஓர் ஆரம்பமும், சஞ்சலத்தின் முனை எட்டிய ஒரு முடிவும் கிட்டியிருக்குமா ?— வசீகரமும் குரூரமும் கைகோத்த புதிர்க்கோளத்தின் தலைவியாக இக்கதையின் தலைவி யாமினி திகழ்ந்திருப்பாளா ?...

செந்தில் நாயகம், யாமினி, மோகனசுந்தரம் ஆகிய மூன்றே மூன்று உறுப்பினர்கள் சுற்றி வளைக்கும் இக்கதை தமிழ்ச் சாதியின் கதை— பிரச்சினைக்கு உரிய கதையுங் கூட!...

உங்கள் சிந்தனைக்குக் கூடுதலான வேலை தரக் காத்திருக்கும் இக்கதையின் தராதரம் பற்றிய தீர்ப்புக்குத்தான் நீங்கள் ரசிப்புப் பண்பின் நடுவர்களாக இருக்கின்றீர்களே !...

சென்ற ஆகஸ்டு என்னுடைய 'பூவையின் கதைகள்' தமிழக அரசின் பரிசினைப் பெற்றது. அம்மகிழ்வின் ஆர்வத் தடத்தில் வெளிவந்துகொண்டிருக்கும் நூல்களுள் ஒன்று இது.

''உலகம்'' விரும்பி வெளியிட்ட இக் கதை, இப்போது நூல் வடிவம் பெற்றிருக்கிறது. புகழ்கொண்ட நிறுவனத்தின் வாயிலாக இந் நாவல் வெளிவருவது என் மகிழ்வைப் பெருக்கு கிறது. அவர்கட்கு என் நன்றி.

பூவை மாநகர்
மார்ச், 1967

**பூவை. எஸ். ஆறுமுகம்**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | விதியின் யாமினி | .... | 1 |
| 2. | முகவரி இல்லை ! | ... | 7 |
| 3. | ஊட்டம் | ... | 14 |
| 4. | கூழைக் கும்பிடு ! | ... | 20 |
| 5. | பிறவிப் பூக்கள் ! | ... | 26 |
| 6. | ''நான் உன் வினை!'' | ... | 33 |
| 7. | சரவணப் பூந்தொட்டில் ! | ... | 39 |
| 8. | ''லவ் !'' | .... | 44 |
| 9. | பிரளயம் ஆன நெஞ்சம் | ... | 51 |
| 10. | மிஸ்டர் செந்தில் ! | ... | 58 |
| 11. | பிஞ்சுப் பழம் ! | .... | 64 |
| 12. | தெய்வமாய் மறைந்தாளோ ? | ... | 70 |
| 13. | அதோ, யாமினி !.... | ... | 75 |
| 14. | சோழிகள் மாறின....! | .... | 81 |

## பகுதி : ஒன்று

# விதியின் யாமினி

அது தபால் நேரம். அந்தக் கம்பெனியின் பகல் வேலை நேரத்தை மிகவும் உயிர்த் துடிப்புடன் இயங்கச் செய்து பழக்கப்பட்ட வேளை அது.

ஜெனரல் போஸ்டாபீஸில் பிரத்தியேகமாக வைக்கப் பட்டிருந்த பெட்டியில் குவிந்திருந்த தபால்களை ஒரு பையில் போட்டுக் குவித்துக் கட்டிக்கொண்டு வந்து கொட்டினான் ஆபீஸ் பையன். அப்புறம்தான் அவன் மூச்சைச் சம நிலைப் படுத்தி வெளியிடலானான். அவன் கடமை முடிந்தது. தண் ணீர்ப்பானையை நாடினான் அவன்.

அழகிய மேஜைமீது பரவலாகக் கூடிக்கிடந்த தபால் களை ஒரு முறை பொதுவான கண்ணோட்டம் செலுத்தி விட்டு, பதிவுக் குறிப்புடன் தன் கடமையில் ஈடுபட்டாள் குயில்மொழி. அவளுடைய பார்வை இடப்புறம் அடிக்கடி சாய்ந்து திரும்பிக்கொண்டிருந்தது.

டெலிபோன் மணி ஒய்யாரமான கம்பீரத்துடன் ஒலித்தது.

குயில்மொழியின் இடது கை தன் போக்கில் இயங் கத் தொடங்கியது. அதற்குள் பையன் வந்துவிட்டான். ரிஸீவரை' எடுத்தான்.

''ஹலோ!.. ..ம்....ஆமாங்க ஸார்...மங்களம்....கம் பெனிதான் ஸார்!...நானா? இந்த இடத்திலே ஆபீஸ்

பையன்...ஆபீஸ் பையன் இந்த மாதிரி அலுவல்களிலே ஈடுபடப் பிடாதின்னு! சட்டம் இல்லீங்களே?. .அம்மா பிஸியாய் இருக்காங்க...அவங்களுக்கு நான் ஹெல்ப் பண்றேன்....சரி, விஷயத்துக் கு வர்ரேன்....எங்க ஐயா வர்ற டயம் தான். வந்ததும் சொல்றேன்.. சரி..சொல்லுங்க..20032...ஆல் ரைட்!....வந்ததும் போன் செய்யச் சொல்லுறேனுங்க....இப்பவே ஸிஸ்டர்கிட்டே இதைச் சோர்ப்பித்துப்பிடுகிறேனுங்க. என் பெயரா?....ஏன் ஸார் அந்த வம்பெல்லாம்?...."

பையன் கடன் முடிந்தது. கையை உதறிக்கொண்டான். அவன் குயில்மொழியைப் பார்த்தான். அவள் கடிதங்களை வகைப்படுத்தி முடித்தாள். அவள் பையனை நிமிர்ந்து நோக்கினுள். வழக்கமான புன்னகையை அவள் விழிகள் ஏந்தியிருக்கவில்லை. லேசான கடுகடுப்பு இருந்தது.

"அக்காவுக்கு எம் பேரிலே கோபம் போல!"

"உன் பேரில் கோபமா? அதெல்லாம் இல்லே தம்பி! மணி என்கிறது அழகான-மணியான பேராச்சே!...உன் பேர் நல்லாத்தான் இருக்கு. ஆனு, உன்னுடை போக்குத் தான் நல்லாயில்லே! நீயோ புதுசு இந்தக் கம்பெனிக்கு!.... வாய்க்கு இவ்வளவு நீளம் கூடாது. நான் ரிஸீவரை எடுப்பதற்குள்ளே நீ முந்திக் கொள்றே!....சரி....சரி!....நல்ல நேரம், நீ போன் பேசறபோது, மானேஜரோ முதலாளியோ இல்லே!...."

வார்த்தைகளின் சூடு ஆறவில்லை.

அதற்குள் மணி குறுக்கிட்டு, "பெரியவுங்க இருந்திருந்தால், நான் அப்படியெல்லாம் நடப்பேனு ஸிஸ்டர்?" என்று ஆறுதல் மொழிந்தவன், மறுபடி தொடர்ந்து, "நீங்க பெரியவுங்க; அதுக்குச் சொல்லலே....இனி நான் ஜாக்கிரதையாய் நடந்துக்கிறேன், அக்கா. ஆமா!...." என்று முடித்தான்.

அவளது வலது கை இயங்கிக்கொண்டிருந்தது. பதிவுக் குறிப்பில் ஒரு முழுத்தாள் பூர்த்தியாகிவிட்டது அவள் கடிதங்களை அடையாளமிட்டுப் பிரித்துவைத்தாள். மானேஜர் உள்ளே நுழைவதைக் கண்டதும், மணியை விளித்தாள்.

வகை பிரிந்த தபால்களைத் தனித்தனியே எடுத்து நீட்டினாள். சிறுவனை அனுப்பிவிட்டு, அவள் ஆசனத்தில் அமர்ந்தாள். கண்ணாடித் தகட்டின் கீழ்ப்பக்கத்தில் இருந்த ஒரு கடிதத்தை அவள் கையில் எடுத்துப் பார்த்தாள். 'பெர்ஸெனல்' என்ற சிவப்பு எழுத்துக்கள் எச்சரிக்கையாக அமைந்திருக்கக் கண்டுதான், அந்த உறையை அவள் தனியே எடுத்து வைத்திருந்தாள். 'பாஸ் வந்ததும் பெர்ஸெனலாய் கொடுத்திடலாம்....ம்......பர்ஸனல் லெட்டர்...... இப்படித்தான் செய்யணும்!....'

கன்னிமனம் எண்ணி முடித்ததுதான் தாமதம். தாமதம் ஏதுமின்றி, கார்ச் சத்தம் எடுப்பாகக் கேட்கத் தொடங்கிவிட்டது.

அவள் கைச்சவுக்கத்தை எடுத்து முகத்தில் நாசூக்காக ஒற்றிக்கொண்டாள். அப்பியிருந்த பவுடர்த் தூள்களையும் சேர்த்து ஒற்றியெடுக்க, அவள் அப்படி ஒன்றும் ஞாபகமறதிக்காரி அல்ல!....

கடற்கரையிலிருந்து மின்சார வண்டி ஒன்று புறப்பட்டுக் கொண்டிருந்தது, மொட்டுப் பிரிந்த மலரின் மணம் போல!

அதோ, முதலாளி!....

சோர்வின் தளர்ச்சியை மறைக்க முயன்று, அம்முயற்சியைச் செயற்படுத்த முடியாத நிலையில், திருவாளர் செந்தில்நாயகம் உள்ளே நுழைந்துகொண்டிருந்தார்.

குமாரி குயில்மொழி நளினமாக எழுந்து நின்றாள்; வெகு நாகரிகமாக வணக்கம் செலுத்தினாள்; கோலம் செய்திருந்த செவ்வரதங்களின் இள நகை இன்னமும் மாறவில்லை; மறையவில்லை. உரிமையாளரின் தலை மறைந்தவுடன், அவள் உட்கார்ந்தாள். அவள் உட்காரட்டும் என்று காத்திருந்த மாதிரியாக, தொலைபேசி தொலை தூரத்திலிருந்து அலறியது.

"எஸ்....ஸ்பீக்கிங்....ம்....ஓ....எஸ்....பாஸ் வந்தாச்சு!..... இப்பதான்!....கொஞ்சமுந்தி நீங்கதான் பேசுனீங்களோ?...

சரி....சரி!....நீங்களே பேசுங்க... இதோ, கனெக்ஷென் கொடுக்கிறேன், ஸார்!" என்று கூறி முடித்தாள்; இணைப்புக்கு ஏற்பாடு செய்தாள். 'ஐயாவுக்கு உடம்பு சுகமில்லாமல் இருக்கிறப்பகூட இந்த ஆள் விடமாட்டார் போல இருக்குதே! ஓசியிலே ஒரு டெலிபோன் நம்பர் கிடைச்சிருக்கு; சில்க் ஷர்ட்டும், கும்பகோணம் வெத்திலையும் ஆளை மயக்குற பேச்சும் இருக்கிற மட்டும் இவருக்கு ஒரு குறைச்சலும் இல்லே!....அப்படித்தான் சொல்லிக்கிறாங்க!....மகேந்திரன்னு பேரை வச்சிக்கிட்டிருக்கார்!....என்னிக்கு புலிகேசின்னு நாமெல்லாம் அழைக்கிறதுக்கு நாள் நட்சத்திரம் பார்த்து வச்சிருக்காரோ?....ஊம்!....இந்த ஆள் யார்?...ஒரு நாளைக்கு அடையாளம் தெரிஞ்சுகிட்டு, நல்ல புத்தி கற்பிச்சுக் கொடுக்கவேணும்!....'

* * *

செந்தில்நாயகம் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, டெலிபோனில் பேச ஆரம்பித்தார். "ம்...பேசறது....ஓ....நீங்களா?...அடடே....நமஸ்காரம்.....வணக்கம்.....அப்படியா?.....பதினேழிலா?....ராத்திரிதானே?....ஓ.கே!...பாக்கியையெல்லாம் நாம் நேரில் மீட் பண்ணிப் பேசிக்கிடலாம்!....எஸ்....ரொம்ப தாங்ஸ்....எல்லாம் உங்க தயவுதான்!.....எஸ்....இட் இஸ்....ஷ்யூர்!....ம்!..."

மூக்குக்கண்ணாடியைச் சரி செய்துகொண்டார்.

பேச்சு முடிந்தது.

முழுக்கைச் சட்டைப் பொத்தான்களைப் பிரித்துவிட்டபடி, சுழல் நாற்காலியில் கொஞ்சம் அழுத்தமாகச் சாய்ந்தபடி உட்காரலானார் முதலாளி. மேல் விட்டத்தில் சுற்றியவாறிருந்த மின்சார விசிறி அளவான காற்றை அள்ளித்தெளித்துக் கொண்டிருந்தது. அவருக்கு அடிக்கடி உடம்புக்கு நோய் நொடி வந்துவிடுவதால், அப்படி வந்துவிடுகிற நோய் நொடிக்குக் குளிர்ச் சாதன வசதிக்கு உட்பட்ட அந்தச் சீதளம்

ஈடு கொடுக்க முடியாததால், 'ஏர்கண்டிஷன்' இயந்திரத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தார்கள்.

மேஜைமீது விரிந்தபடி கிடந்த 'ஹிண்டு' இதழ்களைப் புரட்டினார். சுதந்திரத் திருநாளின் வைபங்களை அப்புகைப் படங்கள் சித்திரித்திருந்தன. அவை எல்லாவற்றையுமே ஏதோ ஒரு வகைப்பட்ட புகைப்படலங்கள் மூடியிருந்ததைப் போல அவர் நினைத்துக்கொண்டார். அந்தப் படங்களிலே வழக்கம் போல நேருஜியைத் தேடினாரோ?—அவர் கண்கள் நீர் நிறைந்து விளங்கின. 'இந்தச்சமயத்திலே நேருஜி இருந்திருந்தால், இந்தப் பாகிஸ்தான்காரனும் சீனாக்காரனும் இவ்வளவு வாலை ஆட்டத் துணிந்திருக்க மாட்டான்!....ம்!....நம் பெருந்தலைவர் எல்லாவற்றையும் சமாளித்துவிடுவார்!' என்ற எண்ணம், அவருக்கு இதம் தந்தது.

வெளிக் கதவைத் தள்ளிக்கொண்டு அப்பொழுது மானேஜர் நுழைந்தார். டைப் செய்யப்பட்டிருந்த தாள்கள் சிலவற்றை ஏந்தி வந்திருந்தார். ''மங்களம் அண்ட் கோ'' வின் தொழில் விரிந்தது. ஆகவே, அதன் வெவ்வேறு சிறு அமைப்புகள் சம்பந்தப்பட்ட கடிதங்களில் மிகவும் அத்தியாவசியமானவற்றிற்கு அவர் கையொப்பம் இட்டார்.

மானேஜர் விடை பெற்றவுடன், உள்ளே அடியெடுத்து வைத்தாள் குமாரி குயில்மொழி. சரிந்து விழுந்த நைலக்ஸ் புடைவையை இழுத்துப் போட்டுக்கொண்டாள். முதலாளி தன்னை ஜாடையாகப் பார்ப்பதை உணர்ந்ததும், நாணப் புன்னகைப் பூக்களை மொட்டவிழ்த்துத் தன்னுடைய சிவந்த இதழ்களிலே தூவிவிட்டபடி, கொணர்ந்திருந்த அந்தத் தனிப் பார்வைக் கடிதத்தை மரியாதை மண்டிய பவ்யத்துடன் உரியவரிடத்திலே சேர்ப்பித்தாள். சடுதியில் அங்கிருந்து நகர்ந்தாள்.

ஊதுவத்தியின் நறுமணம் மிதந்தது.

இப்போது, செந்தில் நாயகம் தனித்து இருந்தார். ஆகவே, தனிப் பார்வைக்கெனக் காத்திருந்த அந்தக்

# 6

கடிதத்தை முன்னும் பின்னும் புரட்டிப் பார்க்கத் தொடங்கினர். உறையின் கையெழுத்துக்கள் அவருக்குப் பழக்கப்பட்ட மாதிரி தோன்றின. ஆனல் அனுப்புதல் பகுதி வெளியாய் இருந்தது அது ஏதோ ஒரு 'சஸ்பென்ஸ்' போல அவர் மனத்திற்குப் பட்டது. பெருமூச்சு விட்டவாறு, கை நடுக்கத்துடன் உறையின் முனையைக் கிழித்தார்.

அப்போது, காலத்தின் பனி மூட்டத்தைக் கிழித்தவாறு ஓர் அழகியின் உருவம் அவரது நெஞ்சின் அடித்தளத்தில் விளையாடத் தொடங்கியது. 'யாமினி!' என்று அவர் தம்முள் முணுமுணுத்துக்கொண்டார். அவரது உடலும் உள்ளமும் ஏன் அப்படிப் படபடத்துத் துடிக்கின்றன?..

யாமினியே விதியாகவும், விதியே யாமினியாகவும் அவருள் இயக்கம் பெற்றதன் விளைவாகத்தான், அவர் அவ்வாறு சிலையாய் மலைத்துவிட்டாரோ?...

# பகுதி: இரண்டு

# முகவரி இல்லை!

செந்தில் நாயகம் சுயப்பிரக்ஞை அடைவதற்குள், காலத்தின் கைப்பிடியிலிருந்து நிமிஷங்கள் சில நழுவி ஓடிவிட்டன. அவர் பெருமூச்சைப் பிரித்த வண்ணம், வழிந்த வேர்வை மணிகளைக்கூட வழித்துவிட நினைவற்று, அப்படியே வீற்றிருந்தார்.

மீண்டும் விநாடிகள் சில ஊர்ந்தன. கைக்குட்டையை உதறி எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

பரவி வந்த வாசனைத் திரவியத்தின் சுகந்த நெடி அவரது நாசியை இதப்படுத்தத் தவறவில்லை. அச்சூழல் அவருக்கு இப்போது ஆரோக்கியமான நிலையை அமைத்துக் கொடுத்திருக்கக் கூடும். அமைதி பூத்த உள்ளத்தின் பிரதிபலிப்புப் போல், அவரது முகம் விளங்கியது. ஆவலின் தூண்டுதல் மேலிட, கிழிக்கப்பட்ட உறையினின்றும் கடிதத்தைப் பிரித்தார் அவர். கடிதத்தின் முகப்புப் பிரிவில் இருந்த அந்தப் பெயரைப் பார்த்தவுடன், அவரது உள்ளம், உடல் இரண்டுமே ஒரு முறை குலுங்கி அதிர்ந்து செயலற்றுப் போய், மீண்டும் இயக்கம் பெறலாயின. கண்களை இறுக மூடினார். ‘நான் நினைச்சது கரெக்ட்!....’ நினைவு முடியவில்லை. அதே போல, அவருள் எழுந்த அதிர்ச்சியும் முடியவில்லை!

சுவர்க் கடிகாரம் பத்து முறை ஒலித்தது; ஓய்ந்தது. பகல்செய்வோனின் இளம் பொற்கிரணங்கள் கடிகாரத்தின் கீழ் வட்டத்தை வளைத்திருந்தன.

# 8

கடிகாரத்தின் துடிப்புச் சத்தம் அவருடைய இருதயத்தின் துடிப்புப் போக்கைக் கூடுதலாக்கி விட்டது போலும் !

நெருங்கி இறுகிய விழிகளின் பிணைப்பு விலகிற்று. 'முருகா !' என்று தம்முள் முனகியவராக, குவிந்த கைகளை முகத்திற்கு அணை கொடுத்த வண்ணம் வீற்றிருந்தார் அவர். பிறகு, கைகளை விலக்கிக் கொண்டார். 'குஷன்' மெத்தையைச் சீர் செய்தார். நன்றாக வசம் பார்த்துக் குந்தினார். கண்கள் இரண்டும் மேல் நோக்கி அலைந்தன. அப்போது, அவர் பார்வையில் தினம் நூறு தடவை பட்டு விலகும் அந்தப் படம் இப்போதும் தென்பட்டது. 'மங்களம் !' என்று அவரது இதயம் அழைத்தது. அவ்வழைப்பில் இன்பம் மணத்தது; பாசம் கட்டவிழ்ந்தது; ஆசை அழகு காட்டியது.

மேஜைமீதிருந்த கடிதம் படபடத்தது. அதன் லேசான படபடப்பு அவரது நுட்பமான மன உணர்வைத் தொட்டிருக்குமோ ?—ஆம்; உணர்வுகள்தாம் மனித மனத்தை ஆளுகின்றன. அந்த மனம்தான் மனிதனின் 'விதி'யாகவும் அமைகின்றது !

எதிர்ப்புறம் மேய்ந்தன நேத்திரங்கள்.

கருணைப் புனித வள்ளலாம் புத்தர்பிரான் இருந்தார்.

வந்திருந்த அக்கடிதம் கைகளிலே அணைந்தது.

அணைத்திருந்த முத்துச்சுடர் ஒளி ஏற்றப் பெற்ற பாங்கினிலே, அவருள் ஒருவகை வெளிச்சம் ஊடுருவிப் பாய்ந்தது. அந்த வெளிச்சத்தின் விடிவிளக்குப் போல, அவருள் அந்தப் பெயர் ஒளிர்ந்தது. பிரிந்த கடிதத்தைப் பிரித்தார். 'யாமினி....!' என்ற பெயர் அழகின் அந்தமாக ஒலித்தது. தம்முள் அழைத்துக்கொண்டார். உச்சரித்த உதடுகள் மணத்தன.

ஆம்; மணம் ஊட்ட வல்ல பெயர் அது !....

செந்தில் நாயகம் பெயரின் உருவத்தை எண்ணமிட்டார். நெஞ்சு இனித்தது. மறுகணம் துடித்தது. அகல விரிந்த அக்கயற்கண்கள் கலங்கிச் சரிந்தன. 'யாமினி, உன் இருப்

பிடத்தைக் குறிக்காமல் ஏன் இப்படி என்னைப் பழிக்குப் பழி வாங்குகிருய் ? உன்னுடைய இந்தச் சூதும் சூட்சமமும் தான் விதியின் விளையாட்டா ? யாமினி !....மை டியர் ட்ரீம்!....'

கனவுகண்டு விழிப்பவராகத் திடுக்கிட்டு விழித்தார், அவர் !

மறுமுறையும் யாமினியின் கடிதம்தான் அவரது மனத்தை ஒத்து ஊசலாடிக் கொண்டிருந்தது.

எங்கிருந்தோ, ஏதோ ஒரு பாட்டு காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது.

உன்னிப்புடன் கேட்டார்.

இளமையின் கட்டமைந்த நுழைவாசலில் செந்தில் நாயகம் போய் நின்ருர். உடன் நின்றவள் பெயர்தான் : யாமினி !....'பாரதி எவ்வளவு மனக்கவர்ச்சி மிகும்படி பாடி யிருக்கிருர் ! அன்றைக்கு என் நிழலாக யாமினி என் பக்கத்தில் இருந்தாள் ! பாட்டுக் கவர்ந்திடவே அங்கே ஒரு பத்தினிப் பெண் வேண்டும்' என்ருன் பாவலன். சரியான நோக்கம்தான் ! எனக்கும் யாமினி இருந்தாள், பாட்டின் பாட்டாக !—பத்தினிப் பெண்ணுக !....என் மனத்தைத் திறந்து பார்த்தவள் யாமினி. என் நிலையைப் பாரதியின் இப்பாடலுடன் ஒப்புநோக்கிச் செப்பினேன் !...அவள் 'ம்' கொட்டினுள்....குறு விழி மயக்கி, கோலநகை தளர்த்தி, எழிலார் நெஞ்சுயர்த்தி 'ஆம்' போட்டாள். நான் அக்கனவை—அந்நினைவை எப்படி மறப்பேன் ?....ஆனுல் நடந்தது....? எங்கே என் யாமினி ?.... எங்கே என் கனவு ?....ஐயோ! ....நான் பாவி !....'

தொடர்ந்து அவரது சித்தம் செயற்பட ஒப்பவில்லை. மண்டை வலித்தது. அவருள் எழுந்த அச்சம் அவரைக் காத தூரத்துக்கு விரட்டியடித்தது. அவரைக் காக்க ஒப்பாதது போல அவரது மனச்சாட்சி விழித்தது. அவர் பயந்து எழுந்தார். எதிரில் இருந்த மங்களத்தின் சிரித்த முகம் அப்பொழுது அவருள் பாலே வார்த்தது. மனம் அமைதி கண்டது.

சட்டைப்பையிலிருந்து சிகரெட் பெட்டியை எடுத்து உதறினார். எஞ்சியிருந்த சிகரெட் பற்றி எரிந்தது. புகைந்தது. புகையை வெறியுடன் இழுத்து இழுத்து ஊதினார்.

இனி. அவரால் அக்கடிதத்தை—யாமினியின் அந்தக் கடிதத்தைப் படிக்க முடியுமோ?—படித்தார்.

ஸ்ரீ செந்தில் நாயகத்திற்கு,

இதற்குள் என்னை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென்றே கருதுகிறேன். ஏனென்றால், நான் தங்களை இதுவரை மறக்கவில்லை. என் உயிர் உள்ளவும் மறக்கவும் முடியாது!

இத்தகைய ஒரு நிலைக்கு—முடிவுக்கு உகந்த 'பெருமை' உங்களையே சாரும்.

காலம், நாட்களுடன் ஓடிப் பிடித்து விளையாட, நீங்கள் மகிழ்ச்சியுடன் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிருக்கும் பொன் மயமான நேரமாக இது இருக்கும்; அப்படித்தான் இருக்கவும் வேண்டும், உங்களுக்கு!

ஆனால் என் நிலை....என் முடிவு....என் கதி—இவற்றைப் பற்றி நீங்கள் ஏன் சிந்தித்துப் பார்க்கப் போகிறீர்கள்? அப்படிப் பார்க்கும் பக்குவம் இருந்திருந்தால், நீங்கள் என்னுடைய 'விதி'யாக ஆகி, 'வினை'யாக மாறி விளையாடியிருப்பீர்களா?

தெய்வம் கொடுத்த இந்த நெஞ்சத்தில்தான் தெய்வமும் உறைகிறது!—ஆனால் உங்கள் இதயம்....?

திரும்பத் திரும்ப இத்தனை காலமும் நான் உங்களுக்குத் தவறாமல் இம்மாதிரி கடிதங்கள் அனுப்பி வருகிறேன். என் கடிதங்களைப் படிக்கும் நேரங்களிலாவது, என்னைப் பற்றி நினைத்து, எனக்காக அனுதாபம் கொள்ள உங்களுக்கு நேரம் எங்கே இருக்கப் போகிறது? உங்களுடைய 'திரு விளையாடல்'களுக்கேதாம் உங்கட்கு நேரம் போதாதே!....

காலேஜ் நாட்களிலே நீங்கள் விவாதம் செய்தீர்கள், 'விதி என்பது மனிதனை வலியச் சுமந்து கொண்ட ஒரு சுமை-ஏதோ ஒரு சுமை!....' என்று!

இப்போது, உங்கள் கருத்துக்கு நானே உதாரணம் ஆகி விட்டேனா ?

**நான் வலியச் சுமக்காமல், நீங்களாகவே வலியவந்து என் பேரில் சுமையாக வந்து சுமந்து விட்ட 'விதி' நீங்கள் !**

இல்லையென்றால், என் கதை ஏன் இப்படி ஆகிறது ?—

ஐயோ, தெய்வமே !

தெய்வமே, ஏன் என்னைப் படைத்தாய் ?

தெய்வமே, நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன் ?

தெய்வமே, என் கண்களுக்கு இந்தச் செந்திலை ஏன் காட்டினாய் ?....

விதியே ! வினையே ! உங்களை நன்றாகப் பயன்படுத்தி விட்டாரே இந்தச் செந்தில் நாயகம் !

ஆம் !....

மிஸ்டர் செந்தில், ஒன்று சொல்லுவேன்: வழக்கமாக நான் என்னுடைய எல்லாத் தபால்களிலும் சுட்டிக் காட்டும் வாழ்வின் நியதியை—சிருஷ்டிப் புதிர்த் தத்துவத்தின் ஒரு விதியை—நிர்ணயிக்கப்பட்ட ஒரு சட்டத்தை மீண்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன் ; 'வினையைப் பயிர் செய்தவன், வினையை அறுவடை செய்யாமல் தப்பவே முடியாது !'

மறந்து விடாதீர்கள் !

இந்த இடம் ரத்தக்கறை படிந்திருக்கிறதேயென்று அப்படிப் பார்க்கின்றீர்கள் ?—ஆம்; இது என் ரத்தக் கண்ணீர் சிந்திய இடம்.

உங்களுக்கு இதைப்பற்றி ஆராய நேரம் ஏது ? மனம் ஏது ?

நீங்கள் நிதி மிகுந்த செல்வந்தர்.

ஆனால், உங்கள் நீதி !

அது உங்களைப் பல்கிப் பெருகி வாழ வைத்து வருகிறது.

இல்லையா ?....

ஆம்: பார்க்கப் போனல், வாழ்வு என்பதே ஒரு 'ஹம்பக்' தானே ?

நீங்கள் ஒரு முறை என்னிடம் மேற்குறித்த விதமாக வாழ்க்கையை விமரிசித்தீர்கள் !

இப்போது, அதற்கு ஓர் உதாரணம் ஆகிவிடத்தான் இப்படி நீங்கள் என்னுடைய 'விதி' யாக ஆனீர்களா ?

என் கேள்விக்குப் பதில் சொல்லும் காலம்—சொல்லி ஆகவேண்டிய காலம் இனி வெகு தூரத்தில் இல்லை !...

முகவரி : இப்படிக்கு,

அபலை "யாமினி"

கடிதத்தை மடித்தார்.

'முகவரி'யின் இருப்பிடம் 'காலி'யாக விடப்பட்டிருந்த முடிவே செந்தில் நாயகத்துக்குப் பேரதிர்ச்சியாகத் தோன்றியது. அதுவே தன் விதியாகவும் பட்டது. 'யாமினி ! நீ என்னை பழைய செந்திலாகவேதான் இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறாய் !...ஆனால் உனக்கு நான் செய்த பாவத்துக்கு நித்த நித்தம் நான் அனுபவிக்கும் நரக வேதனையை நீ எங்கே அறியப் போகிறாய் ?...உன் மனக் கொதிப்பும் வயிற்றெறிச்சலுந்தான் என்னை இப்படி ஆட்டிப் படைத்து வருகின்றனவே ?....யாமினி ! நீ உன்னுடைய இருக்கையின் விலாசத்தை ஏன் எழுதாமல் விட்டாய் ? நான் செத்துச் செத்துப் பிழைக்கும் தண்டனை போதாதா ?....ஐயோ !.... கடவுளே....செந்தில் குமாரா !...'

அப்போது, அவர் திரும்பவும் புது சிகரெட் டப்பாவைப் பிரித்துப் பற்ற வைத்தார். அவரது நெஞ்சிலும் நினைவிலுமாக அது தருணத்தில் மங்களமும் யாமினியும் சுற்றிச் சுழன்று ஆல வட்டம் இட்டுக்கொண்டிருந்தார்கள் !

நேத்திர மட்டத்தைத் துறந்து புறப்பட்டது கண்ணீர்ச் சரம்.

# 13

நெஞ்சு வலித்தது.

புகைச்சல் இருமல் வந்தது.

அரைக்கணம் கழிந்திருக்கலாம்.

'ட்ரங்கால்' ஒன்று அவருக்குப் பங்களூரிலிருந்து வந்தது. செய்தியை வாங்கிக்கொண்ட செந்தில் நாயகத்தின் உயிர்த் துடிப்பு துரித கதியில் அடித்துக்கொண்டது. 'மங்களம்.... மங்களம்....' என்று அவர் தம்முள் வேதனையுடன் பரிதாபமாகச் சொல்லிக்கொண்டார்.

சுடுநீர் ஊற்றெடுத்தது.

"மங்களத்துக்கு உடல்நிலை கவலைக்கிடம்!"

இது செய்தி!

## பகுதி : மூன்று

## ஊட்டம்

பூரணத்துவம் பெற்ற அழகான அமைதிக்கு அந்தப் பங்களாதான் பிறப்பிடம் என்று சொல்லும்படியாக, அங்கே அப்பொழுது அத்துணை அமைதி அவ்வளவு அர்த்தத்துடன் கோலோச்சிக் கொண்டிருந்தது. அது மட்டுமின்றி, அப்பெரு மனைக்குச் சூட்டப்பெற்ற 'மங்கள விலாசம்' என்னும் பெயரும் சேர்ந்து, அச்சூழலின் சாந்தியை இரட்டிப்பாக்கிக் கொண்டிருந்தது.

அந்திப் பொழுதின் சௌந்தர்யமே அம்மனைக்கு வாய்த்திட்ட உபாசனைப் பொருள்போன்று, அவ்வளவு பவித்திர மான—மங்களகரமான அழகுக் கவர்ச்சியுடன் விளங்கியது.

இத்தகைய இயற்கையின் இன்ப நுகர்ச்சி கண்களில் படிந்ததே தவிர, கருத்தில் படியவில்லை. படிந்திருந்தால், செந்தில்நாயகம் ஏன் இப்படித் தவித்துக்கொண்டிருக்கப் போகிறார் ?

புரண்டு புரண்டு படுத்தார் அவர். அவருடன் அவரது நெஞ்சத்து எண்ணங்களும் புரண்டு புரண்டு படுத்தன.

சுவரின் கடிகாரம் தொங்கியது. அது மணி காட்டுவதுடன் நிற்காமல், தேதியையும் காட்டவல்லது. செந்தில் நாயகத்தின் விழி விரிப்பில் படர்ந்த அத்தேதி அவருக்கு அயர்வைத் தந்திருக்க வேண்டும். காலத்தின் நடந்த கதை அவருள் மன உளைச்சலை விளைவித்திருக்கக் கூடும்.

மதுவைச் சுவைத்துவிட்ட லட்சிய வெறிப்பூர்த்தியோடு வண்டு பறந்தோடுமே, அப்படி அல்லவா காலத்தின் பிடியி னின்றும் ஆறு தினங்கள் நழுவிப் பறந்தோடிவிட்டன!

'ட்ரங்கால்' செய்தி கேட்டதும், செந்தில்நாயகம் அப் படியே துடி துடித்துப் போனார். மயக்க மருந்து பிரயோகிக்கப் படாமல், சிறு அறுவைச் சிகிச்சைக்கு இலக்காகும் நோயாளி யின் கஷ்டங்கள் அப்பொழுது அவரை அண்டின. முகம் வேர்த்துக் கொட்டியது. கண்கள் ஏக்கத்தில் கொட்டின. 'இந்தக் கடைசி ஆசையைக்கூட பகவான் நிறைவேற்றக் கருணை கொள்ளவில்லையே ! நான் என்ன பாவம் செய் தேனோ ?....' மேற்கொண்டு அவர் எதையும் தொடர் சேர்த்துச் சிந்தனை பண்ணும் உடற்பலம் பெற்றிருக்க வில்லை.

'மங்களம் எனக்கு வாழ்க்கைப்பட்டு இப்போது வருஷம் இருபது ஆகிறது. இப்பொழுதுதான் அவள் வயிற்றில் பூச்சி பொட்டு ஏதோ ஊர்ந்ததாகச் சொன்னாள். டாக்டரம்மாவும் மங்களம் கருவுற்றிருப்பதாகவே என் செவிகளிலே இனிப்புச் செய்தியைச் சொன்னார்கள். ஆனால், இப்போதோ....முத லுக்கே ஆபத்தாக வந்திருக்கிறதே ! சண்முகத் தெய்வ மணியே ! என் மங்களத்தையாவது கடைசிப்பட்சமாகக் காப் பாற்றிக் கொடு !' என்று வேண்டிக்கொண்டேதான் அவர் அங்கிருந்து பங்களூருக்குப் பறந்து சென்றார். அவரது மனப் பாங்கினை ஊகித்த 'ஸ்டுடிகமாண்டர்' காற்றினும் கடுகிப் பறந்தது. டிரைவர் முத்தையன் பழம் தின்று கொட்டை போட்டவன் ஆயிற்றே !

உடன்பிறந்தவர் வீட்டுக்கு இனிய நற்கனுக்களைச் சுமந்து சென்ற மங்களம், அப்பொழுது அழிந்த கனவுகளைத் தாள மாட்டாமல், ஒரு நர்ஸிங்ஹோமில் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். குறைப் பிரசவம் அவளைச் சவ நிலைக்குக் கொணர்ந்துவிட்டது, பாவம் !

புருஷனைக் கண்டவுடன், "அத்தான் !" என்று கண்ணீர் பெருக்கிக் கதறினாள். "இவ்வளவு காலம் கழிச்சு, நானும் ஒரு

தாயாக ஆகப்போறேன்னு நிலத்திலே கால் பாவாமல் ஆடிச் சிரிச்சேனே, அது இப்ப அப்படியே அவலமாயிருச்சுதே அத்தான் ? நான் மகாபாவி !....கொடுத்துவைக்காத கட்டை நான் !...." என்று சித்தம் பேதலித்தவள் மாதிரி எங்கோ சூன்யத்தை வெறித்து நோக்கியபடி சொன்னாள்.

அதற்குமேல் அவள் உதடுகள் அசையவில்லை. அதற்கு உண்டான வலு இல்லை அவளுக்கு. மேலும், செந்தில் நாயகம் வேறு சின்னப்பிள்ளை போன்று விம்மத் தொடங்கிவிட்டார். அவர் மைத்துனர் சமாதானப்படுத்தி முடிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

"அழாதே மங்களம் ! உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. நான்தான் ரொம்பப் பாவி !....இல்லேன்னா, இத்தனை காலத்துக்கப்புறம் வந்த அதிர்ஷ்டம் இப்படி நம்மை ஆசைகாட்டி மோசம் செஞ்சிருக்குமா ? என்ன செய்யறது ? அவங்க அவங்க தலைவிதியை—கர்ம வினையை அவங்க அவங்க அனுபவிச்சுத்தானே தீரணும் !....வாரவிதி வழித் தங்காதின்னு சொல்லுவாங்க. வாஸ்தவம்தான் !....விதின்னு ஒண்ணு—ஏதோ ஒண்ணு இருக்கத்தான் வேணும். இல்லாட்டி, இப்படி நடந்திருக்கவே முடியாது!....என் நிழல் என்னை விட்டா போயிடும் ?....ஊஹூம்!...."

மனைவிக்குத் தேறுதல் மொழிகள் சொன்னார் செந்தில் நாயகம். லேடி டாக்டரைப் பார்த்துப் பேசி, அமைதியின் துளிப்பகுதியை வலுக்கட்டாயமாக நெஞ்சிடை ஏற்றிக் கொண்டு, திரும்பினார். மைத்துனரும் உடன் வந்தார். கண்டோன்மென்ட் பகுதியில் ஓடிவந்த விபத்து ஒன்றை அந்தச் சாமுண்டீஸ்வரர்தாம் விலக்கி விட்டிருப்பார் போலிருக்கிறது !

அன்றைய இரவை 'பார்' ஒன்றில் கழித்தார் செந்தில் நாயகம் அவர்கள். துணை இருந்த புண்ணியம் மகேந்திரனுக்கே சொந்தம். அதற்கப்புறம் பல மணி நேரங்களை மதுவின் கழலடிப் போதையிலே கழித்த மெய்யும் 'மங்களம் அண்ட் கோ'வின் சொந்தக்காரருடையதே ஆகும்.

'அலங்கார்' தியேட்டரும் அவரைச் சோதித்தது. கடைசியில், சம்பங்கிக்குளத் தெரு அவரை வரவேற்றது. மங்களம் இப்போது மெல்ல நகைபுரியத் தொடங்கினாள் !....

மருந்தின் ஊட்டம் மங்களத்தை தேறச் செய்திருந்தது. செந்தில் நாயகத்திற்குப் பரம சந்தோஷமாக இருந்தது. இருக்காதா பின்னே ?...அவள் பிற்பாடு வருவாள் என்று மைத்துனரும் அவர் மனையாட்டியும் செப்பினர். ஆகவே, செந்தில் நாயகம் மட்டும் சென்னைக்குப் பயணப்படவேண்டியவர் ஆனார். "நீங்க துரும்பாய் இளைச்சுப் போயிட்டீங்க....இப்படி இருந்தா, நாளைக்கு என்னோட கதி என்னாகிறதுங்க ?" என்று கண்களைக் கசக்கியபடி, விடை கொடுத்து அனுப்பினாள் மங்களம்.

விழி சோரப் புறப்பட்டார் செந்தில் நாயகம்.

★ ★ ★

சென்னை வந்தது. வீடும் வந்தது.

'மங்கள விலாசம்' அவரது மனச்சாந்தியினை அபகரித்துக் கொண்ட பாவமும், பாவமும் புறத்தே புலப்படுத்தாத —புலனாகாத சூதுப்பான்மை பூண்டு, வெகு இயல்பாகத் தோற்றமளித்தது. வந்தவரை வரவேற்காமல் இருக்குமா ? வரவேற்றது; தனக்கே உரித்தான அமைதிப் பொலிவுடன் வரவேற்றது; புலரிப் பொழுதின் தெள்ளிய அமைதிச் செறிவுடன் வரவேற்றது.

ஆனால், செந்தில் நாயகமோ அழுதுகொண்டே உள்ளே பிரவேசித்தார். நல்ல வேளை, அப்பொழுது மானேஜர் முத்துலிங்கம் உடன் இருந்தார் ! படுக்கை அறைக்கு நடந்தார் அவர்களின் கல்யாணப் படம் தெரிந்தது. மங்களத்தின் உருவத்தைக் கண்டவுடன், அவர் நெஞ்சம் அலைபாயத் தொடங்கியது. 'மங்களம்...டார்லிங் !' என்று இதழ் விலக்கி இதழ் சேர்த்து தம்முள் முணுமுணுத்துத் திருப்பிய நேரத்

தில், மங்களத்தின் பிம்பம் இருந்த இடத்தில்—அந்தப் படத்தில் வேறொருத்தியின் உருவத்தைத் தரிசித்தார். 'ஆ........! யாமினி !........நீயா ?' என்று வார்த்தைகளை மெலிந்த குரலில், வலுத்த தடுமாற்றத்துடன் உதிர்த்தார். முத்துலிங்கம் உடன் இருந்ததால், விபரீதம் ஏதும் நிகழ ஏது உண்டாகவில்லை !

''ஐயா !....''

மாடிப் படிகள் சலனம் எய்தி அடங்கின.

அவர் அறிவார்; 'காசி மருந்து கொண்டு வருகிறான். அது முடிந்தால், சூப் — அப்புறம்....?'

எண்ணப் பூக்களைச் சரம் தொடுக்க முயன்றவருக்கு, தொட்ட பணியைத் தொடர விடாமல், கேள்வி வளையம் சூழத் தொடங்கவே, தொண்டைக் குழியில் புகைச்சல் இருமல் சூழ்ந்தது. இருமினார். நெஞ்சுக் குருத்து வலித்தது. இமை வரம்புகள் நனைந்தன. 'அப்பப்பா !....கந்தா !'

மீண்டும் அழைத்தான் காசி.

அவர் மெள்ள எழுந்து குந்தினார். 'ஸ்ப்ரிங்' கட்டில் எம்பித் தாழ்ந்தது. பட்டுமெத்தையின் ஸ்பரிசம் சுகமாயிருந்தது. ''காசி,'' என்றார். அடித் தொண்டையில் கூப்பிட்டார். ''மருந்துதானே ? கொடப்பா !'' என்று கேட்டுக் கொண்டே, காசி பணிவுடன் கொடுத்த மருந்துக் குப்பியை வாங்கிக்கொண்டார். கைகளில் நடுக்கம் ஏற்பட்டது. ஒரு முறை அம்மருந்தையே இமைக்காமல் பார்த்தார். பங்களாவின் அழகார்ந்த அமைதி முழுவதையும் அம் மருந்துக் குப்பி தன் வசம் இழுத்துக்கொண்டு, இப்போது தாம் மருந்தின் காலடியில் வசம் கெட்டுக் கிடப்பதை நினைத்து நினைத்து, மனம் புழுங்கினார். இருதய பாகத்தில் யாரோ கசையடி கொடுப்பதைப்போல் துடித்தார். நெஞ்சில் விழிகளும், விழிகளிலே நெஞ்சுமாக அவதிப்பட்டார். மூச்சு அடைத்தது. கைந்நொடிப்பொழுது, திண்டாடினார். உயிர் போய் உயிர் மீண்டது.

''கா....''

# 19

காசியை அழைத்தவருக்கு 'கா'வுக்கு மேல் ஓர் எழுத்துக் கூட வெளிக்கிளம்பக் காணோம். வேர்த்துக் கொட்டியது. உலகமே அஸ்தமித்துவிட்ட பாங்கில் கண்களை மூடிக்கொண்டாரா? இல்லை. கண்கள்தாம் தாமே அப்படி மூடிக் கொண்டன. 'ஆறுமுகப் பெருமானே!'—நெஞ்சம் நெக்குருகியது. 'கருணைகூர் முகங்கள் ஆறும்' மன அரங்கில் தோன்றின. அவரையும் அறியாமல் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

செந்தில் நாயகம் சிறுகச் சிறுகச் சுயஞாபகம் பெற்றார். அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்திருக்க வேண்டும் அத் தெய்வம்!

மருந்து குடலுக்குச் சென்றது.

காசி நின்றான்.

மின் விசிறி ஓடிற்று.

இரவுச் சமையலுக்கு விவரம் கேட்டான் காசி. அவன் தான் இப்போதைக்குத் துணை. கண்பார்த்த துணை.

சுரத்து வடிந்த தொனியில் அவர் ஏதோ சொன்னார்.

"அம்மா வந்தாத்தான் இனிமே உங்களுக்குத் தெம்பு வருமுங்க!...." என்று உண்மையை அனுபவபூர்வமான பிடிப்புடன் வெளியிட்டான்.

"ஊம்!" கொட்டினார். வெண் பற்கள் லேசாக ஒளி காட்டின. ஜீவன் இழந்த சிரிப்புத்தான் தெரிந்தது.

டெலிபோன் மணி 'கண கண' வென்று ஓசைப்படுத்தியது. மகேந்திரனாக இருக்குமோ என்ற சபலம். ஆவலுடன் 'ரிஸீவரை'க் கையிலெடுத்தார்.

மகேந்திரன் இல்லை!....

## பகுதி : நான்கு

## கூழைக் கும்பிடு !

டாக்டர் நாகசுந்தரம் இரவு எட்டுமணிக்கு வருவதாகத் தொலைபேசியில் தெரியப்படுத்தினர். —'ம்....! பெகடெக்ஸ் இஞ்செகஷன் இன்னும் மிச்சம் இருக்கில்ல !...'

"காசி !"

"ஐயா !"

செந்தில் நாயகம் திண்டில் சாய்ந்தபடி தமது கடிதத் தாளைக் கிழித்தார்.

"எம். செந்தில் நாயகம் பி. ஏ; 'மங்களவிலாசம்'; 89, முண்டக்கண்ணி அம்மன் கோயில் தெரு, சென்னை-4" என்ற வரிகள் 'இம்போஸிங்' செய்யப்பட்டுப் பளிச்சென்றிருந்தன.

பேனாவைக் கையிலெடுத்த அவர் அடுத்த நிமிஷத்தில் பேயறையப்பட்ட நிலைக்கு உடன்தையானர். காரணம், அவர் அன்று வந்த அக் கடிதத்தை நினைத்துக் கொண்டதுதான். "யாமினி !...." என்று தம்முள் பேசிக்கொண்டார். அப்போது அவரது மனச்சான்று அவரை மடக்கிச் சுருட்ட முனைந்தது. கணப்பில் வீசப்பட்ட தேளாகத் துடித்தார். பேனு கன்னத்தை உறுத்தியது. ஆனல் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருக்கும் நெருஞ்சி முள்ளைப் பற்றி அவருக்கு அக்கறை இல்லையோ ?

நெருப்பைத் தொட எத்தனம் புரிபவரை ஒப்ப, அவர் எழுந்து கிழண்டைப் பக்கம் நடந்து, 'காட்ரெஜ்' பீரோவைத் திறந்தார். அன்று வந்த முடங்கலை எடுத்தார். புரட்டிப் புரட்டிப் பார்த்தார். அனுப்பிய உள்ளத்தின் பெயர் மட்டுமே கண்டிருந்தது, முகவரி கிடையாது !

''காசி, நீ போய் வேலையைப் பார் !....அப்புறம் தேவைப் பட்டால் கூப்பிடுகிறேன் !'' என்று அவனை அனுப்பினார்.

கடிதம் கை நழுவியது.

வெஞ்சினமும் விரக்தியும் கூட்டுச் சேர்ந்து, அவரது கைப் பேனாவைத் தரையில் போட்டுவிட்டன. அவர் கைமுறுக்கைப் பறிகொடுத்த கைக்குழந்தையென அப்படியே சிலையாய் நின்றார். நெஞ்சின் இருள் அறையைச் சூழ்ந்திருக்க வேண் டும். விளக்குப் பொத்தானை அழுத்தினார். அறை இருட்டு ஓடியது. ஆனால் மன இருட்டு அவரைக் கதிகலங்க வைத்துச் சிரித்தது. 'யாமினி, நீ எங்கு இருக்கிறாய் ?' என்று மெல்ல சன்னக் குரலெடுத்து வினவினார்.

''இதோ !'' என்ற குரல் ஒன்று வீணையின் சுநாதமாய் பூந்தென்றலில் மிதந்து வந்தது.

செந்தில்நாயகம் அக்கம் பக்கம் திரும்பினார். குரல் எங்கிருந்து பேசியது ?....சுற்றிச்சூழ நோக்கினார். யாரு மில்லை ! பலத்த நகைப் பொலி எதிரொலித்தது. நெஞ்சில் கை வைத்துப் பார்த்தார். அது சுட்டது. 'இதோ' என்ற குரல் புறப்பட்ட இடம் அவருக்குப் புரிந்து விட்டதோ ?

அழகின் ஆதர்சமாக—பொற்பின் பொழிப்புரையாக தம் முடைய நினைவிலும் இதயத்திலும் அந்த யாமினி நடமாடி, கள்ள நகை இழைப்பதை அவர் உணர்ந்தார்; அவரது மனம் உணர்ந்தது. வேர்வை மணிகள் எங்கும் கிரம்பின.

அப்போது, ''ஐயா, வணக்கம் வருதுங்க !'' என்ற ஆணித் தரமான குரலை முன்னோடவிட்டு, பின் நடந்து வந்தான் மகேந்திரன். பட்டு ஜிப்பாவும் பகட்டுத் தாம்பூலக் கோலமும்

அவனுக்கு நிரந்தரமான ஒரு 'கிராக்கி'யை உண்டாக்கின. 'மைனர் செயின்' பளபளப்புக் காட்டியது. வெளிப் பூச்சு என்றால் அதன் 'மவுஸ்' அலாதிதானே ?

''வாங்க....உட்காருங்க !'' என்று முகமன் மொழிந்தார் செந்தில்நாயகம்.

கூழைக்கும்பிடு போட்ட வண்ணம், அசட்டுச் சிரிப்புச் சிரித்தவாறு மகேந்திரன் அமர்ந்தான்.

செந்தில்நாயகம் இருப்புக் கொள்ளாமல் தவித்தார். இம் மாதிரி தருணங்களிலே அவருக்குச் சிகரெட் டப்பாதான் கை கொடுக்கும்.

சிகரெட் மணத்தது.

''உங்களுக்கு....?

''இப்போ வேண்டாமுங்க !''

இருவரும் ஒருவரையொருவர் ஆழமாகப் பார்வையிட்டுப் புன்னகை செய்து கொண்டனர். ஏதோ ஒரு நடப்பைச் சுட்டு வது போலவும்—அவ்விவரத்தை ஞாபக மூட்டுவதாகவும் மேற்படி புன்னகை இருந்தது.

ஒருநாள், செந்தில்நாயகத்தைச் சந்திக்க வந்த மகேந்திரன், அவருடைய முறைப்பட்ட அனுமதியைக் கோராமலேயே தன் பாட்டில் அங்கிருந்த சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்து விட்டான்.

கோபம் பற்றி வந்தது, செந்தில்நாயகத்துக்கு. ''உங்களைப்போலுள்ள ஆளுங்களுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தாப் போதும். தலைமேலே உட்கார்ந்திடுவீங்க!....எதுக்கும் ஒரு அளவு வேணும்....எங்கிட்ட நீங்க 'அன்டியூ அட்வாண்டேஜ்' எடுத்துக்க பிரயத்தனப்பட்டீங்கன்னு, நீங்க இங்கே வரக்கூடாது !....'' என்று எரிந்து விழுந்தார். கண்களில் ரத்தம் தெறித்தது.

மகேந்திரன் பாவம், வெலவெலத்துப் போய், இருக்கையினின்றும் எழுந்து நின்றான். ''ஐயா, இந்த ஏழையை மன்னிச்சிடுங்க; நீங்க ரொம்பக் கோபக்காரங்கண்ணு உங்களை

அறியறதுக்கு முந்தியே நான் கேள்விப்பட்டேனுங்க. ஆனா, கோபம் உள்ள இடத்திலேதான் குணமும் இருக்குமிங்கிற சங்கதியையும் உங்ககிட்ட பழகின இந்தச் சொற்ப நாளிலே புரிஞ்சுக்கிடவும் செஞ்சிட்டேனுங்க....நீங்க என்னைக் கட்டாயம் மன்னிக்கத்தான் வேணும் !....'' என்று அழமாட்டாக் குறையாகக் கெஞ்சினர்.

மறு விநாடியில், செந்தில் நாயகம் குபீரென்று சிரித்து விட்டார். அவர் ஒரு சிகரெட்டை எடுத்துக் கொளுத்தினர். அவனிடமும் ஒரு சிகரெட்டை நீட்டினர். ''ஊம் !'' என்று தூண்டிவிட்டுச் சிரித்தார்.

புகை மண்டலத்தில் 'ஜோடிச் சிரிப்பு' திக்குமுக்காடிப் போயிற்று !

இப்போது, செந்தில் நாயகம் புகையை இழுத்தபடி, ஸ்டூலில் கிடந்த தமிழ்ப் பத்திரிகை ஒன்றை எடுத்துப் பிரித்தார். பிரித்துக்கொண்டே, ஏதோ ஒரு நினைப்புடன், ''அப்புறம்....என்ன விசேஷம், மகேந்திரன் ?....'' என்று வினு விடுத்தார்.

''பெங்களூரிலே உங்க காதிலே போட்டேனே ஒரு விஷயம், அதை இன்னிக்கேகூட செட்டில் செஞ்சுப்பிடலாம் !.... ஸ்டூடியோ ஹெவன்லேதான் குமரி குயில்மொழிக்கு இன்னிக்கு ஷூட்டிங் !....உங்க இஷ்டம் ?....'' என்று மென்று விழுங்கினுன் மகேந்திரன்.

சிந்தனை வசப்பட்டிருந்தார் அவர். அதே போக்கில், ''எல்லாம் உங்க தயவுதான் !'' என்று வெகு சுதாரிப்புடன் பதில் கொடுத்து, அவன் உச்சியில் 'ஐஸ்' வைத்த செந்தில் நாயகம், புதுத் தெம்புடன் எழுந்து 'ட்ரஸ்' செய்து கொள்ள ஆயத்தப்பட்டார்.

அதுசமயம், டெலிபோன் மணி ஒலி எழுப்பி, அதே சடுதியில் இணைப்பு துண்டிக்கப்பட்டு அடங்கிய விவரத்தை உணர்ந்து கொள்ளும் நிலையில் செந்தில் நாயகம் இருக்கவில்லை போலும் !

★ ★ ★

தமிழ் நாட்டுக்கும் ஒரு 'ஹாலிவுட்' உண்டு. அங்கே தான் 'ஸ்டுடி கமாண்டர்' தெரு விளக்குகளின் வெளிச்சத்தை மிதித்தவாறு பவனி வந்து கொண்டிருந்தது. அமைதியைக் குலைக்கும் கட்டுக்கோப்பானதொரு எதிர்ப்புப் போல அங்கங்கே கூச்சலும் கும்பலுமாக நெரிசல்பட்டது. மிகுந்த கவனத்துடன் 'ட்ரைவ்' செய்தார் செந்தில்நாயகம். எண்ணமிட்ட இடத்தில் கார் நின்றது. தூக்கத்திலிருந்து விழிப்பவர் போன்று செந்தில்நாயகம் கண்களைக் கசக்கிக் கொண்டார். வடபழனி ஆண்டவர் சந்நிதியை இலக்கு வைத்துக் கைகளைக் குவித்து வணங்கினார்.

நின்ற கார் ஓடியது!

ஓடிய கார் நின்ற இடம் தேவலோகமா, என்ன?

ஆம்; அது தேவலோகம் தான்.

அங்குதான் 'ஸ்டுடியோ ஹெவன்' இருந்தது.

"ஸார், தூக்கமா?" என்று பைய ஆரம்பித்தான் மகேந்திரன். தொடர்ந்து, தொண்டையைக் கனைத்துக்கொண்டான். ஒருகால், செந்தில்நாயகத்தின் தயக்க நிலையை அல்லது மருட்சி நிலையை மாற்றவேண்டுமென்று அவன் உள்ளூர எண்ணி, அவ்வெண்ணத்தைச் செயல் வடிவில் புகுத்தவும் அப்படிக் கனைத்திருக்கலாம். "ஸார், என்ன ஒரு மாதிரி டல்லாகக் காணப்படுகிறீர்களே? எப்பவும் இப்படி இருந்ததில்லையே? பழசுபட்டதை யெல்லாம் மறக்க வேண்டிய நேரம் நெருங்குதுங்க!" என்று ஆறுதல் மொழிகளை ஒவ்வொன்றாக மாற்றுப் பார்த்து இழைத்துத் தள்ளினான் அவன்.

வழக்கம் போலவே அவர் ஓர் அசட்டு நகையை இதழ்க் கங்குகளில் பூணுவதைத் தவிர வேறொன்றும் தோன்றாமல் காணப்பட்டார். தெளிவுடன் முகம் இருந்தது. மாத்திரைகள் சாமான்யமா, என்ன?

"மகேந்திரன்!"

''சொல்லுங்க ஸார் ! காப்பி ஊத்தித் தரட்டா ? இல்லே, கூல் ட்ரிங்க் வேணுங்களா ?'' சட்டைப் பையில் துருத்திய செய்தித் தாளைப்பற்றி அவனுக்கு ஆதங்கம் இல்லை.

'எதுவும் இப்போதைக்குத் தேவையில்லை' என்ற பாவனையில் வலதுகையை அடையாளம் காட்டினர் அவர். ''ஆமா, அந்தப் பெண்ணோட பெயர் என்னவென்று சொன்னீங்க ?'' என்று பதட்டம் சேர்ந்த குரலில் கேட்டார்.

''குயில்மொழின்னு பேருங்க !'' வெகு நிதானமாகவே விடை வந்தது.

''அந்தப் பெண்ணை உங்களுக்குப் பழக்கமுண்டா ?''

''இனிமேதான் உண்டாகணும். எனக்குத் தெரிஞ்சவங்க துவராவிலேதான் இதோட பேர் கிடைச்சுது !''

''அப்படின்னு, உங்களுக்கு இந்தக் குயில்மொழியை நேரிடையாகப் பரிச்சயமில்லே !''

''ஊஹூம் !''

செந்தில்நாயகம் மீளவும் சிந்தனைப்பட்டார். மீளமுடியாத சலக்கத்தின் உடும்புப்பிடி அவரை நெருக்கிவிட்டது.

''ஸார், எப்பவும் இப்படிக் கலங்க மாட்டீங்களே ? இன்னைக்கு மட்டிலும் ஏதுக்கு இப்படி அவஸ்தை அடையறீங்க ?....'' என்று பதமான தன்மையுடன் நாய்மாதிரி குழைந்தபடி, அவரை நெருங்கினன் மகேந்திரன். அவர் முகத்தை ஊடுருவிப் பார்த்தான்.

''மகேந்திரன், என் கம்பெனியிலே குயில்மொழின்னு ஒரு பெண் வேலைபார்க்குதே, உமக்குத் தெரியுமா ?'' என்று கலவரம் அடிநாதமிட்ட ஓசையில் கேட்டார்.

''ஊஹூம் !....டெலிபோனிலே ஒரு பெண்ணோட குரலை மட்டும் சில தடவை கேட்டதுண்டுங்க !....வந்துங்க....குயிலும் மொழியும் பொதுப் பெயர்தானுங்களே, முதலாளி ஸார் ? நான் சொல்ற ஐட்டம் சினிமா எக்ஸ்ட்ரா வாக்கும் !....''— அழுத்தமான லாகவத்துடன் அவன் தன் வாதத்தை அழுத்தி விட்டான்.

அப்போது செந்தில்நாயகம் எந்த உலகத்தில் இருந்தார் ?

# பகுதி : ஐந்து

# பிறவிப் பூக்கள் !

'ஸ்டுடியோ ஹெவன்' உரிமை பூண்டிருந்த மண் அப்போது செந்தில் நாயகத்தை விழுங்கி ஏப்பம்விடத் துடித்தது போல பயங்கரச் சூழலை உருவாக்கிக் காட்டிவிட்டது !

அவர் கண்ணாடியைத் துடைத்துக்கொண்டு ஏறிட்டு நிமிர்ந்து நோக்கினார்.

மகேந்திரன் தன்னுடைய சாகசம் நிறைந்த விழிகளைத் தாழ்த்திக்கொண்டான்.

"சரி, நீர் உள்ளே போய்க் கச்சிதமாக விவரம் விசாரித்துக் கொண்டு வாரும்; பிறகு, ஆகவேண்டியதைக் கவனிக்கலாம். நான் அப்புறம் வருவேன்!" ஆணையின் வடிவம் எடுத்தது அவரது பேச்சு.

மகேந்திரன் உள்ளே மடங்கி நடந்தான்.

அவன் போனால் என்னவாம்?

இப்போது ஸ்ரீமான் செந்தில் அவர்களுக்குத் துணையா இல்லாமல் போய்விட்டது?—சிகரெட் பெட்டி பிரிந்தது. புகை அலைகள் அவரது நெஞ்சலைகளோடு போட்டி கட்ட இயலவில்லை. நாலு பக்கமும் திரும்பினார்.

'எங்கெங்கு காணினும் சக்தியடா!' என்று பாடினான் புதுமைக் கவிஞன்

இங்கோ எங்கெங்கு நோக்கினும் ஒளிமயம்!—இப்படி நினைவு பின்னியவராக, காரை ஒதுக்கிவிட்டு, சில தப்படிகள் நடந்தார்.

ஓரிடத்தில் 'ரீ ரெகார்டிங்' நடந்தது.

இன்னோரிடத்தில் 'ரஷ்' போட்டுப் பார்த்தார்கள்.

மூன்றாவது கொட்டகையில் அன்றையப் படப் பிடிப்புக காக ஒத்திகை நடைபெற்றது.

வரவேற்புக் கூடத்திலே கலகலப்பு அரசாண்டது.

புகைவளையங்களினூடாக சிந்தனைப் புரவியின் மீதமர்ந்து காலத்தின் நடந்த பகுதியை அண்டியபோது, அவருக்கு எல்லாமே சொப்பனமாகவே தட்டுப்பட்டது.

விண்ணிலே மேலைத் தொங்கலின் ஒரு மூலையில் பிறைச் சந்திரன் பவனி வந்தான். பட்டுக் கருநீலவானத்தின் பின்னணியே, அதியற்புதமான பிறைக்கு ஒரு பிடிப்பாகக் கூடியிருந்தது.

விண்ணை நினைத்து, மண்ணைக் கண்டபோது, சூழலின் மயக்கம் மறையத் தொடங்கியது. மீண்டும் கழிந்த நாட்களின் ஏதோ ஒரு பகுதியைத் தொட்டது அவர் மனம்.

★ ★ ★

அந்த நாட்கள்.......!

அதிசயக் குறியின் கீழ்த் தளத்தில் அமைத்திட்ட ஆனந்த மயமான தொரு புள்ளியாக அமைந்திருந்த கனவுலக நாட்கள் அல்லவா அவை?

செந்தில்நாயகம் அப்போது இளமையின் பொலிவுக்கு நிதர்சனமான சாட்சியாகவும், மகிழ்வின் ஆட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நிரூபணமாகவும் விளங்கிய நேரம். படிப்பின் தொடர்நிலைக் கட்டத்தில், காதலும் நிழலுமாகத் தொடர்ந்துகொண்ட ஒரு விந்தையான காலகட்டம் செந்தில்நாயகத்திற்குச் சோதனை எதையும் வைத்துவிடவில்லை.

திருச்சிப் படிப்பு.

அங்கேதான் காதலுக்கும் பொழுதை ஒதுக்கிட வேண்டியிருந்தது.

"யாமினி!...மை டியர் !"

"எஸ்...மிஸ்டர் செந்தில்!...."

அவள் மான் ஆவாள்.

அவன் மானுக்குக் காவலனவான்.

இப்படிப்பட்ட மகிழ்வின் விளையாட்டைக் கலைக்க, விதி கூட அப்பொழுது திட்டம் புனையாத காரணத்தினல், அவர்கள் இருவரும் சென்னைக்கு முதல் வகுப்பு டிக்கெட்டுடன் பயணம் செய்யலானர்கள். பட்டப் படிப்பிற்காகப் போதிக்கப்பட்ட சரித்திரத்திலே, கடல்மல்லைப்பகுதியை நேரில் கண்டு சந்தோஷம் அடையவும் ஒரு வாய்ப்புக் கிடைத்து விட்டதே என்ற குதூகலத்தில் அவனும் அவளும் அங்கெல்லாம் சுற்றினர்கள். மகேந்திரரையும் மாமல்லரையும் மானசீகமாகத் தரிசித்தார்கள். அதே தருணத்தில் சதங்கைகளின் காம்பீர்ய நயத்தையும் அவர்களது கற்பனை மனம் கேட்டு அனுபவிக்கத் தவறவில்லை.

ஆழியின் தூய வெண்மணல் வெளிதனிலே இருவரும் ஒருவரையொருவர் அடக்கமாக்கிக்கொண்டு மௌனத்தை விழுங்கியவர்களாகச் சம்மணமிட்டுச் சாய்ந்திருந்தார்கள், பிறவிப் பூக்களின் பூரணப் பொலிவுடன்!

"என்ன, அப்படிப் பார்க்கிறீகள்?"

"என் சிவகாமியைப் பார்க்கக் கூடாதா நான்?"

"சிவகாமியா....நானு?"

"ம்!"

அவள் ஏன் அப்படிப் பதறினள்?

"நீங்கள் மாமல்லராக இருங்கள். அட்டியில்லை. ஆனல் நான் சிவகாமியாக மாறவே வேண்டாம்!...பாவம், விதியின் விளையாட்டுக்குத் தோழியாகிவிட்ட பேதை அவள்!...." என்று கம்மிய குரலில் சொன்னள் யாமினி. அவள் கல்லூரி மாணவி.

"யாமினி, நவநாகரீக யுகத்தின் புதுமைப் பெண் என்பாயே நீ?.. நீயே இப்படிச் சாதாரண விஷயத்துக்கெல்லாம்

அல்லல் படலாமா? மதியின் பலத்தையும் தெய்வத்தின் ஆசியையும் நம்பும் நம்மை எந்த விதியும் எதுவும் செய்து விட முடியாது. அப்படியே நம்புவோம்!" என்று ஆறுதல் வசனமாகப் பேசி விளக்கினான் செந்தில்நாயகம். அவன் கல்லூரி மாணவன்.

அப்புறம் இருவரும் புறப்பட்டார்கள். சென்னையில் படப் பிடிப்பு ஒன்றை வேடிக்கை பார்க்க ஆசைப்பட்டார்கள்.

பாகவதர் படம் ஒன்றிற்குப் படப்பிடிப்பு நடப்பதாகக் கேள்விப்பட்டு, அங்கு உரிமை பெற்றுச் சென்றார்கள்.

பாகவதர் ராஜா வேடம் புனைந்து வெண்புரவியில் வீதி நெடுகிலும் பவனி வர, எதிரில் அழகின் நங்கை ஒருத்தி போதையின் வரி வடிவமாகத் தோன்றி, அந்த ராஜாவை மயக்கும் கட்டம் படமாகிக் கொண்டிருந்தது.

செந்தில்நாயகம் மிகுந்த உற்சாகத்தோடு அந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு, யாமினியைத் தேடினான். அவளோ, சிவந்த கன்னங்கள் கன்றிச் சிவக்க, நாணத்தின் பதுமையாகி, விழி மூடி விழி விலக்கி விளையாட்டுக் காட்டி நின்றாள். "ஷல் வீ ஸ்டார்ட்?" என்ற ஆலோசனைக்கு "ஆல் ரைட்!" சொல்லி விட்டு அவள் நகர, அவனும் அவளுடைய விதியைப்போல அவளைத் தொடர்ந்தான்!....விட்ட குறை யைத் தொட்ட பராமரிப்புடன் தொடர்ந்தான்!......

"ஐயா!..." என்று குரலில் கனத்தை ஏற்றிக் கூப்பிட் டான் மகேந்திரன்.

செந்தில்நாயகம் கனவை அரைகுறையாக்கிவிட்ட பர தவிப்புடன் கண்களை உருட்டி விழித்தார். "ஓ....நீங்களா? விசாரித்தீர்களா?" என்றார்.

"மற்ற விபரம் புரியவில்லை. ஆனால் நான் சொன்ன பெண்ணைக் கண்டு பேசினேன். குயில் மொழிங்கிறது தான் தான்னு சொல்லிடுச்சு!....எதுக்கும் நீங்களும் வாங்க, வந்து பார்த்தால் புரிந்துவிடுகிறது! வாங்க, ஸார்!" துரிதப்படுத் தினான் மகேந்திரன்.

நெடுமூச்சை நெட்டித்தள்ளி விட்டு, செந்தில்நாயகம் அங்கிருந்து புறப்பட்டார். கார்ச்சாவியைச் சட்டைப்பையில் திணித்தார்; நடந்தார். அழகின் அற்புதமாக அமைந்து விடுகிற இயற்கைத் தன்மைக்கு ஒரு சவால் போல அமைக்கப்பட்டிருந்த செயற்கையின் கம்பீரமான எழிலைப் பகுதி பகுதியாக ரசித்த வண்ணம் அவர் நடையைத் தொடர்ந்தார். நீலப் பாதரஸக் குழல் விளக்குகள் எடுப்பாக எரிந்தன.

யாரோ ஒரு சில்க் சட்டை ஆசாமி எதிர்ப்பட்டார். ஸ்டுடியோவில் சில்க் சட்டைகளுக்கா பஞ்சம்?

உடனே மகேந்திரன் அந்த ஆளைக் கண்டு பல்லை இளித்தான். "இவுங்கதான் ஸ்ரீமான் செந்தில்நாயகம் அவர்கள். பெரிய பிஸினஸ்காரங்க. லிங்கச் செட்டித் தெருவிலே மூணு தொழில்....ஆ∴ப்செட் ப்ரிண்டிங் பிரஸ் நடக்குது...காலண்டர் போடுறாங்க...புதுடயர்கள் விற்கிறாங்க...இன்னம்..." என்று சொல்லுவதற்குள், அந்த ஆசாமி இடைமறித்து, "இங்கே எப்படி?" என்று கேட்க, "ஷூட்டிங்க் பார்க்க வேணும்னு சொன்னாங்க. அழைச்சிட்டு வந்தேன்!" என்று ஆரம்பத்திலேயே சொல்லிக் கொடுத்துவிட்ட அச்சில் அப்படியே சொல்லிவிட்டான்.

எதிர்ப்பட்ட புள்ளியோ அவ்விருவரையும் 'ஒரு மாதிரி' யாகப் பார்த்துவிட்டு நடையைக் கட்டிவிட்டான்.

செந்தில்நாயகத்திற்கு என்னவோ போலாகிவிட்டது. 'ஸ்லாக்'கின் பொத்தான்களைப் பிரித்தார். பூங்காற்று, மேனியைத் தழுவிற்று. மகேந்திரனை எரிச்சலுடன் பார்த்தார். "இங்கெல்லாம் என்னை இழுக்காதீர் என்றேன்....கேட்கவில்லை!" கடுகடுப்பாகச் செப்பினார்.

'ஹி..ஹி' என்று அசடு வழிய நின்றான் மகேந்திரன்.

இனம் புரியாக் குழப்பத்தில் அல்லாடிக் கொண்டிருந்தார் செந்தில் நாயகம்.

அப்போது:

கைவளையல்களின் இனிய ஓசையும் காற்சதங்கைகளின் மெல்லிய நாதமும் கேட்கவே அவர் விசையுடன் திரும்பினார்.

இதயத்தில் மின்னல் வெட்டிப்பாய்ந்தது போல திகைத்துப் போனர்.

காரணம், அங்கே அப்பொழுது, மின்னலின் உருக் கொண்டமாதிரி குமாரி குயில்மொழி நின்று வணங் கிக் கொண்டிருந்தாள். வேஷப்பூச்சின் செந்நிறம் சரியாகக் கலையாமல், இன்னும் சில இடங்களில் அப்பிக்கிடந்தது.

அவளைக் கண்டதும் எண்சாண் உடம்பும் ஒற்றைச் சாணைக் குறுகியது. விழுங்கிய மாத்திரைகள் ஈந்த சக்தி முழுவதும் இப்போது வேலை செய்யாமல் எங்கோ உறங் கியது போலும். தடுமாறினர். வேர்வை கொட்டியது. தேள் கொட்டப்பட்டவராகத் துடித்தார். "ஷூட்டிங்க் பார்க்க வந் தேன்...இந்த ஸ்டுடியோ ஓனர் என்னுடை சினேகிதர்!...சரி, புறப்படலாமா?..."என்று கூறி, அவள் முகத்தை—அந்த நேர்கொண்ட பார்வையை ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சிய வராக அங்கிருந்து நழுவினர். கார்ச்சாவியை எடுத்தார். காரை இயக்கினர். மகேந்திரன் தொற்றினன்.

"ஐயாவுக்கு 'மூட்' சரியில்லை போலிருக்கிறது!.." என்று நாசுக்காக வார்த்தைகளைக் குளிப்பாட்டி எடுத்தான் மகேந் திரன்.

"குலத்தின் வழியில்தான் குணம் என்கிறது சரியான பேச்சுத்தான்!...."

"ஆமாங்க....அந்தப் பொண்ணு குயில்மொழி ரொம்பக் குணம்னுதான் தோணுது...அதை நெருங்கி நைஸாய் விசாரிச் சதால் கொஞ்சம் ஹாட்டாய் பேசிடுச்சு!...ஆனு நீங்க இப்படி புறப்படுவீங்கன்னு. ..."

"ஓய்! நிறுத்துமய்யா!...இதே பெண்தான் என்னுடை கம்பெனியில் டெஸ்பாட்ச் செக்ஷனிலே அலுவல் பார்க்கு தாக்கும்!....."என்று சூடாகப் பதிலிறுத்தார் அவர்.

"அப்படிங்களா? பழம் நழுவிப் பாலிலே விழுந்த கதை யாயிடுச்சு!...."

"... ..."

"ஐயா, என்ன இப்படி மௌனம் சாதிக்கிறீங்க?.... இங்கே பாருங்க...இந்த நியூஸைப் படியுங்க! ...சரி, நானே படிக்கட்டுமா?...."

கார் நின்றது.

அவர் அந்தத் தாளைப் பறித்தார்.

சுட்டப்பட்ட இடம் சுட்டதோ?

தன் கம்பெனியில் வேலை பார்த்த ஒரு கன்னிப் பெண்ணை ஆசைகாட்டி மோசம் செய்த ஒரு முதலாளியின் மிருகச் செயல் அங்கே கண்டிருந்தது.

அவ்வளவுதான்!

"சீ....அற்ப மிருகமே!...இனிமேல் நீ என்னைத் தேடி வரப்படாது....மனிதாபிமானமே இல்லையா உனக்கு? கடைசியில் உன் கீழ்ப்புத்தியைக் காட்டிவிட்டாயே! எனக்கா பாடம் சொல்லித்தருகிருய்? சீ! ஓடு!....ம்...இந்த ரூபாயை எடுத்துக் கிட்டு இறங்கி ஓடு!..."என்று சொல்லி ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவன் முகத்தில் அடித்து வீசினுர் செந்தில்நாயகம். அவரது கைகள் பரபரத்தன. மகேந்திரனை நாலு அறை அறையவேண்டுமென்று துடித்தார். மறு கணம் நிலையை ஊகித்து உணர்ந்தார். வெளிச்சத்தில் வந்து நின்று சிகரட்டைப் பற்ற வைத்தார். பணத்தைப் பொறுக்கிக்கொண்ட மகேந்திரன் அடிபட்ட சாரைப் பாம்பாய் சரேலென்று விரைந்து மறைந்தான்.

கார் ஓடத் தலைப்பட்டது. தலை தெறிக்க ஓடியது.

வழியில் ஆண்டவன் சந்நிதி தெரிந்தது. பிறவிப் பூக்கள் மலர்ந்து குவிந்திருந்தன.

'அப்பனே! இரத்தத் திமிறிைல் நான் செய்த அந்த ஒரு தவற்றை எண்ணி எண்ணி இந்த இருபது வருஷங்களாக நரகவேதனை அனுபவித்துக்கொண்டிருக்கிறேனே!...அந்தப் பாவம் ஒன்றே என் ஜென்மம் பூராவுக்கும் போதும். நல்ல வேளை, இன்று என்னைக் காப்பாற்றிைய், அப்பனே!' என்று செந்தில்நாயகத்தின் உள்மனம் விம்மிப் புலம்பிக்கொண்டிருந்தது!

## பகுதி : ஆறு

## "நான் உன் வினை !"

கபாலீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டுத் திரும்பி, பாலும் பழமும் சாப்பிட்டு, கட்டிலில் உறக்கம் கொள்ள அமர்ந்து சாய்ந்தபோது, செந்தில்நாயகத்துக்கு ஒரு முறை வாய்விட்டுக் கதறி அழுது புலம்ப வேண்டும் போலிருந் தது. ஆகவே, அந்தப் பெரிய அறையை நாதாங்கியிட்டு அடைத்துக்கொண்டார். நெஞ்சை அடைத்துவிட்டிருந்த துன்பத்தின் சுமை முழுவதையும் கண்களுக்குக் கொணர்ந்து விட்டிருக்க வேண்டும். கண்ணீர் ஆறாகப் பெருகியது. துன்பம் கரைந்ததா ? இல்லை, மனம்தான் கரைந்ததா ?—எது கரைந்ததோ என்னவோ, அவரது மனப்பாரம் மட்டும் கரைந்து குறைந்ததாகத் தெரியவில்லை.

தெய்வமே, நான் என்ன செய்வேன் ?' என்று ஓங்கி ஓலமிட்டார்.

அப்பொழுது பயம் செறிந்த சிரிப்பொலி அறையின் நாலு பக்கச் சுவர்களையும் அடைத்து எதிரொலித்தது.

யார் சிரித்தது ?

'நீ செய்த பாவம் நான் !....'

'உன் விதி நான் !'

'நான் உன் வினை !'

குரல்கள் எக்காளமிட்டு முழங்கின.

"முருகா !........அப்பனே !.... ஈசனே !" என்று மண்டையில் அடித்துக்கொண்டு, விடாமல் கதறி அழுதார். மறு கணம் மயக்கம் அடைந்து தரையில் சுருண்டு விழுந்தார். நெற்றிப் பொட்டில் ரத்தம் கசிந்தது.

சுவர்க் கடிகாரம் நடுநிசியை உணர்த்திய தருணம், அவர் மனம் விழித்து, விழிகளும் திறந்தன. உடல் அசதியை அவர் தாள முடியவில்லை. தவித்தார். கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டே, "நான் பாவி !....மகாபாவி !....என் குற்றத்தை உணர்ந்தாலும், அதன் மூலம் கிட்டுகிற—கிட்ட வேண்டிய பரிகாரம்கூட எனக்குக் கிட்ட விதிக்காத மகாபாவி நான் ! ஐயையோ !....யாமினி ! நீ என்னை மன்னிக்கமாட்டாயா ? உன் சாபத்தீடு இன்னும் என்னவெல்லாம் செய்யவிருக்கிறதோ ?....நீ எங்கிருக்கிறாய் ?....அது தெரிந்தால், ஓடிவந்து உன் காலடியில் விழுந்து கதறுவேனே !....யாமினி !" என்று தம்முள் பேசினார். ஆனால் அவர் விடுத்த வினாக்களுக்கு விடையை யார் சொல்வது ?

விதியா ?

வினையா ?

தெய்வமா ?—

'என் ஊழ்தான் விதியாக வடிவம் கொண்டு, என்னையும் யாமினியையும் சந்திக்கச் செய்ததோ?....'

மீண்டும் கேள்விச்சரம் புறப்பட்டது.

அந்த ஒரு நாள் :

அன்றைக்கு அந்தக் கல்லூரிப் பேரவையில் மாணவத் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டிய தேர்தல் நாள். இரு இருமுனைப் போட்டி. ஒருபக்கம் செந்தில்நாயகம். எதிர்ப் பக்கம் வேறு ஓர் இளைஞன். இருதரப்புக்கும் ஆட்கள் சேர்ந்தனர்.

காலையில் கல்லூரி வாசல் தோட்டத்தில் ஏதோ யோசித்தவனாகச் செந்தில் நாயகம் நின்றான். அப்போது, "வணக்கம் !" என்ற யாழ் ஒலி கேட்டது. அங்கு யாமினியே யாழாக நின்றாள்—பாடும் யாழாக! தன்னிடமிருந்த ஓர் அச்சுத்

தாளை எடுத்து 'அவனிடம் நீட்டினுள். அவனுக்கு, காண்பது கனவல்ல என்ற மெய்யுணர்வு உண்டாவதற்குச் சில நிமிஷம் ஆகத்தான் செய்தது.

அந்த அச்சுத்தாள் காட்டிய விவரம் என்ன, தெரியுமா ?

'நம் செந்தில் நாயகம் அவர்கள் செல்வத்தால் மட்டுமல்ல, குணநலன்களாலும் குறிதவருப் படிப்பாலும் சிறந்து விளங்குகின்றவர். ஆகவே, நம் கல்லூரிப் பேரவையின் தமிழ்ப் பிரிவுத் தலைமைப் பதவிக்கு இவரைவிடச் சிறந்த நபர் கிடைப்பது துர்லபம். வாய்த்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், நம் வகுப்புச் சோதரர்களும் சோதரிகளும் திரு எம். செந்தில் நாயகத்துக்கே உங்கள் மேலான வாக்குகளைப் போட்டு ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கனம்,
ஏ. யாமினி."

உணர்ச்சி வசப்பட்ட செந்தில்நாயகம் மிகுந்த அன்பு பாராட்டி நன்றி தெரிவித்தார் யாமினிக்கு. "என்பால் உங்களுக்கு இருக்கக் கூடிய இந்த நல்லெண்ணத்துக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனே ?........எல்லாம் ஆண்டவன் சித்தம் !....என் மீது இருக்கும் உங்களது மாசு மறுவற்ற அன்பைக் கட்டிக் காப்பதில் நான் எப்போதும் கவனமுடன் இருப்பேன் !" என்ருன் அவன்.

யாமினி உழைத்தாள்.

அவள் உழைப்பு செந்தில் நாயகத்திற்கு வெற்றி சொன்னது.

அன்று தொட்டு, இருவரும் உளம் தொட்டுப் பழகினுர்கள். அவளுக்கு உறையூர்தான் பிறப்பிடம். அவனே தஞ்சாவூர்க்காரன். அவன் செல்வச் செழிப்பில் மலையாகி நின்ருன். அவளோ, ஒரு பள்ளி உபாத்தியாயரின் ஒரே பெண். மகளைப் பட்டத்துடன் பார்க்க விழைந்தது தந்தை மனம்.

இருவரும் ஒருவரை யொருவர் நேசிக்கத் தலைப்பட்டனர். அன்பில் உள்ளம் தொட்டுப் பழகிய பழக்கம், நேசத்தில் கொணர்ந்து நிறுத்தியது. இயல்பான பரிணும வளர்ச்சி

கொண்ட மனம் அதன் இயல்பைக் காட்டியது. ஷேக்ஸ்பியரின் நாடகக் காதல் ஜோடிகளின் பெயர்களை இவர்களுக்கு இட்டு மறைமுகமாக அழைத்து, மறைமுகமான மகிழ்வு எய்தினர் நண்பர்கள்.

இவற்றைப் பற்றித் துளியும் சட்டை செய்யவில்லை செந்தில் நாயகம்—யாமினி இணை. அவன் சந்தோஷத்தின் எல்லையில் நின்றான். ஆனால் யாமினி எப்போதாவது மனம் மறுகி நிற்பாள். 'அவர் பணக்காரப் பிள்ளை ஆயிற்றே! நாளைக்கு தன் அளவில் ஒரு பெரிய இடத்துப் பெண் கிட்டினால் என்னை மறுத்து விடலாமல்லவா?' என்று துணுக்குறுவாள். அப்போது அவளது எழிலார் வதனம் கறுத்துச் சிறுக்கும். அவன் அவளை அண்டி, விவரம் கேட்பான். எதைச் சொல்வாள் அவள்? சிரித்து மழுப்பி விடுவாள். அப்போதெல்லாம் தலைவியைக் காணும் தலைவனின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டிய தமிழ் மறையின் வரிகளை நல்ல குரலில் பாடிக் காட்டுவாள் அவள். நல்ல முறையில் அமைதியான புன்னகைப் பூங்கொத்துக்களை அவன் முன் சமர்ப்பித்து விட்டு, "நான் தெய்வமகள் அல்லள்; மயிலும் அல்ல; ஒரு மானுடப் பெண். ஆம்; நான் உங்களுடைய யாமினி!....ம்....அது என் வாழ்வு; கனவு!...அதுவே என் நல் விதியுங்கூட! ஆண்டவன் நம்மை ஆசீர்வதிப்பார்...இது உறுதி...!" என்று வியாக்யானம் செய்து நகைப்பாள் அவள்.

ஆனால், அவளது பொன்மலர்ச் சிரிப்பே விதியின் சிரிப்பாகி விடுமென்று அவன் நினைத்தானா?

ஊஹூம். இல்லை!....இல்லவே இல்லை!...

வழிந்தோடிய சுடுநீர்த்திவலைகள் அவருடைய விரல்களைச் சுட்டன. 'விரல்களை—இந்தக் கையை தீயிட்டுப் பொசுக்கத்தான் வேண்டும்! ஆம்; பொசுக்கத்தான் வேண்டும்! அப்படிப் பொசுக்கி விட்டால் மட்டும், தீய்ந்து பொசுங்கிய அந்தப் பேதையின் வாழ்வு மலர்ந்துவிடுமா?'—கிறுக்குக் கொண்டாற்போன்று அவர் கைகள் இரண்டையும் கபால

ஒட்டில் அடித்துக் கொண்டார். சோற்றுக் கையை தரையில் பலம் சேர்த்துக் குத்தினர். அவருக்கு அயர்வு கண்டது. சிக ரெட்டு அவரது மண்டை உடைக்கு உதவலாம்.

விரிந்து கிடந்த அந்தப் புத்தகம் அவரைக் கைதட்டிக் கூப்பிட்டது.

'அன்பின் ஆன்மாதான் வாழ்வு, அன்புக்கு வஞ்சிக்கத் தெரியாது. குற்றத்தை மறக்காமல் பழிவாங்கி மகிழ்பவன் மிருகமே ஆவான். அவன் விதி அவனைப் பழிவாங்கியே தீரும்....!'

'எனக்காகச் சொல்லப்பட்ட உபதேசமொழிகளா இவை...? என்னை மணப்பதாக வாக்குக் கொடுத்த யாமினி என்னுடைய குணத்தில் மாசு கண்டு, என்னை நிராகரித்த அந்தக் குற்றமே என்னுடைய விதியாக இயங்கியதன் பேரில் தான், நான் அவளுடைய விதியாகி விளையாடி விட்டேன். அந்தப் பழியுணர்ச்சியின் பாவத்துக்காக நான் இதோ, என் உடம்பையே உருக்கிக் குலைத்துக்கொண்டு விட்டேனே !....ஒரு குற்றம் செய்யப்போக, அதன் விளைவாக நிம்மதியிழந்தேன். ஒன்பது குற்றங்களைச் செய்யவும் எனக்கு நானே வினை இழைத்துக் கொண்டேன் !....

'ஆம்; யாமினிதான் விதியா ? இல்லை; அவள்தான் வினையா !....

'எப்படியோ, நான் இத்தனை காலமும் நரகவேதனை அனு பவித்துவிட்டேன். அவள் தெய்வமா ?...

'இல்லாவிட்டால், என் மனைவி மங்களம் இத்தனை காலம் சும்மா இருந்து, இப்போது கருத்தரித்து, அம்மகிழ்வின் நிலை நீடிப்பதற்குள், அவளுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டிருக்க முடியுமா ?....

'இனியும், என் பாவத்துக்குக் கழுவாய் தேடிக் கொள்ளா மல் இருந்தால், அப்புறம் நான் என் மங்களத்தை இழந்துவிட வேண்டியதுதான்: அப்பால். என்னை நானே இழந்துவிடவும் வேண்டியதுதான் !...'

# 38

சிகரெட்டின் இறுதி முனையில் இருந்த நெருப்பின் ஜ்வாலை அவரைப் பயமுறுத்தியது. அதை வீசினார்; பீரோவை நாடினார். அவசரமாக, அன்று வந்த யாமினியின் தபால் கவரை எடுத்துப் புரட்டினார். தபால் தலைமீது குத்தப் பட்டிருந்த தபாலாபீஸ் முத்திரையை உன்னிப்புச் சேர்த்துப் பார்த்தார். 'கீழ்ப்பாக்கம்' என்ற பெயர் இழுபறியாகத் தெரிந்தது. இதை வைத்துக் கொண்டு யாமினியை எப்படித் தேடுவதாம்?....'முருகா!...'

திடீரென்று அவருக்குக் குமட்டல் கிளம்பியது.

அவர் கண் வளரத் தொடங்க, அப்புறம் நாற்பது நிமிஷங் கள் வரை தேவைப்பட்டன.

## பகுதி: ஏழு

## சரவணப் பூந்தொட்டில்!

**வி**டிந்ததும், செந்தில் நாயகத்துக்காக வெந்நீர் தயாராகக் காத்திருந்தது.

குளித்தார்.

நீறு தரித்தார்.

பூசனைக் கூடத்தில் என்றுமில்லாத பயபக்தியுடன் அவர் பிரவேசித்தார். இடுப்பு வேஷ்டியும் ஜரிகைத் துண்டுமாக இருந்தார். தியானத்தில் அமர்ந்தார்.

நெஞ்சில் நினைவும், நினைவில் நெஞ்சுமாக, ஒன்றுகூடிய உள்ளப் பக்குவத்துக்கு அடிகோல முனைந்திட்ட ஓர் எத்தனப் பான்மையுடன் அவர் கைகள் இரண்டையும் கூப்பித் தொழுதார். விழிகள் இணைந்தன. மனத்தில் சலனம் கழிய நேரம் அதிகமாகத் தேவைப்பட்டது. கார்த்திகை மைந்தனின் நாமாவளியை உச்சரித்தார். உச்சியில், கபாலத்தில் உதயமாகத் தொடங்கிய ஒருவகைச் சாந்தி பையப் பைய இதயத்தைச் சூழ்ந்தது. 'என்னைத் தன்யனுக்கு. என் பாவங்களைக் கழுவு. என் யாமினியை ரட்சித் தருள், மறை நாயகனே!' என்று எலும்பு உருக வேண்டி, கண்கள் வலிக்க அழுது, நெஞ்சு படபடக்கப் புலம்பினர்.

துள்ளி வந்த வேல் ஒன்று அவரது நெஞ்சிடைப் பாய்ந்ததாக அவரது உள்ளுணர்வு சொன்னது. அவருடைய உடம்பெங்கும் ரோமாஞ்சலி கிளர்ந்தெழுந்தது. இமைமயிர்களில்

ஈரம் சொட்டியது. மெய்ம் மறந்து அப்படியே வீற்றிருந்தார். உடனே அவருடைய உதடுகள் அசையலாயின. ஒலி கூடியது.

''திருந்தப் புவனங்க ளீன்ற பொற்பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறியறுவர் கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றேதும் குவலயமே !....''
பாட்டு நின்றது.

கண்களைத் துடைத்துக்கொண்டார். மென்சிரிப்பு பூம்பாளையாய் வெடித்தது. இதுவரை அனுபவித் தறியாத ஒரு பேரமைதி தம் நெஞ்சிடைப் பூத்திருப்பதைப் போலவே அவர் உணரத் தலைப்பட்டார். 'முருகப் பெருமானே !...கந்தா.... கடம்பா !....' என்று பெயர்ப் பஜனை செய்தவாறு, அங்கிருந்து நகர்ந்தார். மாடிக்கு விரைந்தார். அன்று வந்த யாமினியின் கடிதத்தை அப்பொழுதும் வாசிக்க வேண்டுமென்ற ஆவல் உந்தியது. பீரோவைத் திறந்தார். அந்தக் கடிதக் கூட்டை எடுத்தார்; பிரித்தார்; யாமினியின் கடிதம் அதில் இல்லை. வெறும் கூடுதான் இருந்தது.

'எங்கே அந்த லெட்டர் ?'

ஆற்றாமையின் நெருக்கம், அவர் தலையைச் சுற்றியது.

மணி ஏழு.

அப்போது, பலகாரத் தட்டும் கையுமாக மாடிக்கு வந்தான் காசி. வெள்ளித்தட்டைக் கழுவி வைத்தான். பலகாரம் வைப்பதற்கு அனுமதி கோரினான். எல்லாம் நிறைந்த பிறகு அவன் சொன்னதாவது :

''கம்பெனியிலே வேலைபார்க்கிற குயில்மொழி தங்கச்சி உங்களைப் பார்க்கிறதுக்கு நேத்து பொழுதோட வந்திச்சு. கம்பெனியிலே ஏதோ தவசல் போலிருக்கு....அங்கே இருக்கிற யாரோ ஓர் இளவட்டம் இதைக் குறிச்சு ஏடா கூடமாய் கண்டபடி ஏசிடுச்சாம் ! உங்களுக்கு போன் பண்ணினதைக் கூட அந்தப் பிள்ளையாண்டான் தடுத்து, போனைப் பறிச்சுப்பிட்

டானும் ! அந்தப் பையன் பேர் என்னவோ சொல்லிச்சு; மறந்துப் பிட்டேனுங்க. முதலாளி !...இப்படி இன்னும் ரெண்டு பேர் வழிங்க இருந்ததாக்க, கெடு தப்பி அபூர்வமாய்ப் பெய்கிற மழைகூட பேயாமலிருந்துப் பிடுமுங்க !...."

புதிராய்க் குழம்பிய இரு குழப்பங்களுக்கு மத்தியில் ஓர் உள்ளம் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது.

★ ★ ★

ஆசையை இலட்சியமாகக் கொண்டால், அவலங்கள் தாம் எஞ்சும். அன்பை இலக்காக்கிக் கொண்டாலோ, இன்பங்கள் மிஞ்சும் !—இது உலக இயல்பு. வாழ்வியல் தத்துவமும் இதுவேயாகும். இவ்வுண்மையை அனுபவார்த்தமாக உய்த்துணரத்தான் மனிதனுக்குப் பிறவி கிட்டுகிறது. அவனவன் வினைக்கேற்ப, விதி அவனை இயக்குகிறது. ஆடுகிறான்; வினையாடுகிறான். எல்லாம் அடங்கி ஒடுங்கிய பின், அவன் தன்னை வைத்து, தன் கதையை வைத்து வாழ்வின் தத்துவத்தை எடைபோடுகிறான். அதுவரை மூடிக்கிடந்த நெஞ்சமும் கண்களும் அப்போதுதான் திறந்து கொள்ளுகின்றன. செய்த பாவங்கள் அவனைப் பேய்களாக அலைக்கழிக்கையில், அவனால் அவற்றைச் சாட முடியாத நிலையில், அவன் அவற்றைத் தாங்கிக் கொள்ளும் ஜீவனற்ற கதியில்—தன்னை உணர்ந்து, பாவமன்னிப்புக்காகத் தவம் கிடந்து, கடைசியில் தன்னைப் படைத்த கடவுளைத் தஞ்சமடைகிறான். ஆசைகள் இருந்த இடம் காணவில்லை. அன்பு தன் இருப்பிடத்தை அம்மனித மனத்துள் முழுமையாகப் பற்றிக் கொண்டுவிடுகின்றது ! இப்போது, விதியின் குரலைக் கட்டுப்படுத்திவிட்டு, தெய்வத்தின் சிரிப்பு ஓங்குகிறது !....

இது மனிதனின் கதை; மனித மனத்தின் கதையும் இதுவேயன்றோ ?

இப்போது புதிய மனிதராகப் பிறவி கொண்ட மாதிரி ஸ்ரீமான் செந்தில் நாயகம் விளங்கினர். திருநீற்றுப் பட்டைகள் நெற்றித் திட்டில் பளிச்சிட்டன. நூதனமான கலை கட்டி

யிருந்தது. முகத்தில், அன்பின் ரேகைகள் அழகுற ஓடிக் கிடந்தன. உலகம், வாழ்க்கை, விதி, தெய்வம் போன்ற தத்துவ விளக்கங்களைப் பற்றிய சிந்தனைகள் அவர் அறிவில் மோதின. மேற்படி சிந்தனைகள், அவர் வாழ்ந்த வாழ்வின் தலைப்புக்கு அவரை இழுத்துச் சென்று, பிறகு தொட்ட இடத்தில் விடவும் செய்தன.

இந்நிலையில்தான், அவர் தம் கம்பெனி வாசலில் வந்து இறங்கினார். டிரைவர் பின் கதவைத் திறந்துவிட்டான். அவர் முகப்பில் வந்து நின்றார். இளங்கதிர்களின் பொன்னொளியைப் போற்றிப் பூரித்தவாறு உள்ளே அடியெடுத்து வைத்தார். வழக்கமாகத் தென்படும் மனச் சோர்வு, உடல் தளர்ச்சி இப்போது விடைபெற்றிருப்பதாகவே அவருக்கு ஓர் உணர்வு ஊறியது. நிமிர்ந்த நன்னடையுடன் நுழைந்தார்.

வரவேற்பறையில் இருந்த குமாரி குயில்மொழி பணிவுடன் எழுந்து வணங்கினாள்.

அவளைக் கண்டதும் ஏன் அவரது தலை அப்படித் தாழ்ந்து விட்டது ?

பதில் வணக்கம் செலுத்திவிட்டு விரைந்தார். சில கணங்களாய் அதுவரை நிம்மதி கண்டிருந்த நெஞ்சை குற்ற மனப்பான்மை ஆட்கொண்டது. திருமால் மருகனை நெஞ்சிலிறுத்தியபடி அவர் தம் இருக்கையைப் பற்றினார். ஜரிகை அங்கவஸ்திரம் அதன் இடத்தை ஆட்கொண்டது

'லித்தோ' அச்சு முறைக்கான இயந்திரவகைகளுக்காக மேற்கு ஜெர்மனிக்கு எழுதப்பட்டிருந்த கடிதத்துக்கு வந்திருந்த பதில் கடிதத்தை மானேஜர் முத்துலிங்கம் கொண்டுவந்து காட்டினார். "பேஷ்! உடனேயே ஆர்டர் செய்துவிடுங்கள்," என்றார் செந்தில்நாயகம்.

சம்பளப் பட்டுவாடா ஆக வேண்டிய விஷயத்தையும் முறைப்படி வெளியிட்டார். அதற்கும் 'ம்' கொட்டித் தலையாட்டினார். நாளைக் கழித்து ஒரு செக்கில் கையொப்பம் இட வேண்டும். தீர்ந்தது கடமை!

வரும்போது, ஒரு முடிவையும் நிர்ணயித்துக் கொண்டு தான் அவர் கம்பெனிக்கு வந்தார். எப்பாடு பட்டேனும் யாமினியின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்துவிடவேண்டும்; அதற்காக எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்றே அவர் கருதினார். 'யாமினியைச் சந்தித்து, அவளிடம் மன்னிப்புக் கேட்டால்தான் என் பாவத்துக்கு விடிவு ஏற்படும்....நான் செய்த அந்தப் பாவம்....ஐயோ....நினைக்கவே நெஞ்சு பதறுகிறதே! உயிர்க்கழுவில் துடிக்கிறதே உள்ளம்!....பகவானே!....' என்று மனம் புழுங்கினார்.

# பகுதி : எட்டு

# "லவ் !"

யாமினியின் இருப்பிட விவரத்தை அறிவதற்கான வழி வகைகளைப்பற்றி மானேஜரிடம் கலந்தாலோசிப்பதில் தாழ்வு மனப்பான்மை கொள்ளத் தேவையில்லை என்றே நினைத்திருந்தார் செந்தில் நாயகம். அதற்கான பேச்சை எப்படி நூலெடுத்துத் தொடங்குவது என்பதுதான் ஒரு பிரச்சினையாகத் தோன்றியது. இருந்தாலும் நிலையை இனியும் கடத்திவிட ஒப்பாததால், உடனடியாகவே பேச்சைத் தொடர விழைந்து, ''சும்மா உட்காருங்க பிள்ளை,'' என்று அனுமதி வழங்கவே, முத்துலிங்கம் அமரிக்கையாக நாற்காலியில் உட்கார்ந்தார்.

அதற்குள் பாங்க் ஒன்றிலிருந்து செந்தில் நாயகத்திற்கு 'போன்கால்' வந்தது. உரிய பதிலைச் சொல்லிவிட்டுத் திரும்பினர். பிளாஸ்கை எடுத்தார். முத்துலிங்கம்தான் மூக்குக் கண்ணாடியை இழுத்துவிட்டபடி தம்ளரில் காப்பியை ஊற்றிக் கொடுத்தார். செந்தில்நாயகம் ஆவி பறக்கக் குடித்தார். பிள்ளைவாளுக்கு அவ்வளவு தாங்கவில்லை.

''பிள்ளைவாள்! உங்ககிட்ட ஒரு விஷயத்தைப் பேசணும். அதற்கு இப்போ சந்தர்ப்பமும் ஏற்பட்டிருக்கு. அதற்கு உண்டான அவசரமும் வந்திருச்சு!....'' அவர் தயங்கினர்.

''சொல்லுங்க!....'' பிள்ளையும் தயக்கத்துடன் தூண்டினர்.

''இருபது வருஷத்துக்கு முந்தின ஒரு கதை. ரொம்பவும் அந்தரங்கமான ஒரு விஷயம். இப்போ உங்ககிட்ட துணிஞ்சு சொல்லுறேன்....வந்து...நான் திருச்சியிலே வாசிக்கிறப்ப, யாமினின்னு ஒரு பொண்ணை லவ் பண்ணினேன்... அவளும் என்னை நேசிச்சா. காதலையும் கனவுகளையும் வளர்த்துக்கிட்டு உயிருக்குயிராய்ப் பழகினோம். ஒரு சோதனையாட்டம் விதி விளையாட, அவள் திடீர்னு என்னை நிராகரிச்சிட்டா. வெண்ணெய் திரண்டு வாரப்போ தாழி உடைஞ்ச நடப்புத்தான்!....

''ம்....அப்புறம் நான் மங்களத்தைக் கல்யாணம் செஞ்சுகிட்டேன். யாமினிக்கு திருமணம் செட்டில் ஆச்சு. எனக்கும் பத்திரிக்கை அனுப்பிக்க மறக்கல்லே யாமினி!....அப்புறம்... அப்புறம்தான்.. நான் ஒரு பாவத்தைச் செஞ்சிட்டேன்...! அவள் விதியாகி என்னைப் பழிவாங்கினுள்; பதிலுக்கு நான் விதியாகி அவளைப் பழிவாங்கினேன்!...நான் கெடுமதிக்காரன்!....நான் செஞ்ச அந்தப் பாவத்தை மட்டும் கேட்டுப்பிடாதீங்க, பிள்ளைவாள், கேட்டுப்பிடாதீங்க! நான் செஞ்ச துரோகமே என்னோட வினையாகி, நான் அனுபவித்தாகவேண்டிய விதியாகவும் அதுவே என் தலையெழுத்தாகவும் மாறி, என்னை ஆட்டிப் படைச்சு வருது இத்தனை காலமாய்!....இனிமேலும் என்னல் இந்த நரகவேதனையைத் தாங்கவே முடியாது!

''ஆனபடியினலே, நீங்க எப்படியும் யாமினியைக் கண்டுபிடிச்சுத்தான் ஆகணும்!...அவள் இங்கேதான் இருக்கணும். எனக்குச் சமீபத்திலேவந்த ஒரு லெட்டரைக் கீழ்ப்பாக்கத்திலேதான் அவள் போஸ்ட் செய்திருக்கா... அவளை அடையாளம் கண்டுகொள்ளுகிறதற்காக அவளோட போட்டோவையும் எடுத்தாந்திருக்கேன்! அவளைச் சந்தித்து, அவகிட்டே மன்னிப்பு வாங்கிட்டேன, நானும் நாலுபேரைப்போல நிம்மதியாய் இருக்க முடியும்! நீங்களும் தெய்வமும்தான் எனக்கு அனுசரணையாய் இருக்கவேணும்!''

இருமல் வந்தது. பேச்சும் நின்றது, அத்துடன்.

உள்பையிலிருந்த சாவியை எடுத்துத் தோல்பையைத் திறந்து, யாமினியின் நிழற்படத்தை எடுத்து ஒருமுறை பார்த்துவிட்டு, அப்படியே ஒருகணம் சிலையாகிப்போய், பிறகு சிலைக்கு உயிர் கொடுத்து சுயநினைவு மீட்டி, அப் படத்தைப் பிள்ளையிடம் கொடுத்தார். பிள்ளை அந்தப் புகைப் படத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் வெட்கப்பட்டவராக அல் லது அப்படிப் பார்ப்பது அநாகரிகம் எனக் கருதியவராக அதை அப்படியே வாங்கி உள்பையில் வைத்துக்கொண்டு சட்டைப் பொத்தான்களைப் போட்டுக்கொண்டார்; எழுந்து சென்றார். முதலாளியின் உத்தரவுபிரகாரம் குயில் மொழியை உடன் அனுப்புவதாகவும் கூறிச் சென்றார்.

செந்தில்நாயகம் சுழல் நாற்காலியில் 'வாகாக'க் குந்திக் கொண்டார். நெஞ்சில் மலர்ந்த சிரிப்பு, உதடுகளை எட்டிப் பார்த்தது. இனி தனக்குக் கதிமோட்சம் கிட்டிவிடும் என்ற நம்பிக்கையின் லயத்தில் அவர் தம்மை மறந்திருந்தார்.

அப்போது, அவர்முன் யாமினியின் உருவெளித் தோற் றம் மாயமான எழில்வடிவம் அழகே உருவாகித் தோன்றி நகைத்தது. "என்னிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டால், என் வாழ்வு விடிந்துவிடுமென்றும், அதன் மூலம் உங்கள் மனச்சாட்சியும் உங்களை மன்னித்துவிடுமென்றும் மனப்பால் குடிக்கிறீர்களா?" என்று கேட்டது.

பதறினார் செந்தில்நாயகம். 'ஆ' என்று அதிர்ந்தது மனம். முகம், கழுத்து, நெற்றி எல்லாம் நீர் சுரந்தது. 'அப்படியென்றால்...அப்படியென்றால்...?'—மேற்கொண்டு அவ ருக்கு எண்ணத்தை முடிக்கத் திராணி இல்லை.

'ப்ளேயர்ஸ்' பற்றியது.

புகை மணத்தது.

இதயம் புகைந்தது.

அறையின் அரைக்கதவு கிறீச்சிட்டது.

குயில் மொழி வந்து நின்றாள். மல்லிகைப் பூவுக்கென்று இப்படியொரு சுகந்தமா?...

பேஷ், பேஷ்!

அவளை முகத்துக்கு முகம் பார்க்கும் வலுவைப் பெற்றார் அவர்.

எளிமையான செளந்தர்யம் திகழ அவள் காணப்பட்டாள். நெற்றிப்பொட்டு தூய்மையின் களையுடன் விளங்கியது.

"நீ....நீங்க சினிமாவிலே 'பார்டேக்' பண்ணுற விஷயம் எனக்கு ராத்திரிதான் தெரிஞ்சுது! நீங்க அந்த ஆசையை 'அவாயிட்' பண்ணமுடியாதா, குயில் மொழி?" என்று ரொம்பவும் சுவாதீனமான உரிமையுடன் வேண்டுதல் பாவனையில் வினவினார் அவர்

"அது எனக்கு ஓர் உபதொழில் மாதிரி....அதிலே வரக்கூடிய உபரிவருமானம் இருந்தாத்தான், எங்க குடும்பம் கடன் கப்பி இல்லாமக் காலந்தள்ள முடியுமுங்க!" தாழ் குரலெடுத்து விவரித்தாள்.

"அப்படியா? இங்கே என்ன சம்பளம்?"

"நூறு!"

"சினிமாவிலே எவ்வளவு கிடைக்கும்?"

"ஏறத்தாழ எழுபது எண்பதுக்கு குறையாதுங்க!"

"அப்படியா? உங்களுக்கு செப்டம்பரிலேயிருந்து இருநூறு ரூபாய் போட்டுத்தரச் சொல்லுகிறேன்! நீங்க சினிமாத் தொழிலை மறந்திடுங்க."

"மறந்திட்டு....?"

"இங்கேயே வேலை பார்க்கலாம்!"

அவரைத் தவறாக எடை போட்டுவிட அவளுடைய பெண் மனம் தயாரானது. 'ஒரு மாதிரியாகப்' பார்த்தாள்.

அவள் பார்வையின் பொருளை அவரால் ஊகம் செய்ய முடியாமல் போய்விடுமா? "உங்களோட நல்வாழ்வுக்காகத்தான் சொல்கிறேன்....நீங்க சினிமாவை மறந்திடுங்க. உங்

களைப் போலுள்ளவங்களுக்கு அது ஒரு சோதனைச்சாலையாட்டம்!....'' என்று கூறி, மேலே தொடர்ந்து பேச முனைந்த போது, அவள் வீராவேசம் பூண்டு குறுக்கிட்டாள்.

''என்னை நான் காப்பாத்திக் கொள்வேனுங்க....நீங்க சொல்லத் தயங்குற விஷயம் எனக்குப் புரிஞ்சிட்டுதுங்க. ஆனா, நான் இந்தச் சினிமாத் தொழிலை எந்தக் காரணத்தை முன்னிட்டும் விட்டுப்பிடுகிறதாக இல்லீங்க! பலஹீன மனமும், மோக வெறியும், பண ஆசையும் எனக்கு இல்லீங்க! என் மனசிலே உள்ளதை இன்னம் எப்படி விளக்கிச் சொல்லுறதுன்னுதான் மட்டுப்படலீங்க! என் மனமும் என் மனச்சாட்சியும் என்னை எப்பவும் கட்டிக் காவல் செய்யுமுங்க! இது உறுதிங்க!... என்பேரிலே உங்களுக்கு இருக்கிற நல்லெண்ணத்தை வணங்குறேனுங்க!. .'' பெண்மையின் கம்பீரமான வலுவுடன் உரைத்தாள்.

அவள் கழுத்துப் பட்டையைத் துடைத்துக்கொண்டாள். பிஞ்சு முடிகளைக் கோதித்துடைத்தாள். அவளுடைய பேச்சின் திண்மை அவளுடைய கெட்டியான பண்பு நலத்துக்குக் கட்டியம் கூறியதை அவர் அறிந்தார். நேற்றைய இராப்பொழுதில் தாம் தப்பித்த ஒரு கண்டத்தை மாபெரும் அதிருஷ்டமாகவே அவர் மதித்தார். 'ஒருவேளை இந்தப் பெண்ணிடம் அந்தப் பயல் மகேந்திரன் என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகச் சந்தர்ப்பம் வாய்க்கையில் சொல்லிவிட்டானென்றால்....?' தீர்வு காண முடியாத கலக்கம் அவரை மடக்கியது.

''ஸார்!''

''என்னம்மா?''

சொந்த மகளிடம் கேட்பது போன்ற பாசத்துடன் அவர் கேட்டார்.

''என்னோட சொந்த விஷயம் ஒண்ணைப்பத்திச் சொல்லணும்....வீட்டுக்குச் சாயந்திரம் வரட்டுமா?''

''ஏம்மா, இங்கேயே சொல்லேன்...யாருந்தான் இல்லையே, குயில்மொழி!''

குயில்மொழியின் கண்கள் கலங்கின. ''ஸார்! நம்ம கம்பெனியிலே காஷிலே நல்லசிவம் இருக்கிறரே, அவர் என்னை நேசிச்கிருர். எனக்கு அவரைப் பதிலுக்கு நேசிக்க மனம் வரல்லே!..அதுக்காக, என்னுடை எதிர்காலத்தையே பொசுக்கிப்பிடுகிறதாகச் சபதம் செஞ்சு, நான் எக்ஸ்ட்ராவாக பிலிம்லே நடிக்கிறதை வச்சு சம்பந்தப்படுத்திக் கன்னுபின்னுன்னு ஏசினுர். உங்களுக்கும் நேற்று பங்களாவுக்கு டயல் பண்ணினேன். அதையும் டிஸ்கனெக்ட் செஞ்சிட்டார். கடைசியிலே, வெளியே போனதும், அவரை 'ஷூ' பண்ணப் போயிட்டேன். அதுக்குள்ளே, வந்து எல்லாரும் தடுத்து, அந்த ஆளை நல்லாத் திட்டினுங்க...! கடைசியிலே எங்கிட்ட வந்து அந்த ஆள் எக்ஸ்யூஸ் கேட்டுட்டுப் போயிட்டார்!......'' என்று நின்ருள். ''பெண் பயந்தால் அப்புறம் அவளால் இந்த உலகத்திலே வாழவே முடியாதுங்க...!''

செந்தில்நாயகம் வாயில் ஈ நுழைந்தால்கூட அறிய முடியாத அத்துணை மயக்கத்தில் கட்டுண்டிருந்தார். மறுபடியும் அவரது மனச்சாட்சி விசுவரூபம் எடுக்க ஒரு வாய்ப்பை உண்டாக்கிவிடத்தான் இவள் வந்தாளா?

''படித்தும் முட்டாள்களாக—இதயமற்ற பிண்டங்களாக இப்படி இருக்கிருர்களே உலகத்திலே. அந்த ஆள் வந்திருக்கிருரா?...''

''அவர் வரவில்லை. நீங்கள் அவரை எதுவும் கேட்காதீங்க. என் சொந்த விஷயத்தை நான் பார்த்துக்கொள்வேனுங்க!''

அவர் சிரித்தார். வறட்சிதான் மேலோங்கியது. ''ரொம்பவும் அதிசயமான பெண்ணுகை இருக்கீங்க நீங்க!...ம்...ஆல்ரைட்!...வேற விசேஷம் ஒண்ணுமில்லையே?''

''ஊஹூம்!''

''சரி, நீங்க போகலாம்!''

அழைப்பின் மணியை அழுத்தினர்.

பையன் மணி ஒயிலாய் ஓடி வந்தான்.

காப்பி கிடைத்தது அவருக்கு.

மணிப் பயலுக்கு அரை நாள் லீவு கிடைத்தது!

பாஸ்டர்ராக் எழுதிய 'தி லாஸ்ட் சம்மர்' என்ற நாவல் கடிகாரத்தின் முட்களை நகர்த்தி விளையாடியதுடன் நிற்காமல், செந்தில்நாயகத்தின் பொழுதையும் அமைதி கெடாமல் நகர்த்தி விளையாடியது!

# பகுதி : ஒன்பது
# பிரளயம் ஆன நெஞ்சம்

மத்தியான்னச் சாப்பாட்டைக் கம்பெனிக்கே கொண்டு வந்தான் காசி.

உண்டு முடிந்ததும், களைப்புத்தீர ஓய்வு எடுத்தார் செந்தில்நாயகம். பிறகு, 'செக்' இதழ் இரண்டில் கையெழுத்துச் செய்தார். மாலைக்காப்பி அருந்தினர்.

அப்போது, மானேஜர் முத்துலிங்கம் வந்தார்.

"அந்த அம்மாகிட்டேயிருந்து உங்களுக்கு வந்த லெட்டர்களிலே அட்ரஸ் இல்லையா?"

"இல்லை!"

"இப்போது வந்த லெட்டரிலேதான் இல்லையா? இல்லை, முன்வந்த தபால்களிலேயும் இல்லீங்களா?"

"எல்லாவற்றிலுமே இல்லை! எதிலுமே இல்லையே!"

"அந்த அம்மாள் பிறந்த இடம்?"

"திருச்சியில் உறையூர். அங்கும் யாமினி இல்லை!"

"புகுந்த இடம்...?"

'புகுந்த இடம்' என்று ஒருதரம் தமக்குள் விரக்திச் செறிவுடன் சொல்லிக்கொண்டு, கண்களை மூடிய கதி

யுடன், ''மதுரை என்று கேள்வி !...'' என்று நிறுத்திஞர். கண்களை விலக்கிவிட்டார்.

''சமீபத்திய லெட்டர் கீழ்ப்பாக்கத்தில் போஸ்ட் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னீங்க !''

''ம் !''

''அப்படின்ஞ, அந்த அம்மா இங்கே மெட்ராஸிலே தான் இருக்கவேணும்னு தோணுது !''

''இருக்கலாம் ; இல்லாமலும் இருக்கலாம் !''

''அட்ரஸ் இல்லாமல் அவங்க லெட்டர் போடுற மர்மம் என்னுங்க ?''

''அதுதான் என் விதி, பிள்ளைவாள்...அதுதான் என் வினையுங்கூட !''

''ஐ வில் ட்ரை மை பெஸ்ட் !...எதுக்கும் நீங்க மனசைத் தளரவிட்டுப்பிடக்கூடாது. உங்களுக்கு அட்வைஸ் பண்றது முறையாயிருக்காது !...நம்ம கம்பெனிப் பையன் மணி கீழ்ப்பாக்கத்திலேருந்துதான் வருறுன். அவன் கிட்ட அந்த அம்மா படத்தையும் காட்டி, அந்த அம்மா தென்பட்டால் இடம் கண்டுக்கிட்டு வந்து சொல்லும்படியும் கூறியிருக்கேன் ஸார் !'' என்று பெருமையுடன் இயம்பிஞர் பிள்ளை.

செந்தில்நாயகத்திற்கு அஸ்தியில் ஜுரம் கண்டது. 'பொடிப்பையனுக்குக்கூட விஷயம் தெரிஞ்சாச்சா ?' என்ற ஐயத்துடன் பரிதாபமாகப் பார்த்தார். ''என் உறவுக்காரங்க அந்தப் படத்திலே உள்ளவுங்கன்னு சொல்லியிருக்கேனுக்கும் பையன்கிட்டே !'' என்று திருத்தமுடன் விளக்கிஞர் அவர்.

இப்போது ஓரளவு தெளிவு கண்டது செந்தில்நாயகத்தின் முகத்தில். அதே தெளிவுடன், கடற்கரை வழியே காரைச் செலுத்தி, வீட்டை நோக்கி இலக்கு வைத்தார். என்ருலும் மனத்தின் போராட்டம் நிற்கவேயில்லையே !...

வழியில், மெரிஞவில் ஒரே ஜனத்திரள். கிழ்வசத்தில் காரை மடக்கியபோது, குழந்தையும் கையுமாகக் குறுக்கிட்டுப்

பாய்ந்த ஒரு பெண்ணைக் கண்டவுடன், "யாமினி !...யாமினி!" என்று கூச்சல் போட்டபடி, காரை நிறுத்தி, இறங்கி விரைந்தார்.

குறுக்கு மறித்துப் பாய்ந்த ஆபீஸ் பையன் மணியைத் தான் அவர் காண முடிந்ததே தவிர, அந்த யாமினியை—அல்லது யாமினி என்று எண்ணிய அந்த ஒரு பெண்ணை—குழந்தையும் கையுமாகத் தோன்றி மறைந்த அந்தப் பெண் உருவத்தைக் கடைசிவரை அவரால் காண முடியவே இல்லை !

ஆழ்கடலை ஏமாற்றம் கக்க நோக்கினர்.

நெஞ்சம் பிரளயம் ஆயிற்று !

நிலவொளியில் தொடுவானம் கள்ளநகை சிந்திக் கை கொட்டி ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தது !...

ஒரே முகச் சாயல் கொண்ட இருவேறு பெண்மணிகளின் ஆள்மாருட்டத்தின் புதிர்க்கதை ஒன்று 'மினர்வாவில்' ஓடியது.

செந்தில்நாயகம் போய்ப் பார்த்துவிட்டு வந்தார். எல்லாத் துன்பங்களையும் மறந்து உறங்க உதவியது அப்படம் என்றே சொல்லவேண்டும். துயில் நீத்து எழுந்ததும், அவருள் தீர்க்கமானதொரு முடிவு உருவாகியிருந்தது. 'மெரினுவிலே கண்ட பெண் வேறு யாரோ? அவள் யாமினி அல்ல !...யாமினியாகவும் இருக்க முடியாது !... யாமினியின் முகஜாடை கொண்ட வேறு யாரோ ஒருத்தி !...யாமினியாவது குழந்தையுடன் காணப்படுவதாவது ?...என்னைக் குழப்புவதற்கென்றுதான் கடவுள் என்னென்னவோ காட்சிகளையெல்லாம் படம் போட்டுக் காட்டுகிருரே !...பாவம்... யாமினி !...பாவம், என் யாமினி !...ஐயோ, நான் பாவி !... எனக்கு மன்னிப்பே கிடையாது !...' கழிவிரக்கத்தின் கண்ணீர் மாலையாக நீண்டது.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளின் முந்தியக் கதையை அவர் நினைக்க வேண்டியவரானர். கடந்த சில மணி நேரங்களாக, அவர் கழிந்த காலத்தில்தான் சஞ்சாரம் செய்ய

லாளுர். யாமினியின் தனிப்படம் ஒன்றை அவர் இருப்புப் பெட்டகத்திலிருந்தது தேடி எடுத்ததிலிருந்து அவர் இன்னமும் 'அந்த நாட்களின்' எல்லையிலேயே இருந்தார்.

ஒரு முறை, உறையூர் வீட்டில் யாமினி மட்டுமே தனித்திருந்தாள். விதவைத்தாய் கோயமுத்தூருக்குச் சொந்தக்காரர் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். அவ்வப்போது வரும் வழக்கத்தை ஒட்டித் தெப்பக்குளம் பகுதியிலிருந்து செந்தில் நாயகம் அங்கு வந்தான். ஞாயிற்றுக்கிழமை நாள். அவள் இயல்பான உடைகளுடன் சாதாரணமாக இருந்தாள். ஒப்பனை எதுவும் இல்லாமல் இருந்தாள். இருந்தாலும், அவளுடைய இயற்கையான எழில் அவளுக்குரிய அந்தத்தையும் அந்தஸ்தையும் நல்கத் தப்பவில்லை. வந்த காதலனை வரவேற்ருள். காப்பி போட்டுக் கொடுத்தாள். சர்க்கரை போட அவள் மறந்ததை அவனும் மறந்துவிட்டான். அமர்ந்திருந்தவன் அப்படியே அசந்துவிட்டான். அரை மணி கழித்து எழுந்தான். "நண்பர்களுடன் எங்கெல்லாமோ இரவு அலைந்த அலைச்சல்!" என்ருன்.

அந்தியில் மலைக்கோட்டைப் பக்கம் அவனும் அவளும் புறப்பட்டார்கள். தத்துவப்பாடத்தின் புதிய ஆசிரியரைப் பற்றிப் புகழ்ந்தான் செந்தில்.

அவள் அவனிடம், "மிஸ்டர் செந்தில், நீங்கள் ஹாஸ்டலைவிட்டு வந்தது அவ்வளவு உசிதமாகப்படவில்லை எனக்கு!" என்ருள். மார்பகச் சேலையைக் கொய்து போட்டுக் கொண்டாள். வண்ணத்துப் பூச்சிகள் குதித்தன!

"சட்டதிட்டங்களென்ருல், எனக்கு எப்போதும் ஒத்து வருவதில்லை. நான் வளர்ந்த விதம் அது!..." என்று சொல்லிச் சிரித்தான். ஜமீன் பரம்பரையில் வந்த பிள்ளைக்கு என்ன குறைவு!...

மலைக்கோட்டை உச்சியில் விபீஷணன் பாதத்தடியில் நின்று அவளை 'ஸ்னப்' ஒன்று எடுத்தான் அவன். அந்தப் படம் வெகு சுகமாக விழுந்துவிட்டதாக அவன் சொன்ஞன்.

இருவரும் திரும்பினார்கள். படம் பார்த்தார்கள். அவளைக் கொண்டு வந்துவிட உறையூர் வந்தான் அவன். "உன் அம்மா இரவு வரமாட்டாங்க, இல்லையா?" என்று கேட்டான், வீட்டில்.

"ஏன் ?" என்ற பாவனையில் அவள் மென்முறுவல் பூத்தாள், இயல்பான தோரணையில்.

ஆனால்....

அவனே அவளை நெருங்கி நெருங்கி வந்தான். மங்கிய ஒளியிலும் அவள் கவனமாகவே இருந்தாள். விலகிக் கொண்டாள். அவன் நோக்கம் அவளுக்குப் புரிந்தது. "மிஸ்டர் செந்தில்! நீங்கள் எல்லாவற்றிற்கும் அவசரப்படுகிறீர்கள். நாம் வெகு விரைவில் காதலர்கள் நிலையிலிருந்து ப்ரமோஷன் பெறப் போகிறோம். அதற்குள் இப்படி..." என்று நயமான அழுத்தத்துடன் பேசி, விழிகளில் சினம் ஏந்தித் தேளாகக் கொட்டினாள் அவள். "நீங்கள் என்னுடன் பண்புடன் நாகரிகமாகப் பழகுவதையே விரும்புகிறேன். எதிலும் ஒரு 'எடிகஸி' வேண்டும் !" என்றும் நிர்த்தாட்சண்யமாக அவனை எச்சரிக்கத் தவறவில்லை.

அவன் கெட்டிக்காரத்தனமான வியாபகத்துடன் சமாளித்துக்கொண்டான்.

"ராணியின் இஷ்டம் அதுவானால் சரி...நான் இனி அப்படியே நடந்துகொள்கிறேன் !" என்று அசட்டுச் சிரிப்புடன் பெருமூச்சையும் வெளியேற்றினான். அவள் பேச்சை 'லைட்' டாக எடுத்துக்கொண்டதாக நடித்துவிட்டு, பழைய நட்புறவை பழைய ஸ்தானத்திலேயே ஸ்தாபிதம் செய்து. அந்த நிம்மதியுடன் விடை பெற்றான் !

பின்னால்...?

செந்தில்நாயகம் கூடாநட்பு காரணமாக, கெட்டுச் சீரழிந்து வரும் விவரம் அறிந்தாள் யாமினி. 'மலருக்கு மலர் தாவி ஓடி மதுவைக் குடிக்கும் இந்த மனிதர் எனக்கு நிம்மதியைத் தரமாட்டார் !' என்றே வரம்பறுத்தாள். பட்டப்

படிப்பின் முடிவு வெளியானதற்குப்பின், தன் முடிவையும் செந்திலுக்குத் தபால் மூலம் தெரியப்படுத்தினாள். ஓடி வந்தான் அவன். வந்தவனிடம் அவள் தன் கல்யாண மடலைச் சமர்ப்பித்தாள். மதுரை மாப்பிள்ளையுடன் திருமணம்!... கண்ணீருடன் திரும்பினான் அவன்—செந்தில்நாயகம்!

ஆனால்...?

அவளது திருமணத்தன்று அவன் உறையூரில் இருந்தான். விழாவுக்குச் சென்றான். ராஜோபசாரம் செய்தாள் யாமினி. தன் கணவனிடம் தன் கல்லூரித் தோழனை அறிமுகப் படுத்த விழைவதாகச் சொன்னாள். ஆனால், செந்திலோ 'சர்ரென்று' வில்லின் அம்பாக வெளியேறிவிட்டான். அவளது பொங்கிப் புரண்ட குதூகலம் அவனைக் கேலி செய்த கோபத்துடன் அவன் புறப்பட்டுவிட்டான்.

அப்புறம்...?

சுய ஞாபகம் சிலிர்த்தது!...

'ஐயோ!...நான் இதயமில்லாதவன்!'

மண்டையில் ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டார் செந்தில்நாயகம்.

'ஐயோ!...நான் என்ன காரியம் செய்துவிட்டேன்!...'

சித்த பேதம் கொண்டவரை ஒப்ப தமக்குத் தாமே முணுமுணுத்துக் கொண்டார்.

மூளை கொதித்தது. முழுகினார். பூஜை செய்தார்.

காசி காலைச் சிற்றுண்டி கொணர்ந்தான். இட்லியும் 'கோஸ்மல்லி' சட்டினியும் வந்தன. இரண்டும் அவருக்குப் பிடிக்கும். ஆனால் அன்று பிடிக்கவில்லை. சாப்பிட்டோமென்று பேர் பண்ணிவிட்டு எழுந்தார்.

அன்றொரு நாள் கம்பெனிக்கு வந்திருந்த 'தனிப் பார்வைக் கடிதம்' எப்படிக் காணமல் போயிற்று என்ற நினைப்பே பெரும் ஐயப்பாடாக வளர்ந்தது. யோசித்துப் பார்த்தார். அன்றைக்கு இக்கடிதத்தை வைத்திருக்கையில்

அல்லது சற்று கழிந்த நேரத்தில்தான் மகேந்திரன் தம் இல்லம் புகுந்து வந்த விவரத்தைக் கச்சிதமாக நினைவு கூர்ந்தார். ‘அந்த யமன் கையில் அந்த லெட்டர் கிடைச்சிருக்கவும் கூடும்’ என்றும் சிந்தனையின் ஒரு பகுதி அறிவுறுத்திற்று. ‘அவன் கையில் கிடைத்து என்ன செய்யப் போகிறான்?’ என்ற அலட்சியம் அவருக்கு ஏற்பட்டது. மகேந்திரனின் உருவத்தை நெஞ்சில் எண்ணிப் பார்க்கவும் கூசினார் அவர். ‘என் செல்வச் செருக்கும் ரத்தத் திமிரும் என்னைத் தவறான பாதையில் இட்டுச் சென்று என்னை அலைக்கழித்து விட்டனவே!...கூலிக்காரனுக்கும் கேவலமாக ஆகிவிட்டேனா நான்?...’ மகேந்திரனின் தொடர்பை நினைக்கவும் அஞ்சினார். நேற்று இரவு திரும்புகையில், தம் கம்பெனிப் பையன் மணியை அழைத்து ஐம்பது காசை அவனிடம் அழுத்தி கீழ்ப்பாக்கத்தில் யாமினி என்ற பெண் கிடைத்த விவரம் பற்றிக் கேட்டு மானேஜர் முத்துலிங்கம் கண்டறியச் சொன்னதை நினைவூட்டியபோது, அவன் தன் கையில் வைத்திருந்த காசை நழுவ விட்டுவிடாமல், கைகளைப் பலமாக விரித்துவிட்டு ஓடிவிட்டான். பிச்சை கிடைக்காத யாசகனின் ஏமாற்றம் அவரை வாட்டியது.

‘ஊம்!’

வெய்துயிர்ப்பு வளர்ந்தது.

விரைந்து சென்று பெட்டகத்தை திறந்தார். போட்டோ ஆல்பத்தை எடுத்தார். எல்லாவற்றிலும் யாமினி இருந்தாள். அவளுடைய ரூபலாவண்யச் சித்திரம் இருந்தது. மின்னலும் தேவதையும் கூடி வளர்த்த ஓவியப்பாவையாகத் தரிசனம் தந்தாள் அவள். அவனோ மதுவுக்காகத் தவம் இயற்றிய வண்டாய் மறுகி நின்றான்.

அவன்: செந்தில்!

ஒரு கூட்டை உதறினார் அவர்!

அவர்: செந்தில்!

## பகுதி : பத்து

# மிஸ்டர் செந்தில் !

மக்கிமடித்த பழைய கடிதக் கற்றைகள், கூட்டிலிருந்து கிளம்பும் தேனீக்களாக உதிர்ந்தன. அவை ஒவ்வொன்றும் மனச்சாட்சியைச் சொடுக்கிய சாட்டை ஆனது.

ஒரு கடிதம் கொட்டியது.

கைவிரல்களைக் கொட்டியிருக்க வேண்டும். அது பிள்ளைப் பூச்சியல்ல.

அதுவே முதல் கடிதம். விளையாடத் தொடங்கிய விதியின் முதல் வினைச் சுழல் அது!

''மிஸ்டர் செந்தில்!

நீங்கள் பண்புகெட்ட மனிதர் என்பதை வெட்ட வெளிச்சமாக நிரூபித்துவிட்டீர்கள். இதயமற்ற கொடும்பாவியாக நடப்பீர்களென்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லையே! என் நெஞ்சின் மரணத் துடிப்பும், என் கண்களின் ரத்தக் கண்ணீரும் உம்மைச் சும்மா விட்டுவிடுமென்று மனப்பால் குடிக்கிறீரா?....உம் வினைக்கு நானே விதி என்பதை மறந்துவிடாதீர்!....என்னைப் பழிவாங்கிய நீர் அதே பழியை அனுபவிக்காமல் தப்பினுல், அப்புறம் தெய்வம் என்பது இல்லை என்றே அர்த்தம்!...

நான் அழுகிறேன்!

நீரும் அழத்தான் போகிறீர்!....

என்னை வெறும் யாமினியாக்கிவிட்ட உம்மைத் தெய்வம் மறந்துவிடாது!

யாமினி.''

கடிதத்தை மடித்துத் திணித்தார். ''யாமினி!'' என்று புலம்பி அழுதார். இந்தக் கடிதம் கிடைத்த அந்த நிமிடத்திலிருந்து அவர் அந்தரங்கமாக அழுததை—அழுதுகொண்டிருப்பதை அவர் மட்டுமே அறிய முடியும்!

'வெறும் யாமினி! ஐயோ!... திருமணச் சந்தனம் காய்வதற்குள், அவள் மாங்கல்யத்திற்கு மதிப்பு இல்லாமல் செய்துவிட்ட மிருகம் நான்!....ஆம்; அவளை வெறும் யாமினியாக ஆக்கிவிட்டவன் நான்!.... அவள் கணவன்....? கடவுளே!....நான் ஏன் ஆணாய்ப் பிறந்தேன்?....' முற்றும் துறந்த துறவுக் கோலத்தில் யாமினி அவரது மனத்திரையில் தோன்றினாள்; வாழ்வின் தோல்வியும் காலத்தின் சுழற்சியும் அவளை உருக்குலைத்துவிட்ட கோலம் பூண்டு தோன்றினாள்! 'யாமினி....என் யாமினி!' அவரைக் கண்டு அவர் உள்ளமே பரிகாசம்செய்து குத்திக் காட்டிற்று. ஏதோ ஒரு மனநிலையில் உருவான திடம் ஏதோ ஒரு மனப்போக்கில் முடங்கியது.

சிதறிய கடிதங்கள் அத்தனையையும் ஒரே கொத்தாக, தம் பாவத்தைத் தாமே சுமப்பவராக அள்ளினார். அவை எல்லாம் சேர்ந்து அவரைச் சுட்டெரித்துவிடத் துடிப்பதாக அவர் பதறினார். தலைவலி தாளவில்லை. சிகரெட்டைப் பற்றவைக்கத் தீக்குச்சியைக் கிழித்து உரைத்தார். அப்படியே அவை எல்லாவற்றையும் சுட்டுப் பொசுக்கிவிட முடிவு செய்தார். மறுகணம், நீட்டிய தீக்குச்சிக் கொழுந்தை யாரோ அணைத்துவிட்டார்கள். காற்று? இல்லை, விதியேதானோ?

புகை வளையங்கள் சுழன்றன.

பழைய சிநேகிதர் ஒருவர் தொலைபேசியில் அவருடன் அளவளாவினார். ஆனால் அந்த அளவுக்கு இவர் அன்பைப் பரிமாறத் துணியவில்லை. அதற்கும் காரணம் இருந்தது. அந்த நாட்களிலே இவரைத் தடம் மாற்றிச் செலுத்திய புண்

ணியவான்களிலே இந்த நபரும் ஒரு புள்ளி. முன்பு ஒரு பயணம் தொலைபேசியில் கேட்ட மாதிரி இரவு ஓய்வாகப் பேச வரலாமா என்று கேட்டான்!

தாம் திருத்தணிக்குப் புறப்படுவதாகப் 'பொய்' புனைந்துரைத்துத் தொலைபேசிக் கருவியை அதன் இடத்தில் வைத்தார். 'என் அறிவு சிறிதாகிவிட்டது. பிறரை நொந்து என்ன பயன்?....'—வந்தபின் வருந்திப் பயன் என்ன?

மாடி ரேழியில் சற்றே வந்து நின்றார்.

எதிர்ப்புறமிருந்த நடைபாதை ஒதுக்கத்தில் சில பிச்சைக்காரர்கள் கூடிக் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

'இந்தச் சந்தோஷத்திலே எள்ளத்தனையாச்சும் எனக்கு இருக்குதா?... அந்த அமைதியான பாக்கியம் ஏன் எனக்கு வாய்க்கலே?... இதுக்குத்தான் லவிதம்னு பேரா?...'

சமுதாயப் பிரச்னையை சிந்தனை வாதி ஆராய முற்படுவதற்கு நேராக, அவர் தம்மையும் தம் சூழல்களையும் தம்முடைய நிலையையும் அலசினார். முடிவில் எந்தப் புதிரும் விடுபடாமல், எல்லாமே புதிர்வடிவத்தில்தான் காட்சியளித்தது.

* * *

மதிய உணவு முடிந்ததும், முத்துலிங்கம் வந்தார். சற்று முன்வந்த 'எக்ஸ்பிரஸ் டெலிவரி' கடிதம் ஒன்றினை செந்தில் நாயகத்திடம் கொடுத்தார். பங்களூரிலிருந்து மங்களம் எழுதியிருந்தாள். இன்னும் இரண்டு மூன்று தினங்களில் தன் அண்ணனுடன் வந்து சேர்வதாகக் குறித்திருந்தாள் அவள். உடல்நலம் செம்மைப்பட்டிருப்பதாகவும் கண்டிருந்தது.

செந்தில்நாயகத்தின் நெஞ்சில் பால் வார்த்துவிட்டாள் மங்களம். தம்முடைய பதினைந்து லட்ச ரூபாய்ச் சொத்து, தொழில் வளம், பங்களா எல்லாம் அப்போதுதான் அவருக்கு ஏதோ அர்த்தபுஷ்டியுடன் தோன்றுவதாகத் தெரிந்தது. தம் மகிழ்ச்சியைப் புலப்படுத்தி, பதில் கடிதம்

பறந்தது. யாமினி விஷயம் ஒன்றும் பலனளிக்கவில்லை என்றும் விளம்பினார் பிள்ளை. கம்பெனியின் நிலவரங்களை விளக்கியபின் அவர் திரும்பினார்.

செந்தில்நாயகமோ யாமினியையே சுற்றிச் சுற்றி வர வேண்டியவர் ஆனார்.

அவர் உள்மனமோ அப்போது மங்களத்தின் நினைவில் சுற்றி வந்தது.

மங்களம் இவருக்கு வாழ்க்கைப்பட்ட கணத்திலிருந்து தான் இவருக்கு அதிர்ஷ்டம் உச்சத்தில் அமரத் தொடங்கியது.

யாமினி கிட்டாத வெறுப்பில், திருமணமே வேண்டாமென்று நாட்களை ஓட்டினான் அவன். பெற்றோர்கள் வலுக் கட்டாயப்படுத்தினார்கள். மதுரையில் மங்களம் கிட்டினாள். திருமணம் நடந்தது. யாமினியின் அளவுக்கு மங்களம் ரூபசுந்தரியாக இல்லாவிட்டாலும், அவளும் எழில் மெருகுடன்தான் பொலிந்தாள். ஆகவே, அழகின் நுட்பமான ரசிப்பில் வளர்ச்சி பெற்றுப் பழகிய செந்திலுக்கு மங்களம் நல்ல முறையிலேயே ஈடுகொடுத்தாள். அவனும் நிம்மதியடைந்தான்.

காலப்புள் பறந்தது.

அந்தக்காலம் மங்களத்தின் வயிற்றில் ஒரு பூச்சி பொட்டைப் போடவில்லை. ஒரு மகாமகம் கழிந்து, ஒரு நாள் மங்களம் தன் பதியிடம் மெல்லச் சொன்னாள்: "நீங்க விரும்பினால் இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கிடுங்க, அத்தான்!"

அவருக்கு ஒரே ஆச்சரியமாகிவிட்டது. 'என் பேரிலும் வாழ்க்கையிடத்தும் என் மங்களத்துக்கு எவ்வளவு நம்பிக்கை!....' என்று நினைத்தார். அவருக்கு வேறு எதைப் பற்றியும் சிந்திக்க, சிந்தித்து ஆராய, ஆராய்ந்து முடிவெடுக்க மனச்சாந்தி ஏது? அவரைத்தான் பேயாய் ஆட்டிவைத்தாளே யாமினி?....இந்த இருபது ஆண்டுகளிலே, இருபது இரவுகள்

அமைதியாகத் தூங்கியிருந்தால் அதுவே மகத்தான பாக்ய மாயிற்றே! அவர்வரை அதுவேகூட தர்மத்தின் பிச்சை யாகவும் அமைந்திடலாமே!

இப்போது அவர் உள்ளம் அந்த விசித்திரத்தை நினை வூட்டியது. ஊறிய திடம் இப்பொழுது காலூன்றியது. 'என் யாமினியை என் மங்களத்தின் அனுமதியுடன் மறுமணம் புரிந்துவிட்டால் சிலாக்கியமாகிவிடாதா?.... என் பாவத் துக்குப் பிராயச்சித்தம் கிட்டிவிடும். என் வினையும் விதியும் அப்புறம் வேலை முடிந்து ஆண்டவனிடம் திரும்பிவிடும்!.... ஆமாம்...இன்றே பங்களூருக்குப் பறந்துபோய் மங்களத்திடம் யாமினி விஷயமாக நேரில் பேசினால் என்ன?....' என்று மனத் தின் ஒரு பகுதி அவசரப்பட்டுத் துடித்தது. அதே நேரத்தில், 'யாமினி எங்கே இருக்கிறாள்?.... அவள் முடிவை வாங்கிக் கொண்டல்லவா மங்களத்தின் செவிகளில் இவ்விஷயமாகப் பேச்சைத் துவக்க வேண்டும்?' என்று எதிர்க்கேள்வி அமைந்தது.

அப்போது அவரது அடிமனத்தின் நியாயபுத்தி அவரை முள்ளாய்க் குத்தியது. 'உன் சுயநலப் பண்பினால், நீ பண்பு கெட்டு, கெட்ட பெயரெடுத்தது போதாதா?....யாமினியின் நல்வாழ்வில் உனக்கு நிஜமான நல்ல எண்ணம் இருக்கும் பட்சத்தில் முதலில் அவளைக் கண்டுபிடி. அப்புறம் அவள் புருஷனைக் கண்டுபிடி. பிறகு, உன் உயிரைக் காணிக்கை வைத்தாவது அவர்கள் இருவரையும் மகிழ்ச்சியின் தம்பதி யாக்கு. அதுதான் உன் கடமை. அதுவே மனிதாபிமானம். அதுவே தர்மம்!...'

துள்ளி எழுந்தார் அவர். கண்களைத் துடைத்தார். மனச் சான்றின் கட்டளைக்குக் கட்டுப்படத் திட்டமிட்டார். தொழு கைக் கூடத்திற்கு விரைந்து, பூமியில் தலை பதித்து விழுந்து எழுந்தார். புதிய வைராக்யம் துளிர்த்தது.

அப்போது, ''மங்களம் இருக்குதா? அதோடே கொஞ்சம் நான் பேசவேணும். நான் அதோட சிநேகிதன்,'' என்று ஒரு குரல், 'போனில்' பேசியது.

# 63

அந்தப் பேச்சைக் கேட்டதும், அந்தி மயக்கத்தில் தடுமாறுவதைப்போன்று தடுமாறினுர், கை கால்கள் நடுங்கத் தொடங்கின.

கையில் பற்றி யிருந்த 'ரிஸீவரை' கை நழுவ விட்டார் செந்தில்நாயகம்.

அது ஸ்டூலில் பட்டு உடைந்ததுதான் மிச்சம்!

## பகுதி : பதினொன்று

# பிஞ்சுப் பழம்!

'மங்கள விலாசம்' பங்களாவின் முகப்பில் அழகான பூங்கா இருந்தது. வண்ணப்பூக்களும் மேலைநாட்டுக் 'குரோட்டன்ஸ்' செடிகளும் படர்கொடிகளும் அங்கே அழகை உருவாக்கிக்கொண்டிருந்தன.

பொழுது பட்டது.

காக்கைக்கூட்டம் கூடுகளுக்குக் குறிவைத்த பொழுது அது.

பூந்தென்றல் ஆரோக்கியத்துடன் வீசியது.

மாடியறையில் இருந்த செந்தில்நாயகம் கபாலம் வெடித்துச் சிதறத் துடிப்பதாக உணர்ந்து முன் ஜாக்கிரதையுடன் கீழ்த்தளத்துக்கு விரைந்து, பிறகு 'லான்' பக்கம் திசை திரும்பினார்.

அந்தச் சூழல் அவருக்கு இதம் தர முயன்றது. காற்றும் காட்சியும் சுகமாக இருந்தன.

நினைவுத்தளிர் ஒன்று:

மங்களத்திற்குத் திருப்பூட்டியதும் மதுரையிலிருந்து அவளைச் சென்னைக்கு அழைத்துவந்து, இந்தப் பெருவீட்டில் அவளை இறக்கியவுடன் அவள் கண்கொள்ளாமல் அகமகிழ்ந்தாள். 'நான் கடல்போலுள்ள இத்தனை பெரிய வீட்டில் குடியிருந்து வாசம் செய்யப்போகிறேன். ஆம்; இது வேண்டாமா, என்ன? நன்றாக வேண்டும்!.... நாளைக்குப் பிள்ளைகுட்டி என்று ஆகிவிட்டால், ஆளுக்குக் கொஞ்சம் என்று பகிர்ந்து போய்விடாதா? எல்லாம் மீனாட்சி அம்மனின் கிருபா

கடாட்சம்!...' என்று கோவையாகவும் தெளிவாகவும் நினைத்துப் பார்த்தாள். பிறகு, அன்று மாலையில் வெகு நேரம்வரை மங்களம் தன் கணவனுடன் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தாள். இளமையுடனும் வாத்சல்யம் பொதிந்த துடிப்புடனும், கனவின் சல்லாபம் மண்டிய பூரிப்புடனும் செந்தில்நாயகமும் உரையாடிக் குதூகலம் அடைந்துகொண் டிருந்தான்.

கழுத்தில் வைரநெக்லஸ் இழைந்திருந்தது. அதைச் சமன் செய்தபடி, அவள் சொன்னாள்:

''அத்தான், இங்கேயே நாள் பூராகவும் உட்கார்ந்து கிட்டிருந்தால், பசிகூட தோணாது போலிருக்குது!'' என்றாள், மங்களம்.

உடனே செந்தில்நாயகம் முல்லைப் பூக்களைக் கொட்டின மாதிரி வெகு நயமாகப் பற்களைத் திறந்து சிரித்தான். ''இயற்கையை ரசிக்க வேண்டுமென்றால், அதுக்கு என்று தனியான ஒரு மனம் வேண்டுமாக்கும். பேஷ்....உன்னிடம் அந்த மனசு இருக்குது!.... நீ ஒரு காரியம் செய். எனக்கு வேளா வேளைக்குச் சமைச்சுப் போட்டுப்பிட்டு, நீ வந்து இந்த லான் பகுதியிலேயே ஹாயாக உட்கார்ந்து கொள். நீயும் உன் பசியும் உன்வரை உனக்குச் சொந்தப் பிரச்னை கள்! அதிலே நான் குறுக்கிடுவது இப்போதைய நாகரிக மல்ல!....'' என்று சிரிக்காமல் வியாக்கியானம் செய்தான்.

ஆனால், அவளோ மொக்கு விரியச் சிரித்தாள். ''அம்மாடி! என்னாலே பசியை அவ்வளவு தைரியமாக வரவேற்க முடியாதுங்க!'' என்று எழுந்து உள்ளே மாடிக்கு நாடிவிட்டாள் மங்களம்.

கப்பல் போய்விடும். ஆனால் கரை தங்கத்தானே செய்யும்!— சொற்களும் அப்படியே!

'மங்களம்!...மை டியர்...டார்லிங்!...' இருபது வருஷத்துக் கனவையும் களிப்பையும், காதலையும், இல்வாழ்க்கை யையும், சலனத்தையும் சாந்தியையும் ஒரே மூச்சில்

எண்ணிக் கணக்கிட முயன்றும், முடியாததொரு விரக்தியின் முடிவுடன் அவர் வாழ்வின் வேதனைக்கு ஒரு வடிவமாக அங்கிருந்து மனச் சோர்வுகொண்டு நகர்ந்தபோது, விளக்குகளை ஏற்றிவிட்டான் காவல் செய்பவன். 'என் மனத்திலும் ஒளி விளக்கு ஏற்பட்டு விடுமா?... என் குற்றத்திற்கு நான் சாவதற்குள் எப்படியும் மன்னிப்புக் கிடைத்தே தீரும்!...ஆம்; இதுதான் வாழ்வின் நியதிபூர்வமான விதியாக இருக்கும்!... இல்லையென்றால் அப்புறம் விதிமுன்னே நின்று, தெய்வம் பின் தங்கிவிட மாட்டாதா...ம்...நான் கட்டாயம் பிராயச்சித்தம் அடைவேன்...பகவான் என்னை மன்னித்து அருள்புரிவது நிச்சயம்...! ஆனால்....ஒரு சமயம் எனக்கு என் முயற்சிக் கனவில் தோல்வி சம்பவித்து, முடிவிலே எனக்கு மன்னிப்பே கிட்டவில்லையானால்...?'

செந்தில்நாயகம் நின்ற பூமியில் எரிமலை வெடித்து விட்டதோ?

மங்களத்தை நினைந்தவர், யாமினியை நினைத்தார். மீண்டும் பழைய வெறி கிளம்பிவிட்டது. 'என் பாவமும் பொய்யும் என்னை வஞ்சித்துவிட்டால்...?' யாரைப்பற்றியும் எதைப்பற்றியும் நினைக்கச் சத்துஅற்றவராக ஓர் அரைக் கணம் மெய்ஒடுங்கி நின்றார். விளக்குகளின் ஒளிமின்னல் அவருக்கு நெஞ்சத் துணிவையும் நன்னம்பிக்கையையும் அளிக்கத் தவறாது என்ற அளவில் அவர் தம்முடைய மனத்தை அமைதிப்படுத்திக்கொள்ளப் பாடுபட்டார். அடிக்கொரு முறை அவர் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தார். அப்போதெல்லாம் தம்முடைய உள்மனம் எதற்காகவோ ஏங்குவது போலவும் அவர் உணரலானார்.

அப்போது அண்டையிலிருந்த காப்பி ஹோட்டலிலிருந்து பாட்டொன்று மிதந்து வந்தது.

பாட்டை உன்னிப்புடன் கேட்டார் செந்தில்நாயகம். வழுக்கைவிழத் தொடங்கியிருந்த முன்பக்கத்துத் தலைமயிரைக் கோதியவாறு அவர் நடந்தார். 'பாரதியின் பாடல் எவ்வளவு அழகான பிரத்யட்ச உண்மையைப் புலப்படுத்துகிறது.

துன்ப நினைவு, பயம், சோர்வு எல்லாம் அன்பில் அழியு மாமே!... வாஸ்தவமாகத்தான் இருக்க வேண்டும்!...'

இப்போது அவர் நெஞ்சம் ஏதோ ஒன்றினால் இட்டு நிரப்பப்பட்டிருப்பதாகத் தோன்றிற்று. இந்நிலை, சற்றுமுன் செவிமடுத்த பாடலின் பின் விளைவு என்ற மட்டில் அவர் பகுத்து அறியாமல் இல்லை. 'ஆம்; அன்புக்கு அழிவில்லை தான்!...என்னுடைய வினையில் ஏதாவது ஒரு நல்ல பகுதி என்று இருந்தால், அதன் பலாபலனாக என் மனம் சாந்தி பெற்றால்தான் உண்டு. வேறு வழியோ, உபாயமோ இருப்ப தாகவும் தோன்றவில்லை. ஆக, எப்படியோ, யாமினியும் அவள் கணவரும் புதுவாழ்வு பெறவேண்டும். யாமினியை நான் எப்படிச் சந்திக்கப் போகிறேன்?... என்னவோ, ஆண்ட வன் சித்தம் இருந்தால், யாமினி என்னுடைய பார்வையில் தன்னாலேயே வந்து நிற்கவும் முடியுமே!... மறைநாயகனே! எல்லாம் அறிந்தவன் நீ!... நீதான் என்னை மனிதனாக்க வேண்டும்!...'

முகத்தைத் தடவிவிட்டார். ரோமங்கள் குத்திட்டு நின்றன.

இமை விளிம்புகள் நனைந்தன.

செந்தில்நாயகம் விழிகளை மூடி மூடித் திறந்தவராக முகப்பு வாயிலின் வழியே ஹாலில் போய் நின்றார். நேர் வசத்தில் 'என்லார்ஜ்' செய்து பொருத்தி இருந்த தம்முடைய கல்யாணப் படத்தைத் தலையை உயர்த்திப் பார்த்தார். பார்வை மங்கலாகத் தெரிந்தது. கண்ணாடியை எடுத்து அணிந்துகொண்டு பார்த்தார்.

'மங்களம் அழகாகத்தான் இன்னமும் இருக்கிறாள். ரொம்ப சின்ஸியர் அவள்!...யாமினியைப் பற்றி இரண்டு மூன்றுதரம் மங்களத்திடம் பிரஸ்தாபிக்க முயன்றும் சந்தர்ப்பம் குதிரவில்லையே!... ம்!...' எண்ணிக் கொண்டிருக் கையில், அன்று அந்தியில் கேட்ட டெலிபோன் பேச்சு, அவர் இதயத்தைக் குடைந்தது. 'யார் அந்த நபர்?... மங்களத்

தோட சிநேகிதர்னு சொன்னாரே, ரொம்பவும் கம்பீரமான குரலில்!' என்று நெஞ்சுக்கு நெஞ்சே சாட்சியமாக தம்முள் பேசிக்கொண்டார். உள்ளத்தை விழிகளில் வாங்கிக் கொண்டு மலைப்புத்தட்டி நின்றவர், தீர்க்க முடியாத குழப் பத்தைத் தொட்டு நிற்பதாகவே உணர்ந்தார். மண்டை கொதித்தது. ரத்த நாளங்கள் துடித்தன. 'மங்களம்!...மை டியர்...!'

கைகள் இரண்டையும் கூப்பிக்கொண்டு, அங்கு கிடந்த கூடை நாற்காலி ஒன்றைச் சரணடைந்தார். எதுவும் நடக்க வில்லை என்றும், எதுவுமே நடக்க முடியாது என்றும் நல்ல தைச் சிந்திக்கும் பான்மையுடன் முடிவு கட்டினர்.

மறுமுறை செந்தில்நாயகம் பார்வையை விரித்தபோது, "வணக்கம்," என்ற கம்பீரத்தொனி கேட்டது.

செந்தில்நாயகம் நிமிர்ந்து, குரலுக்கு உரியவரை நோக்கினர்.

யாரோ புது நபர்!....

யார் அவர்?

வந்த மனிதர் கைகூப்பி வணக்கம் சொல்லிவிட்டு, யாருடைய சொல்லுக்கும் அனுமதிக்கும் காத்திருக்க விரும் பாதவர் போன்று, அங்கு கிடந்த நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு குந்தினர். அவர் முகம் பளிச்சென் றிருந்தது. தெளிந்த சிந்தையின் படமோ அது? அன்பும் கனிவும் இருந்தன.

செந்தில்நாயகத்தின் வயசுதான் இருக்கவேண்டும். பார்த்தால், 'நாற்பத்தாறு' என்று சொல்லிவிட முடியாது, குறைவாகத்தான் மதிப்பிட முடியும். சந்தனப்பொட்டு துலாம்பரமாகப் பொலிந்தது. அதுவே அவருக்குத் தனிப் பட்ட களையை ஊட்டியிருக்கவும் கூடும்.

"வாங்க, மாடிக்குப் போகலாம்!" என்றார் அவர்.

வந்தவர், "எதற்கு? வேண்டாம்!" என்று சொல்லி விட்டு, செந்தில்நாயகத்தை ஊடுருவிப் பார்வையிட்டார்.

காசி, வெற்றிலைத் தட்டை வைத்துச் சென்றான்.

வந்தவர், கையை நீட்டி, ஒரு கிராம்பை எடுத்து வாயில் போட்டு உமிழ் கூட்டினார்.

மூக்குக் கண்ணாடியைச் செம்மைப்படுத்தினார் செந்தில் நாயகம். எழுந்தார், நிலைக்கண்ணாடி தெரிந்தது. அவருக்கு தம் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாகவும் வெறுப்பாகவும் இருந்தது. 'பிஞ்சில் பழுத்த பழம்' என்று ஒருமுறை தமக்குள் முனகினார். ஸ்டாண்டில் தொங்கிய 'ஷர்ட்' அவரது மேனியை மூடியது.

"உங்கள் மனைவி மங்களத்தைப் பார்க்க வேணும்!"

எடுத்த எடுப்பிலேயே மிகத் துணிவுடன்—மிக உரிமையுடன், வந்தவர் சொன்னார். நளினமான அழுத்தமும், சாதுர்யமான பதட்டமும் மேலோடின, குரலில்.

செந்தில் நாயகம், இப்படிப்பட்ட ஒரு சந்திப்பையோ, இத்தகைய பேச்சையோ விரும்பாதவராக, முகம் மாறிப் போனார். அவருக்கு அவ்வப்போது வந்துவிடக்கூடிய நெஞ்சடைப்பு, மயக்கம் ஆகிய நோய் நொடிகள் வாழ, இத்தகைய சிறு சிறு நடப்புக்கள் ஒன்றிரண்டு வாய்த்தால் போதுமே!... அப்பால் வினை விளையாட கேட்கவும் வேண்டுமா?

## பகுதி: பன்னிரண்டு
## தெய்வமாய் மறைந்தாளோ ?

நெஞ்சைத் தடவி விட்டுக்கொண்டார் ஸ்ரீமான் செந்தில் நாயகம் அவர்கள்.

அன்று அந்தியில் கேட்ட தொலைபேசிப் பேச்சு இப்போது அவருள் விசுவரூபம் கொண்டது. 'அந்தப் பேச்சைக் கேட்டதும், என் கைகள் நடுங்கின. இல்லாவிட்டால், ரிஸீவரும் நழுவியிராது! அந்த நபரின் குறைப் பேச்சையும் கேட்டிருக்கலாம்!' என்று ஒரு சமாதானம் பூத்தது. ஆனால், அச்சமாதானத்தினால் அவருக்கு என்ன பிரயோசனம்?

''நீங்க யாரென்று முதலிலே சொல்லுங்க!''

''ஈவினிங்கூட நான் உங்களுக்கு 'டயல்' பண்ணினேன். தொடர்ந்து பேச முடியாமல், உங்க தரப்பிலே 'டிஸ்கனெக்ட்' ஆயிட்டுது. அதுதான் நேரிலேயே வந்திட்டேன்!...''

''சரி...விஷயத்துக்கு 'வாங்க!''

''எஸ்...எஸ்!... என் பெயர் மோகனசுந்தரம். ஊர்: மதுரை!....''

''ஓஹோ!...'' என்று வியப்புக் காட்டினார் செந்தில் நாயகம்.

''உங்க மனைவி மங்களமும் நானும் சின்ன வயசிலே ஒண்ணு வாசிச்சோம். நேசத்தோட பழகினோம்!...'' ஒத்திகை பார்க்கப்பட்ட பேச்சுத் தொனியைப் போலவே, வந்த மனிதரது மொழிகள் பிசிறு தட்டாமல் இருந்தன.

செந்தில்நாயகத்தின் வதனத்தில் மிச்சம்மீதம் இருந்த ரத்தப்பசை வறள ஆரம்பித்தது.

"என்னை உங்களுக்குத் தெரியாவிட்டாலும் என் பெயர் உங்களுக்கு நினைப்பிருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன்," என்று நூதனமான அழுத்தம் பாய்ச்சிப் பேசினர் மோகன சுந்தரம்.

"ஒஹோ!....அப்படியா?"

"மங்களம் உள்ளே இருக்குதா?" என்று கேட்டுக் கொண்டே, உட்புறம் திருஷ்டியைச் செலுத்துவதைக் கண்ட செந்தில்நாயகம், அம்மனிதர் கூறிய, 'நேசத்தோட பழகினேம்' என்ற அறிமுகம் இப்போது ஏதோ ஒரு விபரீதமான பொருளைக் கற்பிக்க முனைவதாக அவர் மனம் பொருமியது. தெளிவிழந்த மனத்தில் தெளிவு பிறக்கவே வாய்ப்பு இல்லையோ?

"என் சம்சாரம் பங்களூர் போயிருக்குது. ஏதானும் தகவல் இருந்தால், எங்கிட்ட சொல்லிட்டுப் போங்க, வந்ததும் சொல்லிடுறேன்!" என்ருர் செந்தில்நாயகம்.

"மன்னிக்க வேணும், மிஸ்டர் செந்தில்நாயகம்!.... மங்களத்திடம் தனிமையிலே சில நிமிஷம் பேசவேணும். நான் இங்கேதான் இருப்பேன். மறுபடியும் நாளைக்கு வந்து பார்க்கிறேன்!...." என்று சொல்லிவிட்டு, மோகனசுந்தரம் ஒயிலுடன் கையை உயர்த்தி, 'போய் வருகிறேன்' என்று அடையாளம் காட்டிவிட்டுப் பிரிந்தார். இளநீல வர்ணத் துண்டு எவ்வளவு அழகாக இருந்தது!

'நடையன்கள்' துளிச்சத்தம் செய்ய வேண்டுமே!

அவ்வளவுதான்!

செந்தில்நாயகத்தின் நிம்மதியை அபகரித்துப் பையில் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டார் மோகனசுந்தரம்.

தரை முதலையாகத் தவியாய்த் தவித்துத் தண்ணீராய் உருகினர் திருவாளர் செந்தில்நாயகம். குற்றவாளி அருண்டு போலீசுக்கு அஞ்சி நடுங்குவதைப் போல அவர் நடுங்கினர்

கிறுக்குப் பற்றினற்போன்று மாடிக்கு விரைந்தார். மண்டை 'விண்'ணென்று தெறித்தது.

ஓடிப்போய்ப் பெட்டகத்தைத் திறந்தார் அவர்.

டைரி ஒன்று 'விதி'யாக—அவரது விதியாக விஷமப் புன்னகையுடன் வெளியே வந்தது.

புரட்டினர்.

அந்த ஒரு நாள்:

அது, யாமினியின் திருமண வைபவ நாள்!

அன்றைய தேதியின் அடியில் இருந்த ஒரு விவரத்தைப் படித்தார். 'ஐயோ! நான் மகா பாவி!...நான் ஏவிய பழி அம்பு இதோ திரும்பிவந்து என்னையே பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறது!... இனி நான் நரகவேதனைப்பட்டுத் துடிக்க வேண்டியதுதான். இனியும் என்னை என் மனம் சும்மா விடமாட்டாது!... ஆமாம்!....'

சிகரெட் பெட்டி காலியானது.

சாம்பல் தட்டு நிரம்பி வழிந்தது.

★ ★ ★

மூன்று தினங்களாகச் செந்தில்நாயகத்திற்கு விடாத காய்ச்சல். மனஉளைச்சலின் விளைவு அது.

காசிக்கு வேலை கெட்டி வாங்கியது.

இரண்டொரு நாளில் வருவதாக எழுதியிருந்த பிரகாரம், மங்களம் வரக்காணோம்.

அந்த மதுரை மனிதர் மோகனசுந்தரம் காலையில் வந்துவிட்டார். மாடியில் ஓரளவு தெம்புடன் படுத்துக் கிடந்த செந்தில்நாயகம், தாம் அயலூர் சென்றுவிட்டதாகப் புனைந்துரை சொல்லும்படி வழிசொல்லி வந்தவரை வழியனுப்பச் செய்துவிட்டார்.

மாலை மயங்கி வந்தது.

கம்பெனியில் 'ஆடிட்' செய்துகொண்டிருந்தார்கள்.

விச்ராந்தியாகக் கம்பெனிப் பக்கம் போய்வந்தால் என்ன என்று ஒரு சபலம் தோன்றியது. அந்த அளவுக்குத் தமது உடல்நலம் இடம் கொடுக்காமல் இராது என்றே உணர்ந்தார் அவர்.

புறப்பட்டார்.

டிரைவர் நிதானமாகக் காரைச் செலுத்திஞர்.

வழியில் சினிமா விளம்பர வண்டி ஒன்று குறுக்கிட்டது.

சொந்தப் பெண்டாட்டியை மறந்து, தாசி ஒருத்தியின் நிழலில் தஞ்சமடைந்திருந்த ஒருவன், கடைசியில் தொழு நோய்க்கு ஆளாகி மனைவியின் பாதங்களில் கெஞ்சிக் கதறும் காட்சியைச் சித்திரித்த படங்கள் தள்ளுவண்டியின் இரு புறங்களிலும் ஒட்டப்பட்டருந்தன.

ஏனே அவர் அப்போது மூக்குக் கண்ணுடி டப்பாவை நிமிண்டிக் கொண்டிருந்துவிட்டார். ஆனலும், அக்காட்சி அவரை நிமிண்டிக்கொண்டே யிருந்தது.

மதியத்தில் பத்திரிகைக்கு அனுப்பி வெளியிடுவதற்காக எழுதியிருந்த அந்த விளம்பரத்தாளை எடுத்துப் பார்த்தார் அவர்.

**"திருமதி யாமினிக்கு,**

உங்களை நான் அவசியம் சந்திக்க வேண்டும். என் கதை முடிவுக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. அதற்குள் என் கடமையை நிறைவேற்றிவிடத் துடிக்கிறேன். கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு அவசியம் உடனே நீங்கள் வந்து என்னைச் சந்திப்பதற்கு உங்கள் மனம் கருணை செய்யுமென்றே நம்புகிறேன், மற்றவை நேரில்.

இப்படிக்கு,

**எம். செந்தில்நாயகம்."**

இவ்வுபாயத்தைப்பற்றி மானேஜரிடம் கலந்து யோசிக்க விரும்பினர் அவர்.

# 74

கார் ஓடிக்கொண்டிருந்தது.

யதேச்சையாகத் திரும்பினார் செந்தில்நாயகம். உழைப்பாளிகளின் சிலைக்கருகில் அப்போது மஞ்சள் வெய்யிலில் நனைந்தவாறு, யாமினி தன்னந்தனியாக நின்றுகொண்டிருக்கக் கண்டார். கதவைத் திறந்துகொண்டு, புதையல் எடுக்க ஓடுபவர் போன்று ஒரே புளகிதத்துடன் ஓடினார். "யாமினி" என்று அலட்டிக்கொண்டே போய் நின்றார். மூச்சு வாங்கியது. சமயோசித புத்தியுடன் கையில் வைத்திருந்த அந்த விளம்பரத்தாளை எடுத்து அவளிடம் சமர்ப்பித்தார். அவரது புருவங்களில் நடுக்கம் வளர்ந்தது. விழிகள் கண்ணீரில் புரண்டன.

சோகமே உருவாகத் தலைதாழ்த்தியவாறு நின்ற யாமினி அதைப் பார்த்தாள். 'ஏன்?' என்ற பாவனையில் முறைத்துப் பார்த்தாள். சடக்கென்று அவரது அலங்கோலம் நிறைந்த பரிதாபக் கோலம் கண்டு மனம் மாறியோ என்னவோ, 'ம்' கொட்டிவிட்டு, "நாளைக்குப் பகலில் வருகிறேன்!" என்று மொழிந்து, தெய்வமாய் மறைந்துவிட்டாள்.

## பகுதி : பதின்மூன்று

# அதோ, யாமினி !...

அதோ, சுவர்க்கடிகாரம் பத்துத் தடவை ஒலிக்கத் தொடங்கிவிட்டது !

மாடியில் தம்முடைய தனி அறையிலே அப்படியும் இப்படியுமாக நடை பயின்றவாறு இருந்தார் செந்தில்நாயகம். நோயாளியின் வேஷம் கலைக்கப்பட முயன்று, அம் முயற்சியில் செம்பாதி கெலிப்பும் எய்திய குதூலகத்துடன் அவர் காணப்பட்டார். 'ஷேவிங்' செய்துகொள்ளத் தான் இருந்தார். ஆனல், ஏனே அவர் அவ்வாறு செய்து கொள்ளவில்லை. எதிர்ப்புறம் இருந்த விரிசடைக் கடவுளின் மைந்தன் படத்தை வெறிக்க வெறிக்கப் பார்ப்பதும், அதே சடுதியில் மாடி வராந்தாவின் ஊடே கீழே எட்டிப் பார்ப்பதுமாக இருந்தார். அவர் கையில் 'யாமினி' இருந்தாள்; ஆம்; யாமினியின் நிழற்படம் இருந்தது. அவரை இத்துணை காலமாக நிழலாய்த் தொற்றி வரும் அந்த யாமினி எனும் ஒரு தத்துவம், விதியாய்—வினையாய்—பழங்கதையாய்—புது மலராய் அவரது இதயத்தைத் துறக்காமல், அவரது கையகத்துள்ளே அடங்கிவிட்டிருந்தாள்.

யாமினியை முன் தினம் சந்தித்த சம்பவம் அவருக்குக் கனுப் போலவேதான் இருந்தது. ஆறுமுகக் கடவுள்தான் அறக்கருணை கொண்டு யாமினியைத் தம் பார்வையில் பட வைத்திருக்க வேண்டுமென்று அவர் திடம் பூண்டார். ஆகவே, இனிமேல் தமக்கு விடி மோட்சம் கிட்டிவிடும் என

வும் தீர்மானமான நெஞ்சுறுதி பெற்றார். கார்த்திகை பாலனே கதி யென்று தவம் கிடந்தார்.

'அப்பனே! என்னை இனிமேலும் நீ சோதிப்பது தர்மமா? என் வினையை நான் அறுவடை செய்துவிட்டேன். அதற்கு ஒரு நிரூபணமாக இதோ நான் நிற்கிறேன்— செல்லரித்த உடம்புடன், பூச்சி நுழைந்த நெஞ்சுடன்!... நான் செய்த பாவத்துக்கு மன்னிப்புக் கிட்டச்செய். இந்தத் துரோகியையும் கடைத்தேறச் செய்!...இந்த மிருகத் துக்கு ஒரு கதி மோட்சம் காட்டு!...யாமினியையும் அவள் கணவரையும் புதுமணத் தம்பதிபோல் ஆக்கி அருள் செய்!...நானும் மனிதனாக நடமாட அனுக்கிரகம் புரி!... இல்லையேல், என் மனச்சான்று என்னை மன்னிக்காது. என் மங்களம் என்னை மன்னிக்கமாட்டாள்!...'

பூசைக் கூடத்துக்கு நடந்து திரும்பினார் செந்தில்நாய கம். 'ஸில்க் ஸ்லாக்கை' எடுத்துத் தரித்துக்கொண்டார். சிகரெட் புகை கக்க, அவர் இருமலைக் கக்கினார்.

விடிந்து, படுக்கையை விட்டுத் தாமாகவே எழுந்துவிட் டதை ஒரு பெரும் சாதனையாகவே கருதியவராக, செந்தில் நாயகம் கட்டிலை விட்டிறங்கினார். காலைக் கடன்கள் முடிந் தன. மருந்து உட்கொண்டார். இரவு செலுத்தப்பட்ட ஊசியின் நோவு கைத்தசை நார்களில் இன்னமும் உற வாடி இருந்தது. பத்திரிகையைப் புரட்டினார். நெஞ்சு வலிப் பது போலிருந்தது. தடவிக்கொண்டார். மார்பெலும்பு கள் துருத்தி நின்றன. கண்ணாடியில் பார்த்தபோது அவர் அழுதார்.

திடீரென்று அவருக்கு மோகனசுந்தரத்தின் உருவமும் அவரது பேச்சும் நினைவில் எழுந்தன. நெஞ்சுவலி கூடி வருதாகவே அவர் உணர்ந்தார். 'மங்களத்துக்கு இவர் அடி நாளையிலேயே எப்படிச் சிநேகமானார்?... அவளோடு நேசத்தோடு பழகினதாய்ப் பெருமையாய்ச் சொன்னாரே!... ஒருவேளை......ஒருவேளை......மங்களத்துடன் இந்த ஆள் தவறாக...? ஊஹூம்! என் மங்களம் ரொம்ப சின்ஸியர்!...

ஆம்...அப்படித்தான் இருக்கவும் வேணும்!...நான் செய்த பாவத்துக்கும் பழிக்கும் கடவுள் இந்த ஆள் ரூபத்திலே இப்போது என்னை வஞ்சம் தீர்க்க முனைஞ்சிருக்க வேணும்!...என் மங்களம் தங்கமானவள்!...'

நினைவுகள் சிலிர்த்தன.

ஒரு தருணம், செந்தில்நாயகம் எங்கோ 'திருவிளையாடல்' புரிந்துவிட்டு வீடு திரும்பினார், விஷக்காய்ச்சலுடன். காரில் இறங்கிய மணாளனைக் கண்டதும், ஓலமிட்டுக் கதறினாள். 'தெய்வமே, என் புருஷன் உயிரை நீ எடுத்துக் கொள்ளுறதாக முடிவு செஞ்சிருந்தால், அதுக்குப் பதிலாக என் உயிரை நீ எடுத்துக்கொள்! என் கணவரைக் கொடு!...' என்று கூக்குரலிட்டாள்.

மங்களத்தின் மனோபாவத்தின் திண்மையைக் கண்டு உற்றமும் சுற்றமும் அதிசயித்தது. விஷயம் அறிந்தபின், செந்தில்நாயகம் தம் மனைவியை ஆரத்தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். "பகவான் நம் யாரையும் சோதிக்கலே! ரெண்டுபேரையுமே நல்லபடியாய்க் காப்பாத்திட்டார்!" என்று மகிழ்ந்தார். மங்களம் கிடைத்திருக்காத பட்சத்தில் அவர் என்றோ கீழ்ப்பாக்கத்தில் யாமினிப் பைத்தியமாகவல்லவா இருந்திருப்பார், பாவம்!...

அந்த மகிழ்ச்சியின் 'மாற்று' தனித்தன்மை கொண்டது. சிரிப்பின் அலைகளுடன் தம் திருமணப் படத்தை நிமிர்ந்து நோக்கினார் செந்தில்நாயகம். 'மங்களம், உனக்கு நான் சரியான 'மாட்ச்' இல்லேன்னுதான் என் அந்தராத்மா சொல்லுது!...நிஜமும் அதுதான்!...'—யாமினி தனக்குக் கிட்டாத தாபத்தின் உச்சத்தில் அலைந்த செந்தில் நாயகத்தை புனர் ஜன்மம் பெறச் செய்த புண்ணியவதி மங்களம்!...

நிமிஷங்கள் ஓடின.

கம்பெனியிலிருந்து குமாரி குயில்மொழி வந்தாள். முதலாளியின் அவசரக் கையெழுத்துக்காக வந்தாள்.

அவளைப் பார்த்தவுடன், பாவச் சுமையின் கண்டம் தப்பிய பழைய சம்பவத்தை நினைவு கூர்ந்தார். 'என்னைச் சூழ்ந்த புண்ணியம் இது ஒன்றுதானே?' என்றும் நிறைவுடன் ஆனந்தம் கொண்டார். கடைசிவரை, குமாரி குயில் மொழிக்கு, அன்றொரு தினம் தான் கொண்டிருந்த 'கெட்ட நோக்கம்' தெரியாமல் இருந்துவிட வேண்டுமே என்றும், அந்த மகேந்திரனும் மனம் மாறி இந்தப் பெண்ணிடம் எதையும் கன்னாபின்னாவென்று உளறிக் கொட்டாதிருக்க வேண்டுமேயென்றும் அவர் உள்ளூர வெகுவாகக் கவலைப் பட்டதென்னவோ உண்மைதான்!

காலையில் பலகாரம் வைத்த காசி, தனக்குத் தடுமன் முற்றிவிட்டதாகச் சொன்னான். ஆகவே, வந்த குயில் மொழி வந்த அலுவலை முடித்துக்கொண்டு கம்பெனிக்குப் புறப்பட்டபோது, ஆபீஸ் பையன் மணியைத் துணைக்கு அனுப்புமாறு பணித்தார்.

மணிப்பயல் வந்துவிட்டான்.

அவன் வருவதற்கென்றுதான் கடிகாரமும் மணி அடிக்காமல் இருந்தது.

மணி இப்போது பதினொன்று!

பொடியனிடம் 'டிகிரிக்' காப்பிக்கு உத்தரவுகொடுத் தார், 'மங்களம் அண்ட் கோவின் உடைமைக்காரர்.

ரேடியோவை 'ட்யூன்' செய்தார்.

காப்பி வந்தது. காப்பியைச் சுவைத்துக்கொண்டே மேலெழுந்தவாரியாகப் பார்வையைச் சுழலவிட்ட போது, சிறுவன் மணிக்குச் சொந்தமான கண்கள் தம்மையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டார். அவ்வாறு பார்த்த போது, மணியின் பேசும் விழிகளை பக்கவாட்டில் பார்த்த போது, அவ்விழிகள் பேசியதுடன் நில்லாமல், அவை இரண்டும் யாமினியின் உயிர்த்துடிப்பு மிக்க நயனங்கள் இரண்டையும் நினைவூட்டவும் செய்தன.

'தம்பீ, உனக்குச் சொந்த ஊர் எங்கே?'' என்று வினவினுர் அவர்.

சிவகங்கைச் சீமையாம் அவனுக்குச் சொந்த ஊர்.

படைப்பின் சூக்குமங்களை ஆராய—அல்லது சோதனை செய்ய செந்தில்நாயகம் யார்?

அவருடைய பாதங்கள் கெஞ்சின. உள்ளே போனுர் 'ரேடியோகிராம்' அவரை அழைத்தது. மசியவில்லை. தமது அந்தரங்க அறைக்குச் சென்றுர். ஓர் ஆல்பம் கிடைத்தது. எல்லாம் பேரட்டோக்கள். போதையூட்டும் படங்களை ரசிக்கும் நிலையிலா அவர் அப்பொழுது இருந்தார்? இருப்புப் பெட்டகத்தைத் திறந்தார்; பிரித்தார். சணல் போட்டுக் கட்டப்பட்டிருந்த ஒரு கட்டைப் பிரித்தார்.

எல்லாம் யாமினியிடமிருந்து செந்தில்நாயகத்துக்கு வந்த கடிதங்கள்! இந்த இருபது வருஷங்களிலே குறைந்தது இரண்டாயிரம் தடவைகள் அவரைச் செத்துச் செத்துப் பிழைக்கச் செய்துவிட்ட புண்ணியத்தை—அல்லது பாவத்தை உண்டாக்கிவிட்ட விசித்திரமான முடங்கல்கள் அவை! 'ஈஸ்வரா!' நெடுமூச்சின் இழைகள் தொடர் சேர்த்தன. அவற்றை விரலால் தீண்டவும் அஞ்சி ஒடுங்கினுர் அவர். பேயைக் கண்டு குலை நடுங்குவதை ஒப்ப அவர் நடுங்கினுர். எல்லாவற்றையும் அப்படியே அள்ளி ஒரே கொத்தாகப் பெட்டகத்தில் போட்டுவிட்டு, பையனின் குரலைக் கேட்டு ஓடிவந்தார்.

"அம்மா வந்திருக்காங்க!'' என்றுன் மணி.

"யார். மங்களமா?''

"இல்லீங்க. நம்ம அம்மா இல்லீங்க!...இவங்க யாரோ...யாமினியாம்!...''

"அப்படியா?...மாடிக்கு வழிகாட்டு!...நீ கீழேயே நில்!...'' என்று தடுமாறினுர் செந்தில்நாயகம். உச்சி முதல் உள்ளங்கால் வரை அதிர்ச்சி ஏற்பட்டது. குருதித் துடிப்பு மிகுத்தது. கொஞ்சநஞ்சம் இருந்த அமைதியும்

சந்தோஷமும் இப்போது அவரை அந்தரத்தில் நிறுத்தி விட்டு ஓடிவிட்டன. அவர் தவித்தார்.

கணங்கள் ஊர்ந்தன.

செந்தில்நாயகம் மாடிப்படிகளை எதிர்பார்த்து நின்றார்.

அதோ யாமினி!...

விழிமறுகி, ஜாடையாகப் பார்த்தார் அவர். விழிகள் கலங்கின!

அவள் வந்தாள். கைகூப்பிக்கொண்டே வந்து நின்றாள். சோகமே வடிவாகி வந்து நின்றாள். அவளது அந்த 'மஞ்சள் தாலி' அவளுடைய மார்பகத்தில் வெளிப்படையாகத் தவழ்ந்து கிடந்தது! அவள் அழகு அப்படியே இருந்தது. நெற்றிப் பொட்டு துல்லிதமாய் விளங்கியது. சுருண்ட நரை முடிகள் ஒன்றிரண்டு கன்னங்களை வருடின!...

ஆம்; அவள் யாமினி!

அவள்தான் யாமினி!

## பகுதி : பதிமூன்று

# சோழிகள் மாறின...!

'யாமினி !...'

அவளை நெஞ்சத் தூய்மையுடன் நேருக்கு நேர் பார்க்க எவ்வளவோ எத்தனம் செய்தும், முழுமையாக அவரது எண்ணம் கைகூட வில்லை. அவளை வரவேற்க மறந்ததை அப்போதுதான் ஞாபகப்படுத்திக்கொண்டார். உடனே தாழ்ந்திருந்த தலையை நிமிர்த்தி, "வா...வாங்க...யாமினி !..." என்று முகமன் மொழிந்தார். உட்காரும்படி வேண்டினார்; அவரும் உட்கார்ந்து கொண்டார். நெடுமுச்சு விட்டார் செந்தில்நாயகம்.

"யாமினி !..."என்று அழைத்தார் செந்தில்நாயகம்.

"ம் !" கொட்டினாள் யாமினி.

உடலின் தளர்ச்சிதான் குரலைச் சாடியதோ ?

அவளது பொலிவுதான் துறவுக்குப் பொருளோ ?

ரேடியோவில் பாரதியார் பாடினார்:

**"பாட்டுக் கலந்திடவே—அங்கேயொரு**
**பத்தினிப் பெண் வேண்டும்—எங்கள்**
**கூட்டுக் களியினிலே—கவிதைகள்**
**கொண்டுதர வேண்டும் !..."**

பாடலின் பரவசம் அவருள் புக, அவர் அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

அதே நிலையுடன் அவளும் தலையை உயர்த்தி அவரை நோக்கினாள்.

அவர்கள் இருவரும் காதலின் கனவுப் பாதையில் பீடு நடைபோட்டுக் கையொடு கை பிணைத்து, இதயத்துடன் இதயம் பின்னித் திரிந்த நேரத்திலே, இதே பாடலின் வரிகளை ஒரு முறை கேட்டு விட்டு, அவர்கள் இருவரும் தங்களை மறந்து எவ்வளவு மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடித் திரிந்தார்கள்! "என் பத்தினிப் பெண் நீ என் அருகில் இருக்கையிலே, எனக்கு என்ன குறைச்சல்?...பண்ணும் பாட்டும் நம் கூட்டுக் களியிலே தாளமிட்டுக் களிநடம் புரியாதா?" என்று செந்தில் சொல்ல, அவள் குறுவிழி மயக்கி, கோல நகை தளர்த்தி, எழிலார் நெஞ்சுயர்த்தி 'ஆம்' போட்ட அந்தப் பாவையை காலம் எப்படி மறக்கக் கூடுமோ?

ஆனால் இன்று...?

அவர் கடந்ததை நினைத்துக் கண்ணீர் மல்கினார்; வாய் மூடி மௌனியானார்.

அவளோ வேதனையின் வடிவில் களையிழந்தாள்; கண் சோர்ந்தாள்; வைராக்கியத்தின் உருக் கொண்டாள். அதே கணத்தில், எழுந்து ரேடியோவை நிறுத்தினாள் யாமினி. வந்து அமர்ந்தாள்.

அவளது இச் செய்கை புயலாய் அவளைச் சித்திரித்திருக்க வேண்டும்.

செந்தில் நாயகத்துக்கு அச்சம் தலைகாட்டியது. அவர் விடுத்த கணைக் கடிதங்களை அவரால் எண்ணாமல் இருக்க முடியவில்லையே!...

செந்தில் நாயகம் வாய் திறந்தார்; திருவாய் மலந்தார்:

".... இந்த இருபது வருஷமாய் நான் தேடிக்கிட்டிருந்ததுக்குப் பலன் நேத்துத்தான் கிடைச்சது. அதுக்கும்கூட, 'வேளை' அப்பத்தான் வந்திருக்க வேணும்போல!.... என்னுடைய மிருகமனம் தெளிஞ்சு வந்தப்பவே, நீங்க எங்கே இருக்கீங்க என்கிற விவரம் எனக்குத் தெரிஞ்சிருந்தால்—உங்க

கடிதங்களிலே எதிலாவது எவற்றிலேயாச்சும் உங்களுடைய விலாசமும் இருந்தால்—அப்பவே உங்க வாசலிலே வந்து நான் விழுந்திருப்பேன். உங்க புருஷனைப் பத்தின தகவலையும் அறிஞ்சு அவர் காலிலே விழுந்து, நிஜத்தையும் சொல்லி, அதன் மூலம் உங்களுக்கு 'விடிவு' உண்டாக்கிட்டு, அதன் விளைவிலே நானும் தப்பியிருக்கவும் வாய்ச்சிருக்கலாம்!.... இப்படியான மீள வாய்க்காத மனநோய்க்குப் பலியாக ஆகியிருக்கவும் மாட்டேன்!....விதி என்னை விடலே!...என்னுடை வினையை நான் அனுபவிக்கிறேன்....இது வேணும் எனக்கு!..."

செந்தில் நாயகம் அவ்வளவு பேசியதே கூடுதல். மூச்சு இரைத்தது.

பையன் கொணர்ந்த காப்பியை வாங்கித் தம் கையால் யாமினியிடம் கொடுத்தார் அவர். அவள் அதை வாங்கி ஸ்டூலில் வைத்துவிட்டாள். ஆவி பறந்தது.

"நீங்க ஆளே உருமாறிப் போய்ட்டீங்க!...இல்லே?"

"........."

"உங்க சம்சாரத்தை எங்கே காணோம்?"

"அவளுக்கும் உடம்பு சரியில்லே. இருபது வருஷம் கழிச்சு கருத் தரித்தாள்! கடைசியிலே 'அபார்ஷென்' ஆயிட்டுது!... அவள் பங்களூரிலே தன் தமையன் வீட்டிலே இருக்கிறாள்!" என்று கண்களில் நீர் சோரப் பேசிய செந்தில் நாயகம், தலை நிமிர்த்தி யாமினியைப் பார்த்தபொழுது, அவளே அவரது 'விதி'யாகத் தோன்றினாள்!

"நானும் நீங்களும் ஒரே மாதிரிதான் இருக்கிறோம் போலிருக்குது! இல்லே?..."

".........."

"மிஸ்டர் செந்தில்!"

"யாமினி!...காப்பி குடியுங்க!"

".........."

"யாமினி! ப்ளீஸ்...டேக் ஏ லிட்டில் அட்லீஸ்ட்!...என்

மனசின் ஆறுதலுக் கோசரமானும் ஒரு துளி பருகுங்க!...'' என்று பரிதாபமாக அவளைப் பார்த்துக் கெஞ்சினர்; வேண்டினர்.

யாமினி அவரை நேர்கொண்ட பார்வை பார்த்துவிட்டு பத்திரகாளிபோல வெப்பமுடன் சிரித்தாள்; பிறகு வேதனையுடன் விம்மினுள். தாலிக்கயிற்றில் சுடு சரத்திவலைகள் வழிந்தன.

யாமினி நா தழுதழுக்கப் பேசலானுள்:

''மிஸ்டர் செந்தில் நாயகம்! உங்களது ஈவிரக்கமில்லாத ஒரு செய்கையினல் என் வாழ்க்கை — வளம் — கனவு எல்லாமே சிதைந்து விட்டது போதாதா?...இன்னும் என்னுள்ளே மிஞ்சியிருப்பது இந்த எலும்புக் கூடுமட்டிலுந் தானே?...நான் உங்கள் மன ஆறுதலுக்காக உங்கள் காப்பியைச் சுவைக்க வேண்டுமா? இப்படி என்னிடம் கோர உங்களுக்கே வெட்கம் வரவில்லையா?...

''...ம்! நாம் ஒருவரையொருவர் நேசித்தோம்...மனம் விட்டுப் பழகினேம்...ஒரே நாரில் தொடுத்த மலராகவும் ஆக விழைந்தோம்...! எல்லாம் வாஸ்தவமே!...ஆனல், இதற்கிடையில், உங்களுடைய சில ரகசியத் திருவிளையாடல்களைப் பற்றி அறிய நேர்ந்த நான் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். உங்களைக் கல்யாணம் செய்துகொள்ள மறுத்தேன்!....எனக்குப் பணம் வேண்டாம்; குணம்தான் வேண்டும் என்று விரும்பினேன்!....இது தவரு?....எந்தக் குடும்பப் பெண்ணும் அப்படித்தானே நினைப்பாள்?....

''...ஆனல், நான் உங்களை ஏற்காததற்கு, நீங்கள் என் திருமணம் முடிந்த கையுடன்...ஆமாம்; என் பிராண நாதர் ஆசையுடன் — அன்புடன் என் கழுத்திலிட்ட தாலியின் மூன்று முடிச்சுக்களிலே இட்ட மஞ்சளும் சந்தனமும் காயுமுன்னே — என் வாழ்க்கையையே நீங்கள் கருக்கிச் சாம்பராக்கி விட்டீர்களே.ஐயா!...என்னுடன் தாங்கள் ஏற்கனவே ரகசியமாக உடல் தொடர்பு வைத்திருந்ததாக என் கணவருக்குக் கடிதம் எழுதிவிட்டீர்களே ஐயா?...என்மீது இப்படிப்பட்ட அபாண்டப்

பழியைச் சுமத்த உங்களுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?... இத்தகைய பொய்யைச் சொல்ல உங்கள் மனச் சாட்சி கொஞ்சமும் வெட்கப்படவில்லையா?...ஐயோ!...

"என் தூய்மையை என் மனச்சாட்சி அறியும்!—என்னைப் படைத்த தெய்வம் அறியும்!—அவை போதும் எனக்கு!

"ஆனால், என் வாழ்வு...?

"உங்கள் பொய்க் கடிதத்தைக் கிழித்து வீசிவிட்டு, என்னை நம்பி, என் பேச்சை நம்பி, என்னை ஏற்க என் கணவரல்லவா பெருந்தன்மை கொண்ட மனிதபிமானத்துடன் தயாராக இருக்க வேண்டும்?... அப்படிப்பட்ட 'உண்மை அதிசயங்கள்' எங்கே இக் கலியுகத்தில் நிகழ்கின்றன!... எப் படியோ உங்கள் மிருக வெறிப்படி நான் உங்களது ஆத்திரத் துக்குப் பலியாகிவிட்டேன். என்னைப் பழிவாங்கிவிட்டீர்கள்! இப்போதாகிலும் உங்களது மிருகவெறி அடங்கி விட்டதா?...

"...இப்போதாவது சொல்லுங்கள்...நீங்கள் என்னுடன் எப்போதாவது அந்தரங்கமான உடல் தொடர்பு கொண்ட துண்டா?...ம்...வெட்கத்தைவிட்டுக் கேட்கிறேன்... சொல்லுங் கள், மிஸ்டர் செந்தில் நாயகம்!...ம்!...மூடிக்கிடக்கும் உங்கள் நெஞ்சைத் திறந்து உண்மையைச் சொல்லுங்கள்!...ம்!"

இவ்வாறு ஒரே மூச்சில் பேசிக்கொண்டே வந்த யாமினி, விதியின் வடிவெடுத்தாள். ஊழ்வினையின் வடிவெடுத்தாள். அவள் கண்கள் காட்டேறி போலச் சிவந்தன. காப்பித் தம்ளரை எற்றிவிட்டாள். அவரது தாழ்ந்து குனிந்த தலையை நிமிர்த்தி அவரது சட்டையைப் பற்றிக் கொண்டு "ம்... சொல்லுங்கள்!" என்று வீறு கொண்டு முழக்கமிட்டாள்.

செந்தில் நாயகம் அப்படியே யாமினியின் பாதாரவிந்தங் களிலே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து விம்மினர். "யாமினி! நீ தூய்மையின் வடிவம்!...உன்னோடை பரிசுத்தத்தைப் பத்திப் பேச எனக்குத் துளிகூட அருகதை கிடையாது!...உனக்குச் செஞ்ச துரோகமே என் வினையாகி, அதனலே என் மனச் சாட்சி என்னை அணு அணுவாக நிதமும் கொன்று, நான் நிம்மதி இழந்து தவித்தேன்! விதியும் வினையும் என்னைச்

சூழ்ந்து சோதிச்சதைப் பொறுத்துக்கிட்டேன்!...ஆனால், நீ என்னைச் சோதிச்சால், நீ என்னை மன்னிக்கலேன்னு, அப்புறம் நான் எந்தத் தெய்வத்துக்கிட்டே போய் அலறுவேன்?... சொல்லு யாமினி, சொல்லு!..."

யாமினி தன் பாதங்களை எவ்வளவு முயன்றும் விலக்கிக் கொள்ளமுடியவில்லை. கடைசியில் அவள் ஒதுங்கிக் கொண்டாள். "...உங்களை மன்னிக்க நான் யார்?...உங்களை நான் மன்னித்துவிட்டால், என்னுடைய இழந்த வாழ்க்கை திரும்பிவிடுமா?....உங்களைப் படைத்தவன் பாதங்களிலே போய் விழுங்கள்! ஆனால், விதி, வினை, தெய்வம் இம்மூன்றுக்கும் நீங்கள் பதில் சொல்லாமல் தப்பவே இயலாது!... இவ்வுண்மையை மாத்திரம் மறந்துவிடாதீர்கள், மிஸ்டர் செந்தில் நாயகம்!..."

யாமினி சாரைப்பாம்பாக அங்கிருந்து நகர்ந்துவிட்டாள்.

எழுந்தார் செந்தில் நாயகம்.

அப்பொழுது, அங்கே செந்தில் நாயகத்தின் துணைவி மங்களமும், அன்றொரு தினம் அவளைத் தேடிவந்த மோகன சுந்தரமும் தோன்றினார்கள். இதுவரை ஒளிந்து நின்றார்களோ?...

"அத்தான்!"

மங்களம் உணர்ச்சிப் பெருக்குடன் கூப்பிட்டாள்.

செந்தில் நாயகம் திரும்பினார். அவரது உதடுகள் சிரிக்கப் பாடுபட்டன.

மங்களம் தன் கணவரை அண்டினாள். "அத்தான், இவர் என்னுடைய பழைய சிநேகிதர். ஒருகாலத்திலே நானும் இவரும் உயிருக்குயிராய்க் காதலிச்சோம்!...ஆனா, விதி ஆடிய தாயவிளையாட்டிலே சோழிகள் மாறி விழுந்திடுச்சு!... என் மனசு திடீர்னு மாறி, நான் இவரைக் கல்யாணம் கட்டிக்க மட்டேன்னு சொல்லிப்பிட்டேன்!...அப்படியிருந்தும், அவர் வரை மனிதத் தன்மையோட அவர் நடந்துக்கிட்டார்!... இந்தாங்க...நீங்க இவருக்கு இருபது வருஷத்துக்கு முந்தி எழுதின லெட்டர் இது!...இது உங்ககிட்டவேதான் இருக்க

வேணும்!...இதைக் கொடுத்திட்டுப்போகத்தான் என்னைத் தேடியிருக்கார்!...ஊம்!...." என்று முடித்தாள்.

கடிதத்தை வாங்கிப் பார்த்தார், செந்தில் நாயகம். அவர் கைகள் படபடத்தன. பழுப்புத் தட்டிப்போன காகிதத்தாள் ஆடியது. 'யாமினியைப் பற்றி அபவாதம் சொல்லி அவள் கணவருக்கு எழுதிய கடிதமல்லவா இது? அப்படியானால், இவர்தான்...யாமினியின் கணவரா? ...'

ஜெயஸ்தம்பம் போன்று நின்ற மோகன சுந்தரத்தை, குற்றவாளியின் நிலையில் அச்சத்துடன் நெருங்கினார் செந்தில் நாயகம். "உங்க மனைவி யாமினி பரிசுத்தமானவுங்க!... அவுங்க என்னைக் கல்யாணம் செய்துக்க மாட்டேன்னு சொன்னதாலே ஏற்பட்ட ஏமாற்றத்திலே நான் மிருகவெறி கொண்டு யாமினிமீது அவதூறு கற்பிச்சு உங்களுக்கு ஏதோ தப்பாய் எழுதிப்பிட்டேன்!...எல்லாம் சுத்தப் பொய்! உங்க யாமினி ரொம்ப தூய்மையானவுங்க....! என்னை நம்புங்க ஸார்!...யாமினியை நீங்க மறுபடியும் ஏற்றுக்கிடுங்க ஸார்! அப்பதான் எனக்கு ஆறுதல் கிடைக்கும்! அப்பதான் நானும் ஒரு மனிதனாக உயிர் தரிச்சிருக்க முடியும், மிஸ்டர் மோகன சுந்தரம்!..." அவரது கைகள் இரண்டையும் பற்றிக்கொண்டு கெஞ்சினார் செந்தில் நாயகம். தம் கைகள் இரண்டையும் ஒரு சேரக் கூப்பிக் கெஞ்சினார்; அழுதார்.

மோகன சுந்தரம் நகைத்தார்!

அவர்தான் நகைத்தாரா?

இல்லை, விதிதான் நகைத்ததோ?...

"மிஸ்டர் செந்தில் நாயகம்! என்னோட மனைவியின் கற்பு நெறிக்கு நீங்களா சாட்சி சொல்லுறீங்க? ரொம்ப வேடிக்கை தான்!...வேடிக்கையான டிராமாவாகத்தான் இருக்குது!..." என்று அதிர்ந்த தொனியில் பேசிவிட்டு நகர்ந்தார். "மனிதர்கள் பூசைக்குரிய தேவர்களாக உருமாற வேண்டாம்!... போற்றுதலுக்குரிய மனிதர்களாக ஆகவும் வேண்டாம்!..

ஆனல், கடைசிப்பட்சமாக, கேவலமான-பயங்கர மிருகங்களாகவாவது மாருமல் இருக்க வேண்டாமா?....இப்படிப்பட்ட தீவினைகள் நிகழ்வதைப் பார்க்கையில், வயிறு எரிகிறதே! சே! என்ன வாழ்க்கை!...என்ன மனிதர்கள்!...ம்!... தெய்வமே!......" என்று வேதனை மூளச் செப்பிவிட்டு, கைந்நொடிப்போதில், புயலாய் மறைந்தார் மோகனசுந்தரம்!

நலிந்த மங்களம் வாய்விட்டுப் புலம்பினுள்: "ஐயோ... நான் பாவி!...."

மோகனசுந்தரத்தை நிழலாய்ப் பின்பற்றிய செந்தில் நாயகம், மாடிப்படிகளை விசையுடன் தாண்டிய பொழுது, கால்கள் வேஷ்டிக் கரையில் சிக்கித் தடுக்கி விழுந்து விட்டார்.

படிகள் அவரை—செந்தில்நாயகத்தை உருட்டி விளையாடின.

ரத்தத்துளிகள் அவரை—செந்தில்நாயகத்தைக் குளிப்பாட்டி விளையாடின.

மங்களம் கண்ணீருடன் விளையாடிக் கொண்டிருந்தாள்...!

★ ★ ★

புயல் திரும்பிப் பார்க்குமா, என்ன ?

"அத்தான், புறப்படலாமா இனி ?"

"போகலாம், யாமினி !"

"ஓ...கே !"

"யாமினி ! மனிதாபிமானத்துக்கு—மனித தருமத்துக்கு—மானுட வெளிச்சத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய நம் கடமையைப் பண்போடு செஞ்சு முடிச்சிட்டதாவே எனக்குத் தோணுது !...உன் பாடம் மிஸ்டர் செந்தில்நாயகத்தை இதயமுள்ள ஒரு மனிதராக ஆக்கிட முடியும்னுதான் நான் எதிர்பார்க்கிறேன் !..."

''எஸ்!...எனக்கும் அவ்விதமாகத்தான் தோணுதுங்க!... ஆனல், மங்களம்...பாவம்...அனுதாபத்துக்குரிய சகோதரி அவள்!...''

''எஸ்...இன்டீட்!...''

''அத்தான்! அதோ டாக்ஸீ...கைதட்டிக் கூப்பிடுங்க!... நம்ம குழந்தைகள் இந்நேரம் ஒரு பாட்டம் அழுது தீர்த்திருக்கும்!...நம்ம மணிப்பயல் ரொம்ப நல்லபடியாய் நடந்திட்டான்! அவனுக்கு 'மங்கள விலாஸம் நாடகம்' ஒரே கூத்தாத்தான் தோணும்! தன்னேட கடைக்குட்டித் தங்கச்சின்ஞெ, அவனுக்குக் கொள்ளைப் பிரியம்...அவன்தான் கீழ்ப்பாக்கத்துக்கு டாக்ஸிபிடிச்சிட்டுப் போகும்படி அவசரப்படுத்தினுக்கும்!...இதோ டாக்ஸி!... கதவைத் திறங்கள், அத்தான்!''

''உத்தரவு, டியர்!''

சிரிப்பின் அலைகள் குறும்புத்தனமாகவும் விநயமாகவும் விளையாடின!...

பகல் செய்வோன் இறங்கு முகம் காட்டலானுன்!

வினை, விதி, தெய்வம் ஆகிய மூன்று சக்திகளும் ஒன்ருேடொன்று பின்னி, ஒன்றில் ஒன்ருகி அடங்கி, ஒன்றிற்கு ஒன்று உயிராய் உணர்ந்து விளையாடிச் சிரித்து மகிழ்ந்துகொண்டிருந்தன—சூன்யத்தின் அண்டப் பெரு வெளியிலே!...

**நிறைவு.**